மார்கழி - 2014
பக்கங்கள் 24

ரூ.30.00

இது
# நம்தேசம்

'Registered in the department of posts of Sri Lanka under No.QD/173/News/2014'

பார்வை 01 வியூகம் 23

www.ithunamthesam.com
ithunamthesam@gmail.com



# காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்

## உள்ளே...


6 ஜனாதிபதித் தேர்தல் தமிழ்மக்கள் என்ன செய்ய வேண்டும்

8 கூட்டமைப்பு ஒரு வேட்பாளரை நிறுத்தவேண்டும்

14 தடுமாறும் மலையகக் கட்சிகள்

15 அதிகாரிகளின் ஊழல் மோசடி

# மோடியின் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைகின்றதா?



நரேந்திரமோடி ஆட்சிக்கு வந்ததும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைப் புதுப்பித்தார். அயல் நாடுகளுடன் சுமூகமான உறவுகளைப் பேணுவதற்கு முன்னுரிமை கொடுத்தார். தனது பதவியேற்பு விழாவிற்கு முரண்பாடுகளுடன் இருந்த அயல் நாட்டு தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்து அசத்தினார். அவருடைய துரித அபிவிருத்திகளுக்கும் அதற்கான வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அயல் நாடுகளுடனான நல்லுறவு அவசியமாக இருந்தது.

ஆனால் அவரது முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. நீண்டநாள் முரண்பாட்டை ஒருசில செயற்பாடுகளுடன் தீர்த்து விடலாம் என நினைப்பது கடினம். எனினும் நல்லுறவுப் பாதையை நோக்கி ஒரு சிறு அடிகள் கூட அவரது முயற்சிகள் நகரவில்லை. முரண்பாட்டின் பாரதூரமான தன்மையை அவர் போதுமானவளவு விளங்கிக்கொள்ளவில்லை போலவே தெரிகின்றது.

இலங்கை தொடர்பான உறவில் இனப்பிரச்சினையின் கனதியை உணராது செயற்பட்டதன் விளைவாகவே தோல்வி ஏற்பட்டிருக்கின்றது. பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கலந்து கொண்ட போது அவருடன் பெரியண்ணன் பாணியில் நடந்துகொண்டார். வாக்குறுதி அளித்தவற்றை உடனடியாக நிறைவேற்று! என எச்சரிக்கை விடுத்தார்.

மகிந்தர் இந்த எச்சரிக்கையை பெருமளவிற்கு கணக்கெடுக்கவில்லை. சீனாவுடனான உறவு தந்த துணிவு இதற்குக் காரணமாக இருக்கலாம். கணக்கெடுப்பு இருந்தாலும் கூட நடைமுறையில் அவரால் எதுவும் செய்திருக்க முடியாது. அவர் தற்போது பேரினவாதத்தின் கைதி மட்டுமல்ல சீனாவின் கைதியும்தான். அவர் விரும்பினாலும் பேரினவாதத்தை மீறமுடியாது. இலங்கையில் சீனாவின் செல்வாக்கினை குறைக்கவும் முடியாது.

மகிந்தரை சமாதானப்படுத்த சுப்பிரமணியசுவாமியை அனுப்பியும் நிலமை முன்னேறவில்லை. மீண்டும் அதட்டும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேசுதல், விக்கினேஸ்வரன் தான் விரும்பியதை இந்திய மண்ணில்


(19 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் தோல்வியைத் தழுவிய சார்க் மாநாடு

சார்க் எனப்படும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு 18வது மாநாட்டினை நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் நவம்பர் 26,27ம் திகதிகளில் நடாத்தியுள்ளது. இந்தியா, இலங்கை , பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு நாடுகளின் தலைவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். வழமை போன்று நாடுகளின் தலைவர்களது உல்லாசப்பயண சந்திப்பாகவே இந்த மாநாடும் அமைந்திருந்தது. மாநாட்டில் ஒழுங்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதில்லை. நிறைவேற்றியவையும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்பதே வரலாறு.

இந்தத் தடவை இலங்கை-இந்தியா முரண்பாடு, இந்திய-பாகிஸ்தான் முரண்பாடு என்பன வளர்ச்சி கண்டிருந்த ஒரு சூழலிலேயே மாநாடு இடம்பெற்றிருக்கின்றது. சீனாவின் இந்தியாவை சுற்றி வளைக்கும் வியூகமும் இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அதற்கு ஒத்துழைப்பு வளங்குவதும் இந்தியாவை நன்றாகவே கடுப்பேற்றியிருக்கின்றது. அதுவும் இந்தத் தடைவ பாகிஸ்தான் ஊடாக சீனா சார்க் அமைப்பில் சேருவதற்கு முயற்சித்தமை கடுப்பின் உச்சம் எனலாம் பாகிஸ்தான் பிரதமருடன் கை குலுக்கக் கூட இந்தியா பிரதமர் நரேந்திரமோடி முன்வரவில்லை. என செய்திகள் வருகின்றன.

சமாதானத்திற்கும் சுபீட்சத்திற்குமான வலுவான ஒருமைப்பாடு என்பதே 18வது



மாநாட்டின் கருப்பொருள் இதன் அடிப்படையில் உறுப்பு நாடுகள் மத்தியில் ஒருமைப்பாடு,தொடர்பாடல் ஒத்துழைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு என்பன பற்றி மாநாட்டில் பேசப்பட்டன. இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சக்தி ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பாகிஸ்தான் புகையிரத பாதை,மோட்டார் வாகனங்கள் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு மறுத்திருந்தது இந்தியாவின் ஆதிக்கம் சார்க் நாடுகளில் வளர்ந்து விடும் என்ற அச்சம் தான் இதற்கு காரணம்.

இருதரப்பு பிரச்சினைகள் சார்க் மாநாட்டில் பேசக்கூடாது என்றே சார்க் ஒழுங்கு விதி குறிப்பிடுகின்றது. ஆனாலும் உத்தியோக பூர்வமற்ற வகையில் சம்மந்தப்பட்ட தலைவர்கள் சந்தித்து இருதரப்பு பிரச்சினைகளை பேசுவது வழக்கமாகும் குறிப்பாக இந்தியா-இலங்கைத் தலைவர்களும், இந்தியா-பாகிஸ்தான் தலைவர்களும் சந்தித்து பேசுவது வழக்கம் இந்த

(23 ஆம் பக்கம் பார்க்க)

# மீரியபெத்தயில் உறவுகளை மண் விழுங்கியது உரிமைக்காய் மண் விழித்தது.

மலையகத் தமிழராகிய நாம் கடந்த இருநூறு வருடங்களாக உடல், உயிர் தியாகங்களை புரிந்து மலையக தேசத்தை உருவாக்கினோம். நாட்டின் பொருளாதாரத்திற்கும், அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் முதுகெலும்பாய் திகழ்ந்தும் "மனித பெறுமதியற்றவர்களாகவே வாழ்விற்கு போராடும் மக்கள் சமூகமானோம். கொஸ்லந்த- மீரியபெத்த அனர்த்தம் மற்றும் உயிரிழப்பு நாம் அடிப்படை உரிமைகள் இன்றி அனாதைகளாகவும் பலருக்கு அடிமைகளாக வாழ்கின்றோம் என்பதை உலகிற்கு உணர்த்தி உள்ளது என மலையக சமூக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்களாகிய நாம் இந்நாட்டின் குடிமக்கள். அரசியல் யாப்பில் குறிப்பிடும் சமத்துவ வாழ்வு, அடிப்படை உரிமைகள் இன்னும் எமக்கு அந்நியமாகவே உள்ளன. இது ஏன்?

- ஆட்சியாளர்களுக்கு எமது இரத்த வியர்வையால் வெளிநாட்டு வருமானம் கிடைத்தால் போதும்.
- அரசியல்வாதிகளுக்கு சொகுசான ஆட்சிக் கதிரையில் அமர எமது வாக்குகள் மட்டும் கிடைத்தால் போதும்.
- முதலாளிகளின் தொழிற்சங்கத்திற்கு எமது மாதாந்த சந்தா கிடைத்தால் மட்டும் போதும்.
- பொது சனங்களுக்கு அவர்களின் களைப்பு நீங்க தேயிலை தூள் கிடைத்தால் போதும்.
- முதலாளித்துவ அரசியல், தொழிற்சங்க, சமயவாதிகளுக்கு நாம் பிரிந்து நின்று மோதிக் கொண்டால் போதும்.

மீரியபெத்தயில் எம் இரத்த உறவுகளை மண் விழுங்கியது. ஆனால் மலையக தொழிலாளர் வர்க்கமாக நாம் விழித்தோம். 150 வருடகாலமாக "லயன்" எனும் தற்காலிக தொடர் கொட்டகையில் அடைபட்டு வாழ்விற்காக ஏங்கியது போதும்.

**அரசியல்வாதிகளே....**

- பாதிக்கப்பட்ட மக்களை உங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஏனைய அரசியல்வாதிகளுக்கு சேறு பூசும் கருவி ஆக்காதீர்.
- பாதிக்கப்பட்ட மக்களையும், வாழ்விற்காக போராடும் மக்களையும் அரசியல் இலாபங்களுக்காக விளம்பரப் பொருளாக்காதீர்.
- இந்த நூற்றாண்டிலும் உங்களை நீங்களே பெரிய கங்காணிகளாக நினைத்து தொழிலாளர் வர்க்கத்தை அடக்கி ஆழ நினைக்காதீர்.
- தனி வீடு, சொந்த காணி கோரிக்கையை ஏழு பேர்ச், பத்து பேர்ச் என கொச்சைப் படுத்தி மலையக சமூகத்தை அடிமை நிலைக்கு தள்ளாதே.
- அரசின் இனவாத, மதவாத, தொழிலாளர் வர்க்க பிரிவுவாத சக்திகளுக்கு பயந்து மலையகத்தை இருளுக்குள் தள்ளாதே.
- சுகபோக வாழ்விற்காக தொழிலாளர் வர்க்கத்தை அடமானம் வைத்து குளிர் காய நினைக்காதே.

**அரசே...**

- 2013 இல் அறிவித்த ஐம்பதாயிரம் வீட்டுத் திட்டம் எங்கே?
- மாகாண, மாவட்ட, பிரதேச, தோட்ட ரீதியாக வீடுகள் கட்டப்படுமா?
- தொழிலாளர்களின் 180,000 வீட்டுத் தேவையை நிறைவேற்ற எத்தனை ஆண்டுகள் தேவை? இதற்கென தனி அமைச்சு உருவாக்கப்படுமா?
- கட்டுமானப் பணிகளில் ஈடுபடப் போவது யார்?

(23 ஆம் பக்கம் பார்க்க)

# எஸ் பொ. தமிழ் மக்கள் மத்தியில் வாழும் ஒரு இலக்கியவாதி


எஸ்.பொ. என அழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை, அவுஸ்ரேலியாவின் சிட்னிநகரில் தனது 82வயதில் காலமானார். அவர் மறைந்தாலும் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இலக்கியவாதி, நாவல், சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என பல தடங்களில் ஆழமாகக் கால் பதித்தவர்.

1932ம் ஆண்டு யூன் மாதம் 04ம் திகதி நல்லூரில் பிறந்த எஸ். போ.திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் பள்ளிப் படிப்பையும்,சென்னை கிறிஸ்தவக்கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் உயர் கல்வியையும் மேற்கொண்டவர். இலங்கைப் பாடவிதான சபை, இலங்கை திரைப்படக் கூட்டுத் தாபனம் என்பவற்றில் சிலகாலம் பணியாற்றிய எஸ்.பொ. பின்னர் ஆசிரியராகவும், அதிபராகவும் மட்டக்களப்பில் பணியாற்றினார். தனதுவாழ்க்கைத் துணையையும் அங்கேயே தேடிக்கொண்டார். தொடர்ந்து நைஜீரியா ஆகிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றிய தோடு தனது ஒய்வுக்காலத்தில் அவுஸ்ரேலிய சிட்னி நகரில் வசித்தார்.

சென்னையில் "மித்ரா"பதிப்பகத்தின் மூலம் நூல் வெளியீடுகளில் ஈடுபட்ட தோடு அவுஸ்திரேலியாவில் "அக்கினிக் குஞ்சு" என்றபெயரில் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிட்டார். இளமைக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளராக இருந்த இவர் பின்னர் அவர்களுடன் முரண்பட்டு தனித்துவமாகச் செயற்பட்டார். கம்யூனிஸ்ட்கட்சிக்கு சார்பாக உருவாக்கப்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு எதிராக நற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒன்றினையும் உருவாக்கினார்.

இவரது நூல்களில் சடங்கு என்ற நாவலும், தீ என்ற நாவலும் மிகவும் பிரசித்திபெற்றது. அவருக்கேயுரியமொழி, அங்கதம். வாழ்வியல் கூறு, யாழ்ப்பாண பேச்சு வழக்கு அந்த நாவல்களில் இடம் பெற்றன. சுமார் 2000 பக்கங்களில் "வரலாற்றில் வாழ்தல்" என்ற சுயசரிதை நூலையும் எழுதியிருந்தார்.

சர்ச்சைக்குரிய எழுத்தாளராக வாழ்நாள் முழுவதும் பேசப்பட்ட எஸ்.பொ



இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்திலும் கவனிப்புக்கு உரியவராக இருந்தார். ஒய்வுக் காலத்தினை தமிழகத்திலும் நீண்டகாலம் செலவிட்டார்.

எஸ்.பொ.விற்கு ஆழ்ந்த அஞ்சலியினை" இது நம்தேசம்" தெரிவிக்கின்றது.

# காடலோனியா தரும் பாடம் என்ன?



காடலோனியா ஸ்பெயின் நாட்டின் சுயாட்சிப் பிராந்தியமாகும். அப்பிராந்தியத்தின் ஜனாதிபதி ஆர்தர்மாஸ் காடலோனியா மக்கள் தனி நாடாகப் பிரித்துக் கொள்வதற்கான சர்வஜன வாக்கெடுப்பிற்கு ஏற்பாடு செய்தார். நவம்பர் 9ம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் ஸ்பெயின் அரசாங்கம் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுவைத் தொடர்ந்து வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. இதனால் காடலோனியா ஜனாதிபதி அதே தினம் உத்தியோகபூர்வமற்ற வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தார். காடலோனியா தனிநாடாக வர வேண்டுமென்று நீங்கள் விரும்புகின்றீர்களா? என்ற கேள்வி மக்களிடம் கேட்கப்பட்டது. 80.7 வீதமானமக்கள் "ஆம்" என வாக்களித்துள்ளனர். ஸ்பெயின் அரசாங்கம் இந்த சர்வஜன வாக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.

"நாம் புவியியல் அமைப்பினால் வரலாற்றினால் , கலாச்சாரத்தினால் பிணைக்கப்பட்டவர்கள் காடலோனியர்களாக நாம் ஐரோப்பிய ஒன்றிய கட்டமைப்புக்குள் எம்மை நாமே ஆட்சி செய்ய விரும்புகின்றோம் ஸ்பெயினுடன் எதிரிகளாக அல்லாது நண்பர்களாக இருக்க விரும்புகின்றோம்" என காடலோனியா ஜனாதிபதி ஆர்தர்மாஸ் தெரிவித்தார்.

காடலோனியா மக்களைப் பொறுத்த வரை ஸ்பெயின் அரசிலிருந்து பிரிந்து செல்ல விரும்புகின்றார்களே ஒழிய ஐரோப்பிய யூனியன் கட்டமைப்பிலிருந்து பிரிந்து போக விரும்பவில்லை. ஐரோப்பிய யூனியன் கட்டமைப்புக்கள் ஒரு சுதந்திர அரசாக இருக்க விரும்புகின்றனர். தமக்காகவும், தமது பிள்ளைகளுக்காகவும் சொந்த ஆட்சி முறை தேவை எனக் கூறுகின்றனர்.

ஸ்பெயின் அரசிடமிருந்து தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததால் சர்வதேச சமூகத்திடம் காடலோனியா மக்கள் ஒத்துழைப்புக் கேட்கின்றனர். ஸ்பெயின் ஐரோப்பிய யூனியனில் ஒரு நாடாக இருப்பதனால் அதுவே இதற்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும் ஆனால் அந்த அழுத்தத்தை அது கொடுக்கும் என நிச்சயப்படுத்திக் கூற முடியாது.

தமிழ் மக்கள் சிறிலங்கா அரசாங்கத்திடமிருந்து நீதி கிடைக்காததினால் சர்வதேச சமூகத்தை அணுகினார்களோ அதே போல காடலோனியா மக்களும் அணுக முற்படுகின்றனர். சர்வதேச சக்திகள் தமது நலன்களுக்கேற்பவே செயற்படும். புவியியல் ரீதியாக தமக்கு நலன்கள் இருந்தால்தான் அக்கறைப் படும். கொள்கைகள் எல்லாம் அதற்கு இரண்டாம் பட்சமானவை.

இது தான் தமிழ் மக்களுக்கு சர்வதேசம் தந்த பாடம். காடலோனியா மக்களுக்கும் அந்தப் பாடம் தான் கிடைக்கப் போகின்றதா?

# மாவீரர்தினம்! கெடுபிடிக்குள் குடாநாடு



மாவீரர் நினைவு நாளையொட்டி இந்த வருடமும் குடாநாடு முழுவதும் கெடுபிடிக்குள்ளானது. ஆலயங்களில் தீபமேற்றுவதும், மணி ஒலிப்பதும் தடுக்கப்பட்டது. யாழ்.பல்கலைக் கழக சுற்று வட்டாரம் முழுவதும் இராணுவக் கண்காணிப்பில் இருந்தது. வீதிகளில் இராணுவத்தினரின் சைக்கிள் ரோந்து இடம் பெற்றது. இவ்வளவு கெடுபிடிக்கு மத்தியிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தீபமேற்றினர். மக்களில் பலர் வீடுகளில் தீபமேற்றி அஞ்சலி செலுத்தியதோடு முதல் நாள் 26ம் திகதி பிரபாகரனின் பிறந்த தினத்தன்று ஞாபகார்த்தமாக மரம் நாட்டுவதிலும் ஈடுபட்டனர்.

அரசுடனான போரில் மரணமடைந்த சங்கர் ஞாபகார்த்தமாகவே நவம்பர் 27ம் திகதி மாவீரர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. புலிகள் செயற்பட்ட காலத்தில் வட-கிழக்கு எங்கும் உணர்வுபூர்வமாக அத் தினம் அனுஷ்டிப்பது வழக்கமாகும்.

ஆயுதப் போர் முடிவிற்கு பின்னர் தாயகத்தில் அனுஷ்டிப்பதற்கு படையினர் கெடுபிடிகளை ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் புலம்பெயர் நாடுகளிலும், தமிழகத்திலும் தற்போது உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தமிழ் மக்களுக்கு முழு உரிமையும் இருக்கின்றது. உயிரிழந்தவர்கள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக உயிர் நீத்தவர்கள் என்ற வகையிலும் அவர்கள் தமிழ்மக்களின் புதல்வர்கள் என்ற வகையிலும் இந்த உரிமை உண்டு. உயிரிழந்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை நினைவு கூருவதற்கு சர்வதேச சட்டம் இடமளிக்கின்றது. தென் இலங்கையின் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்து உயிர்நீத்த ஜே.வி.பியினரை நினைவு கூருவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

உண்மையில் இந்த உரிமை மறுப்பினை தட்டிக்கேட்க வேண்டியவர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர். ஆனால் சம்பந்தன் தலைமை வாய்திறப்பதற்கே தயாராகவில்லை. உணர்வு வளர்ந்து விடும் என்ற அச்சம் அரசினைப்போல சம்பந்தன் தலைமைக்கும் இருப்பது போலத் தெரிகின்றது.

இந்த ஆண்டு புலம் பெயர் நாடுகளில் மிகவும் எழுச்சியுடன் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. கனடா ரொறொண்டோவில் இளையோர் அமைப்பினர் இதனை ஒழுங்கு செய்தனர். கனடா பாராளுமன்றத்தின் தமிழ் உறுப்பினர் ஆற்றிய உரையில் அவர் தனது உரையில் "தங்களுடைய வாழ்க்கையை பிறருக்காக அரப்பணித்தவர்களை நினைவு கூருவதால் வாழ்வியலின் அழகை வெளிக்கொணரும் மாதமாக நவம்பர் மாதம் திகழ்கின்றது எனக்கூறினார்.

அவுஸ்ரேலியா சிட்னி நகரில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினத்தில் தெற்கு அவுஸ்ரேலியா வெல்ஸ் அதிகார சபையின் செனட்டர் லீரியானாஸ் கலந்து கொண்டார்.அவர் உரையாற்றும் போது தமிழர்களை பொறுத்தவரை நவம்பர் 27 என்பது ஆழ்ந்த கவலையோடும் மீளாத்துயருடனும் கடந்த 26 வருட ஆயுதப்போராட்டத்தில் கொல்லப்பட்ட ஆயிரக்காணக்கான தமது உறவுகளை நினைவு கூறும் தினம் என்றார். தமிழர்கள் நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் காத்திருக்கின்றனர். அதனை உலகம்

(19 ஆம் பக்கம் பார்க்க)

# மலையக மக்களின் போராட்டத்தில் இணைந்து கொள்வது தமிழக மக்களின் கடமை.

-இளந்தமிழக இயக்கம்-

மலையக மக்களின் போராட்டத்தில் இணைந்து கொள்வது தமிழக மக்களின் கடமை என இளந்தமிழக இயக்கம் தெரிவித்துள்ளது. "மலையகத் தமிழர்! பறிக்கப்பட்ட உரிமைகளும் பேசப்படாத வரலாறும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற அரங்கக் கூட்டத்தை ஒட்டியே இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அக்டோபர் மாதம் 29 அன்று இலங்கையின் ஊவாமாகாணத்தில் உள்ள பதுளை மாவட்டத்தில் மீரியபெத்த பகுதியில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் மலையகத் தமிழர்கள் 200 பேருக்கு மேல் மண்ணில் புதைந்து உயிரிழந்துள்ளனர். தொடக்கத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவத்தினர் பின்னர் புதையுண்டிருக்கும் மக்களை முழுமையாக மீட்க வேகம் காட்டாமல் மீட்புப் பணிகளைக் கைவிட்டனர்.

நிலச்சரிவில் புதைந்ததில் தங்கள் குடும்ப உறுப்பினர்களைப் பலர் இழந்துள்ளனர். மேலும் பலர் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை இழந்துள்ளனர். பாதிப்பிற்குள்ளான அனைவரும் இப்பொழுது இடைக்கால முகாம்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஏறக்குறைய 180 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் இருந்து ஆங்கிலேயர்களால் தேயிலைத் தோட்ட கூலித் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்ட இலட்சக்கணக்கான தமிழகமக்கள் வரலாறு முழுவதும் தங்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தவர்களின் வரும் தேயிலை ஏற்றுமதி தொழிலுக்கு இரண்டு நூற்றாண்டுகளாக தங்கள் இரத்தம் சிந்தி வளம் சேர்த்து வரும் மலையகத் தமிழர்கள் இலங்கை அரசால் குடியுரிமைப் பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு, நாடுகடத்தல் என தொடர்ந்தும் உரிமைகள் பறிக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்று அழைக்கப்படும் இவர்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்தாமல் 1964ம் ஆண்டு சிறீமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது இந்திய அரசு. இந்தியாவும் இலங்கையும் ஆடுமாடுகளைப் பிரிப்பது போல் மலையகத் தமிழர்களைப் பிரித்துக் கொண்டனர்.

அன்று முதல் பல காலகட்டங்களில் மலையகத் தமிழர்கள் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் மாறி மாறி நாடு கடத்தப்படும் கொடுமைக்குள்ளானார்கள். இந்த ஒப்பந்தம் போடப்பட்டு 50 ஆண்டுகாலம் கடந்து விட்ட பிறகும் மலையகத்திலிருந்து தமிழகத்திற்கு திரும்பியமக்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் முழுமையான மாற்றுத் தொழில் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமல் தங்கள் வாழ்நிலையை மேம்படுத்தப் போராடிவருகின்றனர்.

இலங்கையிலும் இந்தியாவிலும் தங்களின் அடிப்படை உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வரும் மலையகத் தமிழர்கள் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு காலந்தோறும் துணை நின்று வருகின்றனர். 1961 ஆம் ஆண்டு சிங்களபௌத்த இனவெறி இலங்கை அரசுக்கு எதிராக தந்தை செல்வா தலைமையில் ஈழத் தமிழர்கள் முன்னெடுத்த சத்யாக்கிரகப் போராட்டத்திற்கு ஆதரவாக வேலை நிறுத்தத்தில் மலையகத் தமிழர்கள் ஈடுபட்டனர். பிற்காலத்தில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்திலும் மலையகத்தமிழர் கள் கணிசமான எண்ணிக்கையில் தங்களை இணைத்துக் கொண்டனர். இன் றும் மலையத் தமிழர் குடும்பங்கள் பல மாவீரர் குடும்பங்களாக வாழ்ந்து வரு வதும் குறிப்பிடத்தக்கது.



இவர்களின் போராட்டம் தமிழ் நாட்டு மக்களின் உரிய கவனத்தைப் பெறாமல் போனதற்கான காரணங்கள் கூட விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவர்களில் ஆகப் பெரும்பான்மையினர் சமூக நிலையில் தலித் மக்களாகவும் வர்க்க நிலையில் தேயிலை தோட்டத் தொழிலாளர்களாகவும் இருப்பதுதான் காரணமா? தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகிய கோட்பாடுகளை புதைகுழியில் போட்டுப் புதைக்கும் தெற்காசியாவின் அரசியல் கலாச்சாரத்தின் முன்பு, சுமார் 180 ஆண்டுகள் அம் மண்ணில் இருந்து பாடுபடுபவர்களை தமிழ்த் தேசிய சிறுபான்மையினர் என்று இலங்கை அரசு அங்கீகரிக்க மறுப்பதொன்றும் வியப்புக்குரியதல்ல. ஒடுக்கப்பட்டுள்ள தேசிய இனங்களிடம் கூட இந்த மனப்பாங்கு இல்லாமல்தான் இருக்கின்றது.

சிங்களப் பேரினவாத இலங்கை அரசின் அடக்கு முறைக்குள் வாழும் மலையகத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாற்றைத் தெரிந்து கொள்வதும், தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் அவர்களோடு இணைந்து கொள்வதும் நமது கடமையாகும்.



# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

வார்த்தைக்கு ஒரு தடவை ஆளுநரை மாத்திவிடுங்கோ என்று வடமாகாண அமைச்சர்கள் ஊடகங்களுக்கு முன்னால கத்தி மக்களுக்கு மாயாஜாலம் காட்டுகினம். மற்றப்பக்கம் தங்களின்ர சொந்த தேவையளிற்கு உள்ளால அலுவல் பாக்கிறதும் இருட்டினாப்பிறகு அவரைப்போய் சந்திக்கின்றதுமான இரட்டை வேடம் ஆடிக்கொண்டுதான் இருக்கினம். வெளியால நான் சுத்த சைவமெண்டு நிமிடத்திற்கொருக்கா சொல்லிக்கொள்கினம். உந்த இரட்டை வேடத்தை தான் அவனவன் போட்டுக்கிழிக்கிறாங்கள். இணக்க அரசியல் (அடிபணிவு) தேவையெண்டால் மஹிந்தவிற்கு அப்பவே புள்ளடியை சனம் குத்தியிருக்குங்கள் பாருங்கோ. உவை நினைக்கினம் மக்கள் மாகாண சபைக்கு பெருவாரியாக வாக்களிச்ச படியால் அதை ஏற்றுக் கொண்டுதான் வாக்களிச்சதுகள் என்று. ஆனால் சனம் விபரமாக தெளிவா அதில ஒண்டும் இல்லை என்று தெரிஞ்சு கொண்டு, இயக்கம் உருவாக்கின கூட்டமைப்பு தோற்கக் கூடாதெண்டுதான் உவைக்கு வாக்களிச்சதுகள்.

யாழ்ப்பாணத்தில நடந்த ஐஸ்கிறீம் கடைகாரர்களது ஆர்ப்பாட்ட ஐடியாவை தியேட்டர்காரர்தான் சொன்னதாம். சீல் வைச்ச தொழிற்சாலையளை திறந்து வையுங்கோ என்று கேட்டுப் போனால் அதை செய்யலாம் வடமாகாணசபைக்கு எதிராக ஒரு ஆர்ப்பாட்டம் செய்துபோட்டு வாங்கோவெண்டு சொன்னவையாம். அதிலயும் கூட்டமைப்பின்ர எம்பியின்ர பேப்பர் முன்னால செய்தால் போனஸாம். எண்டும் சொன்னவையாம்.

எல்லாம் முடிஞ்சிடுச்சிது என்று சொல்லிக்கொண்டாலும் போன வாரமும் மாவீரர் தினம் பற்றி பலாலியில அடிக்கடி கூடி ஆராய்ந்த வையாம். எப்பிடி இறுக்கிப்பிடிச்சாலும் விளக்கேத்துறாங்கள். மணி அடிக்கிறாங்கள். அதிலயும் யாழ்.பல்கலை பற்றித்தான் கூடிய கதையாம். இந்த முறையும் போன வருசம் மாதிரி லீவு விடச்சொல்லி கேட்டவையாம். ஆனால் துணைவேந்தரம்மா போனமுறை தடை போட்டு தனக்கு சரியான அவமானமாகப்போச்சு ஆளாளுக்கு வெளியில இருந்து போன் எடுத்து கிழிச்சு தொங்கவிட்டிட்டாங்களென்று மாட்ட னென்றாவாம் எனக் கேள்வி. நாறல் மீனில் விழுற இலையான் மாதிரி பல்கலைப்பக்கம் இந்த முறையும் குவிச்சுக்கிடந்ததாம் காக்கிச் சட்டை யள். ஆயிரமாயிரமாக மனசுக்குள்ள கிடக்கிறதையெல்லே தூக்கி எறிய சொல்லுறாங்கள். ஜே.வி.பி காரரை கொண்டாட விடுறாங்கள் எங்கட சனத்தை கொல்லப்போறம் எண்டுறாங்கள். நாங்கள் தமிழர் எண்டதால எங்களுக்கு ஒருநீதி அவைக்கு ஒருநீதி.

முதலமைச்சர் ஒன்றும் செய்யிறாரில்லையெண்ட விமர்சனகாரர் கள் எல்லாரும் ஒரு பக்கம் கத்தித் தீர்க்க ஆளை தனிய விட்டால் தேவையில்லாத வம்புகளை புதிசு புதிசாக வேண்டிவாறார் எண்டு ஊடகங்களுக்காக மட்டும் தேசியம் பேசி மக்களை ஏமாத்திறவைக்கு ஒரே கடுப்பாம். இவரை தனிய விடக்கூடாதெண்டு தலைமைக்கு முறைப் பாடாம். ஆனாலும் தான் போறதெண்டால் தனியாகத்தான் போவ னெண்டும் மற்றவை தலையிடக்கூடாதெண்டும் ஆள் சம்பந்தன் மற்றும் சுமந்திரனிற்கு மின்னஞ்சலொன்று தட்டிப்போட்டு தான் தமிழ் நாட்டுப்பக்கம் போனதாக கேள்வி. அங்கையும் போய் நீங்கள் பேசுற விடயங்களால எங்களுக்கு சரியான நெருக்கடி என்று குண்டக்க மண்டக்க கதைச்சு முறையா வாங்கிக்கட்டினது தான் இந்த முறையும் மிச்சம். இணக்க அரசியல் செய்தால் மகிந்தராசா பிச்சை போடுவாரென்றால் முதலில 30 வரிசமா எங்கட மக்களை காட்டிக் கொடுத்து, தமிழின துரோகம் செய்த தியேட்டர்காரர்களுக்கல்லோ பிச்சை விழுந்திருக்கும். அவர் மூலமா மக்களுக்கு பிச்சை போடேல்ல எண்டது இரண்டாவது விசயம், அவற்றை சொந்த இசைக்கருவியில அரசியல் செய்யுறத்துக்கே 2009 மேயோட ஆப்பு வைச்சிட்டுது இனவாதம். ஐயா எங்களுக்கு என்ன வேணும் எண்டதை நெஞ்ச நிமித்தி நிண்டு கேக்க வேணும் அப்பிடி எண்டாதான் சரிவரும்.

கூட்டமைப்பு அரைவேக்காட்டு அரசியல் வாதியள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சந்திச்சது பற்றிதான் விமர்சனங் கள் தொடருது. வடமாகாண மீன்குஞ்சு வளர்ப்பு அமைச்சரொருவர் சிங்கள குடியேற்றத்திட்டத்தில போய் மீன்குஞ்சு வளர்த்து நல்லிணக் கம் பற்றி பேசுறார். போதாதற்கு அங்கையிருக்கிற பிக்குவிடம் ஆசீர வாதம் வேண்டுறார். இன்னொரு பக்கம் மன்னாரில அரசாங்கம் மோட் டார் சைக்கிள் வழங்கிற நிகழ்ச்சியில மனுசனும் போய்நிக்குது. தனக்கு இருக்கிற அதிகாரம் பற்றி தெரியாது நாளுக்கொரு அறிக்கையும் விடுது. ஆனால் சுட்டுக்கொல்லப்பட்ட நகுலேஸ்வரன் பற்றி மூச்சு கூட விடுகிறார் இல்லை.

# அழுத வாக்கு



வடமாகாணசபைத் தேர்தல் சுயாதீனமாக நடைபெறவில்லை என்று பொதுநலவாய பிரதி நிதிகள் கூறியிருந்தால் நான் நாளையே எனது தேர்தல் ஆணையாளர் பதவியை இராஜினாமா செய்வேன்.

**மகிந்த தேசப்பிரிய**
**தேர்தல் ஆணையாளர்**




இந்த நாட்டிலே மலையகத் தமிழருக்கு சமத்துவ அபிவிருத்தி கிடைப்பதில்லை இலங்கை ஒரு தீவு. இந்தத் தீவுக்குள்ளே இன்னோர் தனித்தீவாக மலையகம் திகழ்கிறது.

**மனோ கணேசன்**
**தலைவர் - ஜனநாயக மக்கள் முன்னணி**




இலங்கையில் 3000 முதல் 10,000 பேருக்கு ஒரு பிரதேச சபை, பிரதேச செயலகம் என்று இருக்க நுவரெலியாவில் மாத்திரம் 1,50,000 பேருக்கு ஒரு பிரதேசசபை, ஒரு பிரதேச செயலகம் இருக் கின்றது.

**வாமதேவன்**
**சமூக ஆய்வாளர்**



தெற்காசியா சீனாவின் ஆதிக்கத்திற்கு உள்ளாகி விடும் என்ற அச்சம் தான் அமெரிக்காவை மகிந்த ருக்கு எதிராக தூண்டிவிட்டுள்ளது.

**-டாக்டர் குணதாச அமரசேகர-**




வரலாற்றின் தழும்புகள் முன்னெப்போதையும் விட தற்போது கூடுதலான அளவிற்கு வேதனையைத் தருகின்றது.

**மிக்கெயில் கொர்பச்சேவ்**
**முன்னாள் சோவியத் அதிபர்**



குறுகிய கால வெளிக்குள் சீன அணு நீர் மூழ்கிக் கப்பல் இரு தடவைகள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய அனுமதி இந்திய வெளி உறவு அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் அதிர்ச்சிக் குள்ளாக்கி இருக்கிறது. ஜனாதிபதி ராஜபக்சவின் நோக்கங் கள் குறித்து இந்தியா எச்சரிக்கை உணர்வுடன் நோக்குகிறது. அவர் இவ்வாறு நடந்து கொள்வார் என் இந்தியா சற்றும் எதிர்பார்க்கவில்லை.

**எம்.பி.வித்தியாதரன்**
**இந்தியப்பத்திரிகையாளர்**



தார்மீக கோபமும், தர்மா வேசமும் கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் கிண்டலுடனும், கேலியுட னும் கடந்து செல்லும் மன நிலைக்கு தமிழ் சினிமா தமிழர்களை கொண்டு வந்து விட்டிருக்கின்றது.

**உமா வரதராஜன்**
**எழுத்தாளர்**

# ஜனாதிபதித் தேர்தல்!



-முத்துக்குமார்-

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல்களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. ஊடகங்கள் பரபரப்பாக செய்திகளை வழங்கத் தொடங்கிவிட்டன. மாரிப்பருவ நிலை போல இரு தரப்பினதும் செல்வாக்குத் தளங்களும் நாள் தோறும் ஏறி இறங்குகின்றது. மைத்திரிபாலசிறிசேனா களமிறக்கப்பட்டதும் மகிந்தர் ஆடிப்போய்விட்டார். எதிரி தனது கோட்டைக்குள் இருந்து வந்திருக்கிறார் என்பது தான் அவர் ஆடிப்போனமைக்குக் காரணம். எனினும் சிறிய சேதாரங்களுடன் வியூகங்களை வகுத்து நிலைமைகளை ஒருவாறு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியுள்ளார் போலதெரிகின்றது. பலர் எதிர்த் தரப்பிற்கு மாறுவர் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இவரது கட்டுப்பாட்டு வியூகங்களினால் நிலைமை தணிக்கப்பட்டிருக்கின்றது. இத் தணிப்புக்கு சாம, பேத, தான, தாண்டம் என்கின்ற எல்லாத் தந்திரோபாயங்களும் பின்பற்றப்பட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன. எல்லோருடைய கோவைகளும் என்கையில் உள்ளன என்ற பகிரங்க அறிவிப்புடன் வெளியேறப் போகின்றனர் என எதிர்பார்த்த அமைச்சர்களின் மூச்சுக் காற்றைக் காணமுடியவில்லை. கோவைப் பயம் இல்லாதவர்கள் கூட புதிய கோவை தயாரிக்கப்படலாம் என்ற அச்சத்தில் உள்ளனராம்.

மகிந்தர் கட்டம் கட்டமான வியூகங்களை நகர்த்திவருகின்றார். முதலாம் கட்டத்தில் தனது தரப்பிலிருந்து எதிர்த்தரப்பிற்கு மாறக்கூடியவர்களை தடுத்து நிறுத்துவதிலேயே கவனம் செலுத்தினார். அதில் ஓரளவு வெற்றி கிடைத்தவுடன் தாக்குதல் யுத்தத்தினைத் தொடங்கியிருக்கின்றார். இந்தத் தாக்குதல் யுத்தத்தின் நோக்கம் எதிர்த்தரப்பினை தற்காப்புக்குள் தள்ளுவதே! இந்த இரண்டாவது யுத்தத்திலும் அவர் வெற்றி கண்டுவருகிறார் போலவே தெரிகின்றது. ஜனாதிபதியையும் படைத் தளபதிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த சதி முயற்சி, புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம், ரணிலின் அரசாங்கத்தை உருவாக்க மைத்திரி பகடைக்காய் ஆக்கப்பட்டுள்ளார் என்பனவே எதிரணிமீது ஆரம்பிக்கப் பட்ட வலிந்த தக்குதலின் மைய விடயங்கள். எதிர்த்தரப்பின் மீது புலிச்சாயம் பூசியமை நன்றாகவே வேலை செய்யத்தொடங்கி விட்டது. அது தம் மீது பூசப்பட்ட புலிச்சாயத்தைக் கழட்டும் தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. எதிர்த்தரப்பு தாக்குதல் யுத்தத்தினை நடாத்துவதற்கு சந்தர்ப்பங்களையே கொடுப்பதில்லை என்பதில் மகிந்தர் மிகக் கவனமாக உள்ளார் போல தெரிகின்றது.


தேவாரம் பாடி கூட்டம் தொடங்குவது போல எதிர்த்தரப்பினரும் மகிந்தரின் யுத்த வெற்றியையும், அபிவிருத்தியையும் பாராட்டி விட்டுத்தான் தமது பிரச்சாரத்தை தொடங்குகின்றனர். இங்குதான் எதிர்த்தரப்பின் மிகப் பெரிய பலவீனம் தெரிகின்றது. ஏனெனில் மகிந்தர் இவை இரண்டையும் தான் தனது பிரச்சாரத்திற்கு ஆதாரமாகக் கொள்கின்றார். எதிர்த் தரப்பு தங்களின் பக்கத்திற்கே பந்தினை அடிக்கின்றது.

கள நிலவரத்தின் படி ஆரம்பத்தில் மைத்திரியின் கை சற்று ஓங்கியிருந்தது என்பது உண்மைதான். ஆனால் கடந்த இரண்டு நாள் நிலவரத்தின் படி மைத்திரியின் நிலை சற்று ச்ரிய மகிந்தரின் நிலை சற்று வளர்ந்திருக்கின்றது. வரும் ஒரு மாத களச்செயற்பாடுகள் தான் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கும்.

மகிந்தர் என்ன தில்லு முல்லுகளைச் செய்தாவது வெற்றி பெறவே முயற்சிப்பார்.

# காலங்கள் மாறும், காட்சிகள் மாறும்!





—முத்துக்குமார்—

சிங்கள மத்தியதர வர்க்கம் பிரேமதாசா காலத்தைப்போல மகிந்தரை அகற்றும் செயல்திட்டத்தில் கடந்த சில மாதங்களாக ஈடுபட்டு வந்தது. அரசசார்பற்ற நிறுவனங்களும் சில ஊடகங்களும் இதற்குள் அடங்கும். குடும்பத்தினரிடம் அதிகாரக்குவிப்பும் இராணுவ இறுக்கமுமே இதற்குக் காரணம். ஆனாலும் அதற்கு தலைமை கொடுப்பதற்கு யுத்த வெற்றி வாத தளத்திலிருந்து ஒரு தலைவர் கிடைக்கவில்லை. தற்போது மைத்திரிபாலசிறீசேன கிடைத்திருக்கின்றார்.

எல்லோருடைய கோவைகளும் என்கையில் உள்ளன என்ற பகிரங்க அறிவிப்புடன் வெளியேறப் போகின்றனர் என எதிர்பார்த்த அமைச்சர்களின் மூச்சுக்காற்றைக் காணமுடியவில்லை. கோவைப்பயம் இல்லாதவர்கள் கூட புதிய கோவை தயாரிக்கப்படலாம் என்ற அச்சத்தில் உள்ளனராம்.

அதிகாரம் இல்லாமல் ஒரு நாள் இருப்பைக் கூட அவரால் பேண முடியாது. அவருடைய பரிவாரங்களும் அதிகாரம் இருக்கும்வரை மட்டும் அவருடன் இருப்பர். அதிகாரம் இல்லாத போது அடுத்த நாளே கழன்று விடுவர். ஏனெனில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி பண்டாரநாயக்கா குடும்பத்திற்கு உரியதே ஒழிய ராஜபக்ச குடும்பத்திற்குரியதல்ல.

இதைவிட ஆட்சிப்பீடம் எப்போதும் கொழும்பு மேட்டுக்குடியிடமும். கண்டி மேட்டுக்குடியிடமுமே இருந்தது. ஏனைய வரிடம் இந்த ஆட்சிப்பீடம் செல்வதை இந்த மேட்டுக்குடிகள் அங்கீகரிப்பதில்லை. இதில் பிரேமதாசாவும் மகிந்தராஜபக்சவும் விதிவிலக்கு. பிரேமதாசாவினால் வம்சா வழி ஆட்சியைத் தொடரமுடியவில்லை. மகிந்தரை போர் வெற்றி பாதுகாத்த போதும் எதிர்காலத்திலும் பாதுகாக்கும் எனக்கூற முடியாது.

இன்று ராஜபக்ச கம்பனியை தொடர்ந்தும் ஆட்சிக் கட்டிலில் வைத்திருக்க வேண்டும் என்பதில் சீனாவும் அதன் கூட்டணி நாடுகளும் தீவிரமாக உள்ளன. இலங்கையில் சீன ஆதிக்கத்தை அகற்ற வேண்டுமாயின் ராஜபக்ச ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டிய தேவை இந்திய மற்றும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கு உள்ளது. அவ்வாறு ராஜபக்சவை அகற்றுவதென்பதிலுள்ள சவால்களை நன்றாகக் கணக்குப் போட்டே பொது எதிரணியின் உருவாக்கம் நடைபெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியையும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு பிரிவினையும் இணைத்தே ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவர முடியும். என்பதில் மேற்குலகமும் இந்தியாவும் தெளிவாக இருந்தது. சர்வதேச இராஜதந்திரி ஒருவர் முன்னர் தமிழ் முக்கியஸ்தர் ஒருவரிடம் இதனை நேரடியாகவே கூறியிருந்தார்.

எதிரணிப் பொது வேட்பாளராக மைத்திரி இந்த அடிப்படையிலேயே களமிறக்கப் பட்டார். இங்கே எதிரணியில் பல தரப்புக்கள் தங்கள் தங்கள் நிகழ்ச்சி நிரலிற்கு ஏற்ப ஒரு புள்ளியில் சந்தித்துள்ளன. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம், இந்தியா, சந்திரிகா தரப்பு, ஹெலஉறுமய, ஐக்கியதேசியக் கட்சி என்பன சந்தித்திருக்கின்றன. அமெரிக்காவினதும் இந்தியாவினதும் இலக்கு இலங்கையிலிருந்து சீனாவின் செல்வாக்கினை அகற்றுதல், சந்திரிகாவின் இலக்கு பறிபோன சிறீலங்கா சுதந்திரக்கட்சியை மீண்டும் பண்டாரநாயக்க குடும்பத் தலைமையிடம் கொண்டு வருதல் ஹெல உறுமயவின் இலக்கு தனக்கு போட்டியாக உருவாக்கப் பட்ட பொது பல சேனாவின் செல்வாக்கினை இல்லாதொழித்தலும், பேரினவாதத்தின் இருப்பினை சர்வதேச நெருக்கடிகளில் இருந்து பாதுகாத்தலும். ஐக்கிய தேசியக்கட்சியின் இலக்கு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுதல்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இலக்கு எதுவும் கிடையாது இந்தியாவின் கட்டளைப்படியே எதிர்த் தரப்பை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்தது. இவ் அனைத்துத் தரப்பினரும் தமது இலக்கினை நிறைவேற்றுவதற்கு மகிந்தரை அகற்றுதல் என்கின்ற ஒரு புள்ளியில் சந்திக்கின்றனர். இந்தத் திரைப்படத்தின் தயாரிப்பாளர் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா. துணைத்தயாரிப்பாளர் இந்தியா. பிரதான இயக்குனர் சந்திரிகா தான். துணை இயக்குனர் சோபித தேரர். பிரதான நடிகர் மைத்திரி, கௌரவ நடிகர் ரணில், துணைநடிகர்கள் ஹெலஉறுமய, ஜே.வி.பி , த.தே. கூட்டமைப்பு வகையறாக்கள் மகிந்தரை அகற்றுவதற்கு மகிந்தரின் கோட்டையையும், அவரது இனவாதத் தேசியத்தையும் உடைக்க வேண்டும். இனவாதத்தை உடைப்பதற்கு ஹெலஉறுமய பங்காற்றியிருக்கின்றது. மகிந்தரின் அதிகாரக் கோட்டையை உடைப்பதற்கு மைத்திரிபால சிறீசேன பங்காற்றியிருக்கிறார். கதாநாயகன் கோட்டைக்குள்ளிருந்தும், யுத்த வெற்றி வாதத் தளத்திலிருந்தும் வரவேண்டும் என்பதற்காகவே சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறீசேனா களமிறக்கப்பட்டுள்ளார் பல சக்திகளதும் நீண்டகால கடின உழைப்பு ஆரம்ப வெற்றியைக் கொடுத்திருக்கின்றது. மத்தியதர வர்க்கத்தைக் கவரும் சுலோகங்களான நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு, 17வது திருத்தம் மீள அறிமுகப்படுத்தல் என்பன முன்வைக்கப் பட்டுள்ளன.

சிங்கள மத்தியதர வர்க்கம் பிரேமதாசா காலத்தைப்போல மகிந்தரை அகற்றும் செயல்திட்டத்தில் கடந்த சில மாதங்களாக ஈடுபட்டு வந்தது. அரசசார்பற்ற


(19 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல்! தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

-பூரணன்-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்கள் என்ன நிலைப்பாட்டினை எடுக்கலாம் என்பது தொடர்பாக இன்று பல தளங்களிலும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களுக்கு தொடர்பில்லாத தேர்தல் பற்றி பெரிய அக்கறையினைக் காட்டத்தேவையில்லை என தமிழ் சிவில் சமூக அமையம் கருத்துத் தெரிவித்துள்ளது. தமிழ் டயஸ் பொறாவின் ஒரு பகுதியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் கருத்துக்கணிப்பினை வெளிப்படுத்தும் வகையில் வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் எனக் கேட்டிருந்தது. ஆனாலும் சம்பந்தன் அதனை நிராகரித்து இருந்தார். ஆரம்பத்தில் பொது எதிரணி வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்ற கருத்தே தமிழ் மக்கள் மத்தியில் அதிகமாக இருந்தது. ஆனால் தமிழ் மக்கள் கோரிக்கைகள் எதுவும் முன்வைக்க முடியாத நிலைவந்த பின்னர் ஆதரித்து என்ன பயன் என்ற கருத்து வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த விவகாரத்தை கோட்பாட்டு அடிப்படையிலும் பேரம் பேசுதல் என்ற அடிப்படையிலும் அணுகுவதே பொருத்தமானதாக இருக்கும். கோட்பாட்டு அடிப்படையில் பார்க்கும் போது இலங்கை அரசு தமிழ் மக்களையும் இணைத்த பன்மைத்தன்மை வாய்ந்த அரசாக இல்லை அது சிங்கள தேசத்திற்கான அரசாக மட்டுமேயுள்ளது. தமிழ் மக்கள் இவ் அரசிற்கு வெளியில் தான் நிற்கின்றனர். எங்களை ஒரு தேசமாக இணைத்தால் சிங்கள தேசத்துடன்



இணைந்து ஒரு பன்மைத்தன்மைத்துவ இலங்கை அரசினை உருவாக்குவதற்குத் தயார் எனக் கூறி வருகின்றனர். இது வரை கால போராட்டம் இந்த ஒடுக்கு முறைக்கு எதிராகத்தான் இடம் பெற்றது. இந்த நிலமை காரணமாக இலங்கைத்தீவு இன்று சமூகமளவில் உணர்வு ரீதியாக இரண்டாகப் பிரிந்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் சிங்கள தேசம் தனது தலைவர் யார் என்பதற்காக நடாத்தப்படுகின்ற தேர்தல். அதில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களில் எவரும் தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாவிட்டாலும் தீமையாவது செய்யமாட்டேன் என்ற உத்தரவாதத்தை கூட வழங்க முடியாதவர்களாகவே உள்ளனர். இந் நிலையில் தமிழ் மக்கள் ஏன் அத்தேர்தலில் பங்கு பற்றவேண்டும் என்ற நியாயமான கேள்வி இங்கு எழுகின்றது. தமிழ்த்தரப்பு ஆதரிக்கும் வேட்பாளர் தோல்வி அடைவார் என்ற நிலையே இன்று காணப்படுகின்றது.

கூட்டமைப்பு வெளிப்படையாக ஆதரித்ததன் விளைவாக போரை களத்தில் நின்று வழிநடத்திய பொன்சேகா தேர்தலில் தோல்வியடைந்ததன் மூலம் அது நிரூபணமாகியுள்ளது. இது இலங்கைத்தீவு இன ரீதியாக இரண்டாகப் பிரிந்துகிடப்பதை துலாம்பரமாக வெளிக்காட்டுகின்றது. இதனால் தான் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இந்திய விருப்பத்தின் பேரில் எதிரணி பொது வேட்பாளரை ஆதரிப்பது எனத் தீர்மானித்த பின்னரும் அதனைப் பகிரங்கப்படுத்தத் தயங்குகின்றது. எதிரணியுடனான சந்திப்புக்களைக் 'கூட இரகசியங்கள் வெளிவரக் கூடாது என்பதற்காக சம்பந்தன் தனித்தே மேற்கொள்ளுகின்றார்.

இது தவிர இராஜதந்திர அடிப்படையில் நோக்கும் போது தமிழ் மக்களின் அரசியல் வலுவாக இருப்பதற்கு தென் இலங்கையின் இரு கட்சிகளுக்கிடையே ஒரு அதிகாரச் சம நிலை இருப்பது அவசியம். தமிழ்த் தரப்பு இவ் இரு கட்சிகளிலிருந்து சம தூரத்தில் நிற்கும் போது இவ் அதிகாரச் சமநிலை உருவாகுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும். தமிழ்த் தரப்பு ஒரு கட்சியை ஆதரித்தால் அதிகாரம் மறுகட்சிக்கு சார்பாக சரியும். எனவே கோட்பாட்டு அடிப்படையில் பார்க்கும் போது இந்தத் தேர்தலில் இருந்து தமிழ் மக்கள் விலகி இருப்பதே அவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியதாக இருக்கும்.

பேரம் பேசுதல் என்ற அடிப்படையில் அணுகும் போது இத்தேர்தலில் அதற்கான சாத்தியங்கள் எதுவுமில்லை. இந்தத் தேர்தலில் வெற்றுக் காசோலையில் தமிழ்த்தரப்பு கையொப்பம் இட்டுத் தரவேண்டும் என்றே பொது எதிர்த் தரப்பு எதிர்பார்க்கின்றது. சோபிததேரர் சம்பந்தன் தலைமையிடமும், முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிடமும் உங்கள் நிகழ்ச்சி நிரலுடனும் உங்கள் கோரிக்கைகளுடனும் இங்கு வரவேண்டாம் என நேரடியாகவே கூறியிருக்கின்றார். சம்பந்தனும், ரவூப்ஹக்கீமும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். கள யதார்த்தமும் இதுதான். கூட்டமைப்பு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தால் அதனையே மகிந்தர் இனவாத பிரசாரத்திற்கு பயன்படுத்தத் தொடங்கிவிடுவார். ஆதரவு கொடுப்பதற்கே இந்த நிலை என்றால் கோரிக்கைகள் வைப்பதைப் பற்றி நினைத்தே பார்க்க முடியாது. மைத்திரிபால சிறீசேன சம்பந்தனிடம் நேரடியாகவே பகிரங்கமாக ஆதரவு தெரிவிப்பதை தாமதிக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றார். சந்திரிகா 13 க்கு மேலாக எதுவும் பேசுவதை தவிருங்கள் எனக் கேட்டிருக்கின்றார்.

இரண்டாவது தமிழ் மக்களுக்கு சார்பான புவிசார் அரசியல் நிலை பலவீனமடைதல். போரின் முடிவு தமிழ் அரசியலை பூச்சிய நிலைக்கு தள்ளியிருந்தது. ஆனாலும் இன்று வரை தமிழ்த் தேசிய அரசியலையும் அதற்கான போராட்டத்தையும் சம்பந்தன் தலைமையால் நீர்த்துப் போகச் செய்ய முடியவில்லை. அது உயிர்ப்புடன் இருக்கின்றதென்றால் இலங்கைத் தீவினை மையமாக வைத்து சீன சார்பு உலகம் - இந்தியா அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஆகிய முத்தரப்பு பிராந்திய மற்றும் உலக வல்லாதிக்க சக்திகளுக்கு இடையிலான புவிசார் அரசியல் போட்டியே காரணமாகும். இந்த புவிசார் அரசியல் காரணமாகவே வல்லரசுகளுக்கிடையே. இலங்கையை மையமாக வைத்து அதிகாரப்போட்டி உருவாகியுள்ளது. சீனாவின் அதிகரித்த செல்வாக்கினை தடுப்பதற்கு உலக வல்லரசான அமெரிக்காவிற்கும் பிராந்திய வல்லரசான இந்தியாவிற்கும் இருக்கக்கூடிய ஒரே ஒரு கருவி தமிழ் மக்கள் தான். தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற புலிகளின் கடைசி வரை விட்டுக் கொடாத நிலைப்பாடும், உறுதியும், அவர்களும், அவர்களுடன் இருந்த மக்களும் செய்த அளப்பரிய தியாகங்களும் தான் இந்தப் புவிசார் அரசியல் போட்டியை உருவாக்கியிருந்தது.


மகிந்தராஜபக்சேயின் சீன சார்பு அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான ஒரு கருவியாக மட்டுமே ஐ.நா விசாரணை என்பதனை மேற்குநாடுகள் கையில் எடுத்துள்ளன. அதன் மூலம் சீனாவின் ஆதிக்கத்திலிருந்து ஸ்ரீலங்காவை விடு



வித்து மீண்டும் தமது ஆதிக்க வட்டத்தினுள் கொண்டுவருவது அல்லது இந்திய மற்றும் மேற்கு நாடுகளுடன் ஒத்துப் போகக்கூடிய (சந்திரிகா போன்ற) ஒருவரை ஆட்சிப் பீடமேற்றுவது மட்டுமே அவற்றினது நோக்கமாகும்.

இந்நிலையில் வரப்போகும் தேர்தலில் ஏற்படக்கூடிய ஆட்சி மாற்றம் சிங்களதேசத்தின் அரசியலிலும், தமிழ்த் தேசத்தின் அரசியலிலும் எத்தகைய தாக்கங்களை உண்டுபண்ணும் என்பதனை ஆழமாக நோக்குவது அவசியமானது.

ராஜபக்சே மீண்டும் வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலமான கைதுகள், சித்திரவதைகள், பெண்கள் மீதான துன்புறுத்தல்கள், காலசார அழிப்பு, கல்வி சீரழிப்பு, பொருளாதார அழிப்பு, முன்னாள் போராளிகளது வாழ்க்கையில் அவலம், காணமால் போனவர்களது குடும்பங்கள் மற்றும் விதவைப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வில் அவலங்கள் தீவிரமடையும். அத்துடன் வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த மயமாக்கல், இராணுவமயமாக்கல், பொருளாதாரரீதியான சிங்கள மயமாக்கல் என்பன அசுர வேகம் பெறும். சுமார் ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ்த் தேசத்தின் இருப்பை முற்றிலும் இல்லாமல் அழிக்கக் கூடிய ஆபத்துள்ளது. அரசியல் தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை.



> **இலங்கைத்தீவு இன்று சமூகமளவில் உணர்வு ரீதியாக இரண்டாகப் பிரிந்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் சிங்கள தேசம் தனது தலைவர் யார் என்பதற்காக நடாத்தப்படுகின்ற தேர்தல். அதில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களில் எவரும் தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாவிட்டாலும் தீமையாவது செய்ய மாட்டேன் என்ற உத்தரவாதத்தை கூட வழங்க முடியாதவர்களாகவே உள்ளனர். இந் நிலையில் தமிழ் மக்கள் ஏன் அத்தேர்தலில் பங்கு பற்றவேண்டும்**

மறுபுறம் சீன ஆதிக்கம் அதிகரிக்கும், அது இந்தியாவின் தேசிய பாதுகாப்பு பிரச்சினையை அதிகரிக்கும், அமெரிக்காவின்

> **போரின் முடிவு தமிழ் அரசியலை பூச்சிய நிலைக்கு தள்ளியிருந்தது. ஆனாலும் இன்று வரை தமிழ்த் தேசிய அரசியலையும் அதற்கான போராட்டத்தையும் சம்பந்தன் தலைமையால் நீர்த்துப்போகச் செய்ய முடியவில்லை. அது உயிர்ப்புடன் இருக்கின்றதென்றால் இலங்கைத்தீவினை மையமாக வைத்து சீன சார்பு உலகம் – இந்தியா அமெரிக்கா தலையிலான மேற்குலகம் ஆகிய முத்தரப்பு பிராந்திய மற்றும் உலக வல்லாதிக்க சக்திகளுக்கு இடையிலான புவிசார் அரசியல் போட்டியே காரணமாகும்.**

பூகோள ஆதிக்க கனவும், உலக வல்லரசுக் கனவும் படிப்படியாக தகர்க்கப்படும். இதனால் இந்தியா இலங்கையில் மீண்டும் நேரடியாகத் தலையிட வேண்டிய சூழல் தோற்றுவிக்கப்படும். இலங்கைத்தீவிலிருந்து சீனாவை வெளியேற்ற இந்தியாவுக்கு முழு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கும் ஏற்படும். அவ்வாறு தலையிடுவதற்கான கருவியாக தமிழ் மக்களது விவகாரம் கையாளப்படும். இந்நிலையில் தமிழ்த் தரப்புக்கள் இணைந்து சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் தமிழர் விவகாரம் ஐ.நா மட்டத்தில் தொடர்ந்தும் பேசுபொருளாக வைத்திருக்க முடிவதுடன், சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை நோக்கி நகர்த்தவும் முடியும்.

பொது எதிரணி வேட்பாளரான மைத்திரிபாலசிறீசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும்போது சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த ஆட்சி உருவாகும்.

அமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், கட்டப்பட்ட விகாரைகள் அகற்றப்படப் போவதில்லை. புதிய சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த மயமாக்கல்கள், இராணுவ மயமாக்கல்கள் நிற்கப் போவதில்லை

(19 ஆம் பக்கம் பார்க்க)

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# தமிழருக்கு தெரிவில்லாத தேர்தல்

தமிழ் மக்கள் தங்களுக்கு எந்த தெரிவினையும் முன்வைக்காத தேர்தலொன்றை இம்முறை எதிர்கொண்டுள்ளனர்.

சிங்கள பௌத்தத்தின் இரு வடிவங்களுக்கிடையே நடைபெறும் இந்த அதிகார மோதலில் தாங்களும் பங்குகொண்டு இதுவரை காலமும் பெருமளவு உயிர்த்தியாகங்களுக்கு மத்தியில் உரம்கொண்டு நிற்கும் தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்திற்குள் கரைத்து அழிந்து போகச்செய்து விடுவதா? என்ற மிக முக்கியமான முடிவை முக்கியமான சந்தர்ப்பத்தில் எடுக்கவேண்டிய நிலையில் தமிழ்மக்கள் காணப்படுகின்றனர்.

தமிழ்த் தேசியத்தின் மீதான தங்கள் பற்றுதியை இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு மாத்திரமல்ல, சர்வதேச சமூகத்திற்கும் தெளிவுபடுத்தக்கூடிய வாய்ப்பு இந்த தேர்தலுக்குள் மறைந்துகிடப்பதும் உண்மை. நல்லாட்சியை ஏற்படுத்துதல் என்ற கோஷத்துடன்(போர்வையுடன்) ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக களமிறக்கப்பட்டுள்ள எதிரணியினரை தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும் என்ற கருத்து தென்னிலங்கை புத்திஜீவிகள் மத்தியில் காணமுடிகின்றது.

மகிந்தராஜபக்ச மீண்டும் ஒருமுறை பதவிக்கு வருவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கினால் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அவர்கள் பட்டியலிடுகின்றனர். அவர்கள் முன்வைக்கும் இந்த எச்சரிக்கை நிராகரிக்க முடியாத விடயம், மகிந்த ராஜபக்சவின் மூன்றாவது ஆட்சிக்காலம் எவ்வளவு ஆபத்தானதாக அமையும் என்பதை தன்மான உணர்வுடன் வாழவிரும்பும் தமிழ்மக்களை விட நன்கு அறிந்தவர்கள் எவரும் இருக்க முடியாது.

முழு இலங்கையும், எதிர்கொள்ளப்போகின்ற மிகப்பெரும் ஆபத்து என்பது தமிழ்மக்களுக்கு நன்கு தெரியும், அவர் தனது அடுத்த ஆட்சிக்காலத்தில் எவ்வாறன தீமைகளையெல்லாம் கொண்டுவருவார் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். இதன் காரணமாக எந்த தயக்கமும் இன்றி மகிந்தராஜபக்சவை நிராகரிப்பதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். எனினும் பொதுஎதிரணியினர் முன்வைத்துள்ள பொதுவேட்பாளர் தெரிவு என்பது தமிழ்மக்களின் முன் சில ஐயப்பாடுகளை உருவாக்கியுள்ளது,

குறிப்பிட்ட வேட்பாளர்தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞைகள் எதுவும் வெளிவரவில்லை. வெளிவரப் போவதுமில்லை, மாறாக சிங்கள வாக்காளர்களின் வாக்குகளில் பெருமளவானவற்றை பெறுவதற்காக தமிழ் மக்களுடனோ அல்லது அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுடனோ தங்களுக்கு ஒட்டுறவு எதுவுமில்லை என காண்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதையும் தமிழ்மக்கள் அவதானித்த வண்ணமுள்ளனர்.

மகிந்த ராஜபக்சவிற்கான சவால் அவருடைய சொந்தக் கட்சிக்குள்ளிருந்தே வந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபாலசிறிசேன எதிர்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். ஆகவே தமிழ் மக்கள் தங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களை கொன்றுகுவித்தமைக்காக யுத்தக் குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும் ஒருவருக்கும், அவரை கடந்த ஐந்து வருடங்களாக நியாயப்படுத்திக்கொண்டிருக்கும் ஒருவரிற்கும் இடையில் நடைபெறும் மோதலில் ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர்.

இது தமிழர்களுக்கான ஒரு தெரிவல்ல, எப்படி பார்த்தாலும் தமிழனத்தை தொடர்ந்தும் இனஅழிப்பிற்குள்ளாக்க கூடிய ஒருவரை தெரிவுசெய்ய வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர்.

ராஜபக்சவை அகற்றிவிட்டு அந்த இடத்திற்கு வருவதற்கான மோதலில் தீவிர சிங்கள இனவாத சக்திகளின் பரிபூரணமான ஆதரவுடன் களத்தில் குதித்துள்ள எதிரணி வேட்பாளர். தமிழ்மக்களுக்கு எதிராக மூர்க்கத்தனமான முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட யுத்தத்தை எவ்வித மனச் சஞ்சலமுமின்றி ஆதரித்தவர்.

பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அரசின் வார்த்தையை நம்பிச் சென்ற மக்க்ள் கொன்று குவிக்கப்பட்டபோது மௌனமாக இருந்தவர், மட்டுமன்றி யுத்தத்தினை முழுமையாக ஆதரித்து உடனிருந்து நடாத்தியவர். யுத்தவெற்றியை கொண்டாடியவர். தற்போது சர்வதேச யுத்தகுற்ற விசாரணையை அடியோடு எதிர்ப்பவர்.


அவரும் அவருடன் களத்தில் இறங்கியுள்ள ஜாதிகஹெல உறுமய போன்ற தீவிரபௌத்த பேரினவாதிகளும், மகிந்த ராஜபக்சவை சர்வதேச விசாரணைக்குட்படுத்துவதை கடுமையாக எதிர்ப்போம், அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என உறுதியாக் தெரிவித்துவருகின்றனர். இதன் மூலமாக சர்வதேச விசாரணையொன்றின் மூலமாக தமிழ்மக்களுக்கு நீதி கிடைப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்ற தெளிவான செய்தி சொல்லப்பட்டுள்ளது.

இரு முக்கிய வேட்பாளர்களும் நிச்சயமாக, சர்வதேச விசாரணைக்கோ, அதிகாரப் பகிர்வுக்கோ ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அத்துடன் சிங்கள பௌத்த மயமாக்கல், இராணுவமயப்படுத்தல், அதிகார பகிர்வு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்களை அடக்கி ஒடுக்குதல், வடக்குகிழக்கின் சிவில் உரிமைகள் போன்ற விவகாரங்களுக்கு ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை கூட முன்வைக்கப் போவதில்லை, என்பதும் புலனாகியுள்ளது. பொதுவேட்பாளர் தனது ஆரம்ப செய்தியாளர்மாநாட்டில் 13வது திருத்தத்தை நிராகரித்ததன் மூலமாக தமிழ் மக்கள் முன்னால் உள்ள தெரிவுக்கான சாத்தியக்கூறுகளையும் குறைத்துள்ளமையும் முக்கியமானது.

தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதை அவர்களது போராட்டங்களே தீர்மானிக்கபோகின்றன. தமிழ் மக்களின் இருப்பையே சிதைத்து அழித்துவிட கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் இருவேட்பாளர்கள் அவர்களது ஆதரவு சக்திகள் மத்தியிலான தேர்தல் இதனை தீர்மானித்துவிடாது.

# அமைப்பு வடிவம் பெறும் தமிழ் சிவில் சமூக அமையம்

தமிழ் சிவில் சமூக வலையமைப்பு கடந்த ஐந்து வருடங்களாக மன்னார் ஆயார் இராயப்பு ஜோசப் தலைமையில் செயற்பட்டு வந்தது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு வழிகளில் குரல் கொடுத்து வந்ததோடு குறிப்பான சந்தர்ப்பங்களில் தமது நிலைப்பாடுகளை அறிக்கையாகவும் வெளியிட்டது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் வடபகுதிக்கு வருகை தந்தபோது அவர்களிடம் தமிழ் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை தெளிவாக எடுத்துக் கூறியது. ஆனாலும் தனக்கென ஒரு அமைப்புப் பொறிமுறையினை உருவாக்கியிருக்கவில்லை.



அண்மையில் நடைபெற்ற வருடாந்த ஒன்றுகூடலில் "தமிழ் சிவில் சமூக அமையம்" எனும் பெயரில் அமைப்பு வடிவம் பெற்றுள்ளது. அமையத்தின் கொள்கை ஆவணமும், யாப்பும் ஒன்றுகூடலில் பங்குபற்றியிருந்த 60 வரையான வட கிழக்கைச் சேர்ந்த தமிழ் சிவில் சமூக



> தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையைப பாதுகாப்பதும் முன்னெடுப்பதும் அமையத்தின் இலக்காக இருக்கும். இந்த இலக்கை அடைவதற்கான உரையாடல் களத்தை உருவாக்குவதும் வெளிப்படுத்துவதும் அமையத்தின் நோக்கங்களாக இருக்கும்.

செயற்பாட்டாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அமையத்தின் நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

அமையத்தின் அழைப்பாளராக மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பும் இணைச் செயலாளர்களாக பொ.ந.சிங்கம், தியாக ராஜன், ராஜன் ஆகியோரும், பேச்சாளர்களாக யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்டபீட விரிவுரையாளர் குமார வடிவேல் குருபரன், எழில்ராஜன் ஆகியோரும் பொருளாராக பேராசிரியர் சிவநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவை தவிர வட-கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு இணைப்பாளர் தெரிவு செய்யப்பட்டதோடு வட-கிழக்கிற்கு வெளியேயான மாவட்டங்களுக்கென ஒரு இணைப்பாளரும் தெரிவு செய்யப்பட்டார். மாவட்ட ரீதியாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு வேலைத்திட்டங்களும் அடையாளம் காணப்பட்டன.

தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பாதுகாப்பதும் முன்னெடுப்பதும் அமையத்தின் இலக்காக இருக்கும். இந்த இலக்கை அடைவதற்கான உரையாடல் களத்தை உருவாக்குவதும் வெளிப்படுத்துவதும் அமையத்தின் நோக்கங்களாக இருக்கும். இதற்காக செயலமர்வு, களஆய்வுப் பட்டறைகள்,மக்கள் கருத்தறி நிகழ்வுகள்,கலைச் செயற்பாடுகள் என்பவற்றை அமையம் ஒழுங்குபடுத்தும்.

தமிழ்மக்களுடன் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் என இவ் அமையத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும் கூறுகின்றன.

அமையத்தின் அடிப்படைக் கொள்கைகளாக தமிழ்மக்கள் ஒரு தனியான தேசம் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு. வட-கிழக்கு தமிழ் மக்களின் தாயகம். தமது அடையாளங்களைத் தீர்மானிக்கும் உரிமை முஸ்லீம் மலையக மக்களுக்கு உண்டு. ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றை மதித்தல், தமிழ்க்கலாச்சாரத்தை பாதுகாத்தல், தமிழ் மொழியைப் பாதுகாத்து மேம்படுத்துதல், மதசார்பற்ற அமைப்பாக இருத்தல், பால்நிலைச் சமத்துவம் பேணுதல், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறுதல், புலம்பெயர் மக்கள் உலகத் தமிழர்கள், தமிழகத்தமிழர், தமிழ்த்தேசியத்தின் முக்கிய பங்காளிகள் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பல்வேறு காரணங்களுக்காக அரசியல் கட்சிகளிற்கு பின்னால் மக்கள் அணிதிரள தயக்கம் காட்டுகின்றனர். ஆனால் சிவில் அமைப்புகளுக்கு பின்னால் அணி திரள்வதற்கு தயாராக உள்ளனர் மருத்துவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ,சட்டத்தரணிகள் என பல தரப்பட்டவர்கள் தமிழ்சிவில் சமூக அமையத்தின் ஒன்றுகூடலில் கலந்து கொண்டமை, இதனையே வெளிப்படுத்துகிறது.

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம் புரண்ட பாதையில் செல்கின்ற நிலையில் தமிழ்ச் சிவில் சமூக அமையத்தின் எழுச்சி தமிழ் அரசியலில் பல மாற்றங்களுக்கு உந்து சக்கியாக அமையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம் புரண்ட பாதையில் செல்கின்ற நிலையில் தமிழ்ச் சிவில் சமூக அமையத்தின் எழுச்சி தமிழ் அரசியலில் பலமாற்றங்களுக்கு உந்து சக்கியாக அமையும் என நம்பலாம். இன்றைய சூழலில் மூன்று முக்கிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியமானது. தமிழ் அரசியலை புலமை நிலையில் உருவாக்கி தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேசுபொருளாக்குதல், தாயகத்தில் இடம் பெறும் பச்சை ஆக்கிரமிப்புக்களை ஆவணப்படுத்தி சர்வதேச மட்டத்தில் முன்வைப்பதன் மூலம் சர்வதேசப் பாதுகாப்புப் பொறிமுறையினை உருவாக்குதல், போரினால் பாதிக்கப்பட்ட எமது உறவுகளின் நலன்களைப் பேணுதல் என்பனவே அவ் வேலைத்திட்டங்களாகும்.

தமிழ் சிவில் சமூக அமையம் அவ் விடயங்களில் கவனத்தை செலுத்துவது மிக அவசியமானது.

இன்று நடைமுறையில் இருக்கும் இலங்கையின் அரசியல் யாப்பானது தமிழ்பேசும் மக்களுக்கு முற்றிலும் பாதகமான வகையிலேயே பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த யாப்பில் இனப்பிரச்சனையை கையாள்வதற்கு ஒருசில சாதகமான அம்சங்கள் இருந்தாலும் அதனை முற்றிலும் பாதகமான வகையில் கையாள்வதற்கான மனப்பாங்கும் செயல்முறைகளுமே உண்டு. உதாரணமாக இனப்பிரச்சனையை தீர்க்க விரும்பும் ஒருவர். அதற்கான மனத்திடம் கொண்ட ஒருவர் ஜனாதிபதி பதவியில் அமருவாரேயானால் அவரால் தனது அதிகாரங்களை பயன்படுத்தி இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் உண்டு. ஆனால் பதவியில் அமரும் ஜனாதிபதி அவ்வாறு நல் நோக்கில் தமது அதிகாரத்தை பயன்படுத்தாமல் அவ்வதிகாரத்தையே இன ஒடுக்கு முறையை மேற்கொள்வதற்கான வாய்ப்பாக கொண்டு செயற்பட்டு வந்துள்ளனர். 1978ஆம் ஆண்டு ஜனாதிபதி முறைமை நடைமுறைக்கு வந்ததிலிருந்து இற்றை வரை பதவியில் அமர்ந்த அனைத்து சிங்கள ஜனாதிபதிகளும் அதனையே செய்து வந்துள்ளனர்.

ஆதலால் யாப்பில் சாதகமான ஏற்பாடுகள் இருப்பினும் கூட சிங்கள இனவாத மனம் அதனை தமக்கு சாதகமான வகையிலேயே கையாளும் இயல்பு கொண்டது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இந்த வகையில் யாப்பை விடவும் இனவாத மனம் முக்கியமாக கருத்தில் கொள்ளப்படத்தக்கது. மேலும் உதாரணமாக 1947ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சோல்பரி அரசியல் யாப்பின் கீழுள்ள 29வது பிரிவின்படி சிறுபான்மை இனங்களுக்கு பாதகமான சட்டங்களை இயற்ற முடியாத வகையில் அப்பிரிவு பாதுகாப்பு வழங்குகிறது. ஆனால் அப்பிரிவு யாப்பில் இருந்தபோதும் அப்பிரிவை மீறி 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதாவது 3இல் 2 பெரும்பான்மை பலத்தால் உருவாக்கப்பட்ட யாப்பின் பிரிவை சாதாரண பெரும்பான்மை கொண்ட வாக்குகளினாலான சட்டத்தை இங்கு பிறப்பித்தார்கள். இது உண்மையில் ஓர் அரசியல் அமைப்பு மீறலாகும்.


இங்கு உண்மை என்னவெனில் தமிழருக்கு எதிராக அரசியல் அமைப்பை எந்தவகையிலும் பாதகமாக பயன்படுத்துவதற்கான மனத்திடத்தை சிங்களத் தலைவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பது தான். எனவே கடந்த காலத்திலாகினும் சரி, நிகழ்காலத்திலாகினும் சரி, எதிர்காலத்திலாகினும் சரி, ஒரு யாப்பில் ஏதாவது நல்லவற்றை செய்ய இடம் இருக்கிறதா என்பதை விடவும் தமிழருக்கு எதிரான நடைமுறைகளை பின்பற்றுவதற்கான மனநிலையை சிங்களத் தலைவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதே இங்கு பெரிதும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

ஆனால், இங்கு நடைமுறையில் இருக்கின்ற யாப்பில் ஜனாதிபதித் தேர்தலின் போது சிங்களத் தலைவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு தமிழ் வாக்காளர்களுக்கு உண்டு. இந்த வாய்ப்பை நாம் சரிவர பயன்படுத்தப் போகிறோமா இல்லையா என்பதே இங்குள்ள பிரதான கேள்வியாகும்.

அதாவது ஜனாதிபதித் தேர்தலின் போது ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகளை அளிப்பதற்குரிய மாற்று வாக்கு (Alternate Vote) என்று ஓர் ஏற்பாடு உண்டு. ஒரு வாக்காளர் ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கு தான் விரும்பும் முதலாவது நபருக்கு ஒன்று (1) என்ற இலக்கத்தை இடுவதன் மூலம் தனது முதலாவது வாக்கையும், அவர் தேர்ந்தெடுக்கப்படாது தோல்வியடையும் இடத்து இன்னொருவரை தெரிவதற்கான தனது இரண்டாவது (2) வாக்கை இடவும் இவ்வாறாக வழியுண்டு.


ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்படும் வாக்கில் 50.01 வீதத்திற்கு மேலான வாக்குகளை பெறுபவர் ஜனாதிபதியாக தெரிவாக முடியும். ஆனால் இரண்டுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடும்போது 50 வீதத்திற்கும் மேலான வாக்குகளை ஒருவர் பெற முடியாத போது அதில் யாரும் வெற்றி பெற்றவராக கொள்ளப்படமாட்டார். ஆனால் அப்படிப்பட்ட நேரத்தில் மூன்றாவது நபர் தேர்தலிலிருந்து விலக்கப்பட்டு, அவருக்கு அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டில் இரண்டாவதான மாற்று வாக்கு, மேல் உள்ள இருவரில் யாருக்கு அளிக்கப்பட்டுள்ளன என்று எண்ணப்படும். இம்மேலதிக வாக்குகளையும் கூட்டி யார் 50 வீதத்திற்கு மேல் வாக்குகளை பெறுகிறாரோ அவரே ஜனாதிபதி என அறிவிக்கப்படுவர்.

இந்நிலையில் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு தெளிவான வாய்ப்பு இருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் தமக்கென ஒரு வேட்பாளரை தேர்தலில் நிறுத்தினால் மேற்படி வாய்ப்பை பயன்படுத்த முடியும். இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் பார்ப்போம்.



# ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பு ஒரு வேட்பாளரை நிறுத்தவேண்டும்

-தனபாலசிங்கம்-



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு வேட்பாளரை நிறுத்துமிடத்து தமிழ் மக்களின் வாக்குகளை சிங்கள இனவாதத்திற்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளாக, தமது உரிமைகளை பேணுவதற்கு ஒன்று குவிக்கப்பட்ட வாக்குகளாக உலகிற்கு காட்ட முடியும்.


பதவியில் அமரும் ஜனாதிபதி அவ்வாறு நல் நோக்கில் தமது அதிகாரத்தை பயன்படுத்தாமல் அவ்வதிகாரத்தையே இன ஒடுக்கு முறையை மேற்கொள்வதற்கான வாய்ப்பாக கொண்டு செயற்பட்டு வந்துள்ளனர். 1978ஆம் ஆண்டு ஜனாதிபதி முறைமை நடைமுறைக்கு வந்ததிலிருந்து இற்றைவரை பதவியில் அமர்ந்த அனைத்து சிங்கள ஜனாதிபதிகளும் அதனையே செய்து வந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குக்களை 100 என எடுப்போம். இத்தேர்தலில் Mr.X, Mr.Y என இருபெரும் சிங்களக் கட்சிகளின் சார்பில் இரு சிங்களத் தலைவர்கள் போட்டியிடுவதாக வைத்துக்கொள்வோம். அதேவேளை தமிழ் பேசும் மக்கள் தரப்பில் Mr.T என ஒரு வேட்பாளர் போட்டியிடுவதாகவும் வைப்போம். இதில் Mr.X 45 வாக்குகளும் Mr.Y க்கு 35 வாக்குகளும், Mr.T க்கு 20 வாக்குகளும் கிடைப்பதாக வைப்போம். இதன் போது முதலாவது சுற்று வாக்கு எண்ணிக்கையின் போது யாரும் 50 சதவீதத்திற்கு மேல் வாக்குகளை பெறாதவர் என்ற வகையில் யாரும் வெற்றி பெற்றவராக அறிவிக்கமுடியாது.

அடுத்து மூன்றாவது வேட்பாளரான Mr.T தேர்தலில் இருந்து விலக்கப்பட்டு அவரது வாக்குச்சீட்டில் இரண்டாவதாக அளிக்கப்பட்ட வாக்குகள் மேற்கூறப்பட்ட இருவரில் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என தரம்பிரிக்கப்பட்டு அவரவரது வாக்குகளோடு சேர்க்கப்படும். உதாரணமாக இவரது வாக்குக்சீட்டில் 18 வாக்குகள் Mr.Y க்குரியது என இருந்தால் Mr.Y ஏற்கனவே பெற்ற 35 வாக்குகளோடு 18 வாக்குகளை கூட்டும்போது அவர் 53 வாக்குக்களை பெற்றவராய் வெற்றிபெற்றுவிடுவார்.

இதில் மற்றொரு ஏற்பாடும் உண்டு. அதாவது Mr.T க்கு வாக்களிப்போர் தமது வாக்குகளை இரண்டாவதான மாற்று வாக்கை அளிக்காது, Mr.T க்கு மட்டும் வாக்களித்ததோடு நிறுத்திவிட்டால் அந்த வாக்குகள் தேர்தலில் இருந்து விலக்கப்படும். இதன்படி Mr.T க்கு வாக்களித்த 20 வாக்காளர்களும் தமது 2வது வாக்கை அறவே பயன்படுத்தாதுவிட்டால், அந்த 20 வாக்குகளும் விலக்கப்பட்டு 80 வாக்குகளும் பின்பு 100 வாக்குகளாக கொள்ளப்படும். அதன்படி 45 வாக்குக்களை பெற்றவர் 56.25 வீத வாக்குகளை பெற்றவராக கொள்ளப்பட்டு வெற்றி பெறுவார்.

இதன்படி தமிழ் பேசும் மக்கள் தமக்கென ஒரு வேட்பாளரை நிறுத்தி தமது முதலாவது வாக்கை மட்டும் அளித்து விட்டு 2வது வாக்கை அளிக்காது விடலாம். அவ்வாறன சூழலில் முதலாவது சுற்று வாக்கு எண்ணிக்கையின் போது எந்த ஒரு சிங்களத் தலைவரும் வெற்றி பெறாது. 2வது சுற்று வாக்கு எண்ணிக்கையின் போது தான் வெற்றி பெற முடியும்.



இந்நிலையில் முதலாவது சுற்று எண்ணிக்கையில் வெற் பெற முடியாத ஜனாதிபதி என்ற பெயரையே பெறுவார். மேலும் அளிக்கப்பட்ட மொத்த வாக்கில் பெரும்பான்மையினரின் வாக்கைப் பெற்ற ஜனாதிபதி என்ற பெயரே அவருக்குரியதாக அமையும்.

அதேவேளை தமிழ் பேசும் தரப்பு வேட்பாளர், மேற்கூறப்பட்ட இரு சிங்கள வேட்பாளர்களில் ஒருவருடன் பேரம் பேசி அதன் அடிப்படையில் தமது 2வது வாக்கை தமக்கு சாதகமான பேரத்திற்கு ஒத்துக்கொள்பவருக்கு அளிக்க முடியும். இந்த வகையில் Mr.Y சாதகமான பேரத்திற்கு ஒத்துக்கொள்வாரேயானால் இரண்டாவது வாக்கை Mr.Y க்கு அளித்து 2வது சுற்று எண்ணிக்கையில் Mr.Yயை வெற்றிபெற வைக்க முடியும்.

அதாவது முதல் சுற்றில் 45 வாக்குக்களை பெற்ற Mr.X யை, 35 வாக்குகளைப் பெற்ற Mr.Y, 2வது சுற்றின் போது Mr.T யின் வாக்குச்சீட்டில் உள்ள 2வது 20 வாக்குகளையும் கூட்டுவதன் மூலம் 55 சதவீத வாக்குகளை பெற்றவராய் வெற்றி பெற முடியும். இங்கு சிங்கள மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஒருவரை தமிழ் பேசும் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றவராக்க முடியும். இது ஒரு நிகழ்தகவு கணிப்பாகும்.

இனி நாம் நேரடி நடைமுறைக்கு வருவோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு வேட்பாளரை நிறுத்துமிடத்து தமிழ் மக்களின் வாக்குகளை சிங்கள இனவாதத்திற்கு எதிராக அளிக்கப்பட்ட வாக்குகளாக, தமது உரிமைகளை பேணுவதற்கு ஒன்று குவிக்கப்பட்ட வாக்குகளாக உலகிற்கு காட்ட முடியும். இரண்டாவதாக தேர்தல் காலத்தில் உள்ள ஜனநாயக நடைமுறைகளை பயன்படுத்தி மக்களை சந்திக்கவும் அதன் மூலம் தமிழ்மக்கள் ஒன்று திரட்டப்பட்ட அரசியல் உணர்வை பேணவும் தமிழ் மக்களின் உரிமைக்கான வழிகளை வலுப்படுத்தவும் முடியும். எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு வேட்பாளரை நிறுத்துவதே சரியானதும், புத்திசாலித்தனமானதுமர்கும். தேவை ஏற்பட்டால் பேரம் பேசலின் போது தமது 2வது வாக்கை பிரயோகிப்பதைப்பற்றி சிந்திக்கலாம். எனவே இங்கு முதலாவதாக ஒரு வேட்பாளரை நிறுத்தி அதனை ஓர் அரசியல் செயற்பாட்டுக் களமாக பயன்படுத்துவது அவசியமாகும்.

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

## நையாண்டி கல்வயல் கனகசிங்கம்



வணக்கம் வணக்கம்
நான் கல்வயல் கனகசிங்கம்
எப்படி உங்கட பாடு?
ஏதோ என்ர பாடும் போகுது.

37 வருடமா இலங்கையில் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறதாக சொல்லுற நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு ஆப்பபடிக்கப் போவதாக பேச்செல்லாம் அடிபடுகுது. ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின்ர பிரதான கோசம் அது தான், அதைத் தொடர்ந்து நடக்கிற கூத்துகள் பற்றித் தான் நான் பேசுறன் பாருங்கோ.

ஜனாதிபதி தேர்தல் அறிவிச்சாச்சு ராஜபக்ச அரசில முதுகெலும்பா இருந்த மைத்திரி பொது எதிரணி வேட்பாளரானதால மகிந்தர் ஆடிப்போயிட்டாராம். நேர்மையான தேர்தல் நடந்தால் மகிந்தர் ஒருநாளும் வெல்லமாட்டார் எண்டு சனம் உறுதியா சொல்லுது. குறிப்பாய் தமிழ்ச் சனம் ராஜபக்ச எண்டவர் மண் கவ்வ வேணும், சிறையில குடும்பத்தோட கம்பி எண்ண வேணும் எண்ட அவாவில இருக்குதுகள் பாருங்கோ. முள்ளிவாய்க் காலில அண்ணன் தம்பி சேர்ந்து செய்த கொடூரங் களை 100 தலைமுறைக்கும் மறக்க முடியாது என்று சனங்கள் கொதிக்குதுகள். ஆனால் ராஜபக்ச அரசுக்கு எதிரான சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டம் எண்டு ஐ.தே.கட்சி சொல்லியிருக்கு பாருங்கோ.

ஜனாதிபதித் தேர்தல் பற்றி, சிவில் சமூக அமையத்தின் ஊடக பேச்சாளர் தம்பி குருபரன் தெளிவாச் சொல்லியிருக்கிறார். அரசாங்கங்களை மாத்துறதும் ஆட்களை மாத்துறதெண்டதைத் தவிர தமிழருக்கு உதால பயன் ஒன்றுமேயில்லையெண்டு விளக்கமளிச்சிருக்கிறார். உண்மைதான் பாருங்கோ அந்தப் பேயினைவிட இந்தப் பிசாசு பறவாயில்லை யெண்டு பாத்தால் கடைசியில் பேயை விட பிசாசு மோசமாக்கிடக்குப் பாருங்கோ.

இலங்கையின்ர ஜனாதிபதித் தேர்தலில சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக தாங்கள் போர்க்கொடி தூக்குவம் எண்டும் பொதுக்கட்சி வேட்பாளருக்குத் தான் ஆதாரவெண்டும் தமிழரசுக் கட்சியின்ர "மாபெரும் தலைவர்" "மாவை" 25ம் திகதி ஊடகத் துக்கு சொல்லுறார். ஆனால் தமிழரசுக் கட்சியின்ர முன்னாள் தலைவரும் சிங்கக்கொடி காத்த வீரனு மான சம்பந்தன்ஐயா யாருக்கு ஆதரவு என்று இன் னும் முடிவு செய்யவில்லை என்று 26ம் திகதி பேப்ப ருக்கு சொல்லியிருக்கிறார். அப்பிடி எண்டால் மாவை வெறும் பேப்பர் தலைவரோ?. சிங்கக் கொடி வீரன் முடிவு எடுக்கும்போது கட்சி பிரமுகர்களை கூட்டி அவையளிட்ட கருத்து கேட்காவிட்டாலும் தன்ர (இந்தியாவின்) நிலைப்பாடு என்ன எண்டு மாவைக்கு கூட சொல்லுறதில்லை போலும், ராஜபச்ச தன்னட்ட இருக்கிற பலத்தாலும், அதிகாரத்தாலும் காட்டாட்சி செய்யுறார். சம்பந்தர் இந்தியாவிட்ட இருக்கிற பலத்தில கட்சிக்குள்ள சர்வாதிகாரமாக எல்லா முடிவுகளையும் எடுக்கிறார்.

முன்னொரு காலத்தில குண்டுதுழைக்காத கார் குடுத்ததுக்கு பிரதியுபகாரமாக சிங்கக் கொடி காத்த வீரன் தமிழருடைய ஆதரவு உங்களுக்குத் தான் எண்டு தன்ர பழைய நண்பி சந்திரிக்கு உறுதி மொழி வழங்கிட்டதாக கேள்வி. நண்பி மேலும் ஒரு உதவி கேட்டாவாம் என்னவெண்டால் அரசியல் தீர்வு விசயத்தில நீங்கள் 13றகுள்ளயே திருப்திப்பட்டுக் கொள்ளுங்கோ அதுக்குமேல ஒண்டும் கேளா தேங்கோ எண்டு இவரும் ஓம் எண்டுட்டாராம். அதே வேளை தன்ர எடுபிடியாளிட்டை இந்த டீலிங் பற்றி நீங்கள் மூச்சு விடக்கூடாதெண்டும் சொல்லிப் போட்டாராம்.

இதுக்குள்ள பின்கதவு எம்பியையும் காய் வெட்டிப் போட்டுத் தான் சிங்கக்கொடி வீரன் இரகசியமா சந்திப்புகளுக்கு போறாராம் ஏனெண்டால் அவர் விசயத்தை ஆளுங்கட்சிக்கு சொல்லிப்போடுவாராம். பிறகு பிளான் எல்லாம் பிழைச்சுப் போடும் எண்டு தானாம்.

அது ஒருபுறம் இருக்க தமிழ் நாட்டிற்கு சுற்றுலா போன நம்மட முதலமைச்சர் , ஒருத்தரையும் தமிழீழம் கேட்காதயுங்கோ எண்டு அங்கயும் ஆலோசனை சொல்லிபோட்டு வந்திருக்கிறார். ஒரு பக்கம் 13 இல் ஒன்றும் இல்லை எண்டுறார். அதை திருத்தியும் பயனில்லை எண்டுறார். மாகாணசபையால ஒரு பலா பலனும் இல்லை எண்டுறார். ஆரம்பமே சரியில்லை எண்டுறார். அதே வாயால தமிழகம் தமிழீழம் பற்றிப் பேசக் கூடாதெண்டுறார். உவர் இந்தியாவுக்குப் போனது தமிழ் மக்களது அவலங்களையும், கோரிக்கைகளையும் இந் திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்த அரசின்ர ஆதரவை பெறுவதற்கோ அல்லது எங்களுக்காக குரல் கொடுக்கிற தமிழக உறவுகளை வாய் மூடப் பண்ணவோ போனவர் எண்டு சந்தேகமா கிடக்கு. உண்மையில மக்களில அக்கறை இருந்திருந்தால் ஐ.நா விசாரணைக் குழுவுக்கெல்லோ சாட்சியமளித் திருப்பார். மக்களையும் சாட்சியம் கொடுக்க சொல்லியிருப்பார்.

வடமாகாண சபை கையாலாகத செக்குமாடு எண்டு சனத்துக்கு இப்ப நல்ல தெளிவாயிட்டுது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்காரர் சொல்லச் சொல்ல கேட்காமல் உதுக்குள்ள போட்டாங்களே எண்டு சனம் தலையில அடித்துக்கொள்ளுது. அமைச்சர்மாருக்கு சொகுசுக் காரும், மாதம் லட்சத்தைத் தாண்டின வரவும் எண்டதைத் தவிர இப்ப அதில ஒண்டுமேயில்லை. தாங்கள் தங்களின்ர சொந்த அலுவலைப்பாக்க இருட்டினாப்பிறகு ஆளுனரைப்பாத்து காரியம் சாதிக்கிற கதைகள் சொல்லிமாளாது அதுவும் மச்சான் மாமனின்ட அலுவல் எண்டால் எவற்றை காலிலயும் விழ அவை தயார்.

ஆனால் அடுத்த நாள் ஆளுனரை மாத்த வேணும். பிரதம செயலாளரை மாத்த வேணுமெண்டு ஊடகங்களிற்கு பக்கம் பக்கமாக பேட்டி கொடுப்பினம். அது சனத்தை ஏமாத்துற வேலை. அரசியல் ஆய்வாளர் ஒருவர் சொன்ன மாதிரி அது இரட்டை முகம் காட்டுகிற வாழ்க்கை பாருங்கோ.

பேரவைத்தலைவர் புதிசா ஒரு இணக்க அரசியல் விளக்கம் கொடுத்திருக்கிறார் பாருங்கோ. கேவலத்திலும் மிகப்பெரிய கேவலம் பழகுற பழக் கத்தை வச்சுத்தானாம் ஆளுனர் அலுவல்களுக்கு அனு மதி தாறாராம். அப்ப அவரோட நல்ல உறவு வச்சிருக் கிற தியேட்டர் காரருக்கு புள்ளடியைச் சனம் அப்பவே குத்தியிருக்கலாம்தானே பாருங்கோ. புள்ளடி போட்ட சனம் பாவம் பாருங்கோ.

உண்மையில் கூட்டமைப்புக்காரர் நல்ல பிழைப்புவாதியள் பாருங்கோ. மாகாண சபையில சிவாஜிலிங்கம் கொண்டுவந்த இனஅழிப்பு என்ற தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்தவர்கள், ராஜபக்ச அரசுக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு சாட்சியம் தருமாறு ஐ.நா கோரியிருந்தபோது மௌன மாக இருந்து அரசை காப்பாற்றியவர்கள். அடுத்த தேர் தல்ல வெல்லுறதுக்கான உத்தியளை கையாளத் தொடங்கிட்டினம். மாமனிதர் ரவிராஜ்க்கு திடீரென நினைவஞ்சலிக்கூட்டம் நடத்திச்சினம். தையில இருந்து சாத்வீகப் போராட்டம் என்ற மாவையினுடைய அறிவிப்பு. எல்லாம் பம்மாத்து பாருங்கோ. செத்தவங் களை வைத்து பிழைக்கிறதில நாங்கள் கிள்ளாடியள் என்பது ஒவ்வொரு முறையும் நடைமுறையில கூத்த மைப்புக்காரர் காட்டிக் கொண்டு தான் இருக்கினம்.

இன்னொரு பக்கம் அரசாங்கம் திட்டமிட்டு துல்லியமாக நில சுவீகரிப்பை செய்து கொண்டுதான் இருக்குது. நில சுவீகரிப்புக்கு எதிராக எழுப்பின குரல் கள் ஓய்ந்து போய்க்கொண்டிருக்கிறது அப்பட்டமாகத் தெரியுது. இன்னொரு பக்கம் பொறுப்பில்லாமல் எங்கட சனமும் காணிய வித்து தொலைச்சுப் போடுவ மெண்டு நிக்குது.

# நையாண்டியார் பதில்கள்

**சி.பாலகுமார்**
**உடுவில், யாழ்ப்பாணம்**

**கேள்வி:** பாராளுமன்ற தலைகள் மில்லியன்களில் விலை போகத் தொடங்கி விட்டதே?

**பதில்:** நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள். மில்லியன்கள் பழைய செய்தி இப்போது பில்லியன்களில் விலை பேசப்படு கின்றதாம். அதிலும் பாராளுமன்றம் உரிய காலத் திற்கு முன்னதாக கலைக்கப்பட்டு விட்டால், ஓய்வூ தியம் இல்லாமல் போய்விடுமே என்று கூட்டமைப்பு தலைகள் சில கவலை கொண்டுள்ளனவாம்.

**தி. போன்பொஸ்கோ**
**மன்னார்**

**கேள்வி:** வட மகாண சபை உறுப்பினர்களிற்கு இந்திய அரசின் கார் வருகிறதாமே?

**பதில்:** அட நீங்கள் ஒரு புறம் கார்கள் வந்து சேரும் முன்பே குடுமிப்பிடி சண்டை தொடங்கி விட்டாதாம். ஏற்கனவே சொகுசுக் காரில் பறந்து பறந்து மக்கள் பணியாற்றும் பேரவை தலைவர் மற்றும் அமைச் சர்கள் சொந்தக் கார் வேணுமென கேட்கிறார் களாம். இன்னொரு புறம் தருவதானால் அனை வரிற்கும் தர வேண்டும், இல்லாவிடின் வேண்டா மென இரகசிய கடிதங்கள் பறக்கிறதாம். ஒரு மில்லியன் கடன், ஆளுக்கொரு கார் பெமிட் எனும் பேரத்துடன் மகிந்தவை சந்திக்க காவடி தூக்கிய உறுப்பினர்கள் பற்றி அறியவில்லை போலும்.

**ச.சிவம்**
**சம்மளம்குளம், ஒட்டுசுட்டான்.**

**கேள்வி:** மகிந்த ராசா சாம்ராஜ்ஜியம் அவ்வளவு தானா?

**பதில்:** மாற்றம் ஒன்றே மாறாதது. முப்படைகளுக்கு அப்பால், நிழல் உலக ஆயுதக்குழுக்களை தம் வசம் வைத்திருக்கும் அணியுடனேயே பொது வேட்பாளர் மோத வேண்டியிருக்கும். ஆயினும் ஆட்சி மாற்றத்திற் கான திரை மறைவு வேலைகளினில் ஈடுபட்டுள்ள மேற்குலக ஆசிகள் பலமாக அமையலாம்.

**சி.புனிதரூபன்**
**கொக்குவில், யாழ்ப்பாணம்**

**கேள்வி:** வடக்கில் இடம் பெற்ற பல மில்லியன் ஊழல் மோசடிகள் வெளி வந்த போதும் தண்டிக்கப்பட்ட தாக இல்லையே?

**பதில்:** சுட்டுக்களவானிகள் தங்கள் கதிரைகளை தக்க வைப் பதில் தெளிவாக இருக்கிறார்கள். பழம் தின்றவனை தப்பிக்கவிட்டு கொட்டை சூப்பினவனை பிடித்த கதை தொடர்கின்றது, அதிலும் வட மாகாண சபையின் தலை நரைத்ததுகள் சில ஏற்கனவே கொட்டை போட்ட அனுபவங்களை கொண்டுள்ளதால் அவை யும் காவல் தெய்வங்களாகி இருப்பதாக கேள்வி

**தி.தட்சாயினி**
**கொக்கிளாய், மணலாறு**

**கேள்வி:** தமிழர்களின் இதய பூமி மணலாறு சத்தமின்றி பறி போகின்றதே?

**பதில்:** ஒரு மாதிரியாக வட மாகாண சபை அதற்கும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி விட்டது, அதன் பிரதியை ஜனாதிபதிக்கு அனுப்பி விட்டதாக கௌரவ அவைத் தலைவர் பத்திரிகைகளிற்கு தமிழில் செய்தியும் அனுப்பிவிட்டார். இனி என்ன பிரச்சினை தீர்ந்த மாதிரி தான். இதுவும் வழமையான ஏமாற்று வேலைதான்.

# எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்மண்ணே!



## அழிக்கப்பட்ட தமிழ்க்கிராமம் - கிண்ணையடி -

**வா**ழைச்சேனை பிரதேசத்தைப் பொறுத்த வரையில் மீறாவோடை கிராமத்தை போன்றே அதனை அண்டிய கிராமங்களும் மிகவும் முக்கியமானதாகும். இதில் கிண்ணையடி, கறுவாக்கேணி, சுங்கான்கேணி ஆகிய கிராமங்கள் பல தடவைகளில் தாக்கப்பட்டதுடன் பல்வேறு இழப்புகளுக்கும் முகம் கொடுத்துள்ளன.

இதில் கிண்ணையடி கிராமம் சந்தித்த பாதிப்புக்கள் அதிகம் இதற்கு சில காரணங்களும் உள்ளன. கிண்ணையடிக் கிராமத்தில் ஓடும் வாவிக்கு அப்பால் உள்ள பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. வாவிக்கு அப்பால் உள்ள பிரம் படித்தீவு, சாராவெளி, முருங்கன் தீவு ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் கிண்ணையடிவாவி மூலமே பிரயாணம் செய்வது வழக்கம் இக்கிராமங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் கிண்ணையடியில் வாவி போக்குவரத்து அமைந்திருந்தாலும் இராணுவத்தினருக்கு இக் கிராமம் மீது ஒரு சந்தேகம் இருந்து கொண்டே வந்தது.

**கண்ணில் தென்பட்டவர்கள் மற்றும் வீடுகளில் இருந்தவர்களை பிடித்துச் சென்று சுங்கான்கேணி சாராயத் தவறணைக்கு முன்பாக இருந்த காட்டினுள் வெட்டிப் போட்டனர். அங்கு ஒரு சிலரின் சடலங்கள் கிடந்து கண்டெடுக்கப்பட்டன. ஆனால் பலரைக்காண வில்லை இந்த நடவடிக்கையின்போது இக் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 60 பேர்வரை காணாமல்**

விடுதலைப்புலிகள் இரவு வேளைகளில் இந்த வாவியூடாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுப்பகுதிகளிற்கு செல்வதாகவும். புலிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் கிண்ணையடியில் இருந்து இந்த வாவிமூலமாகவே புலிகளின் பகுதிகளுக்கு கொண்டு செல்வதாகவும் இராணுவத்தினருக்கு சந்தேகமிருந்து வந்தது.

கடந்த 1984 ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே இச் சந்தேகம் இராணுவத்தினருக்கு இருந்தது. அப்போது இப்பகுதியில் கடமையில் இருந்த விசேட அதிரடிப் படையினர் இக்கிராமங்களில் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியிருந்தனர்.

அடிக்கடி இவ்வாறான தாக்குதல்களால் பொது மக்களே அதிகம் இலக்காக வேண்டியிருந்தது. இதனால் இப்பகுதி மக்கள் இரவு வேளையில் நடமாடவோ வாவியில் மீன் பிடிக்கவோ முடியாத நிலை இருந்தது. இந்த நிலை கடந்த வருடம் அமுலுக்குவந்த சமாதான ஒப்பந்தம் வரையான காலம் வரை நீடித்திருந்தது.

இதனால் இராணுவ முகாம் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள பல வீடுகளைக்கொண்டு அமைக்கப்பட்டது. ஒரு நாள் திடீரென அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் அங்கிருந்த பெரிய கல்வீடுகள் சிலவற்றிலிருந்து குடியிருப்பாளர்களை எழுப்பிவிட்டு முகாம்களை அமைத்தனர் இதனால் அச்சம் அடைந்த அப்பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டுவெளியேறினர். இதன் பின்னர் சுமார் 35 வீடுகளை இராணுவத்தினர் தமதாக்கி கொண்டனர்.

இந்த இராணுவமுகாம் அமைக்கப்பட்டதால் பாடசாலையும் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது . எனினும் பாடசாலையை அக்கட்டிடத்திலேயே இயக்க வேண்டுமென இராணுவத்தினர் கடுமையான உத்தரவு பிறப்பித்ததால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலை தொடர்ந்து இயங்கியது. ஆனால் பாடசாலைக்குச் செல்லும் இரு வீதிகளில் ஒரு வீதி மறிக்கப்பட்டதுடன் ஒரு வீதியால் மாத்திரம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல பணிக்கப்பட்டனர்.அத்துடன் இவ் வீதி வழியாகவே வாவிக்கு அப்பால் உள்ள மக்கள் சென்று வரவேண்டும் எனவும் பணிக்கப்பட்டனர் இதனால் இந்த வாவி மூலம் .வயலுக்குச் செல்லும் விவசாயிகள் மற்றும் வேறு தேவைகளுக்குச் செல்பவர்கள் கடுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் கைது செய்யப்படுவதும் தாக்குதலுக்கு உள்ளாவதும் தொடர்ந்தது.

அது மாத்திரம் இன்றி கிண்ணையடிக் கிராமத்து மக்கள் எவ்வித காரணமும் இன்றி அடிக்கடி கைது செய்யப்படுவதுடன் தாக்குதல்களுக்கும் உள்ளாகினார்கள் இதை விட அடிக்கடி படைமுகாமில் இருந்து ஏவப்படும் எறிகணைகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டினால் பலர் காயமடைவதுடன் சிலர் பலியாக வேண்டிய நிலையும் ஏற்பட்டது இதனால் இந்த வாவியில் மீன்பிடிக்க முடியாத நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டது.

இவ்வாறான நிலையினால் இக்கிராமத்தை விட்டு பலர் இடம் பெயர்ந்து சென்றனர். இடம்பெயர்ந்து சென்றவர்களின் வீடுகள் இராணுவத்தினரால் உடைத்து சேதமாக்கப்பட்டன இந் நிலையில் 1996 ஆம் ஆண்டு இப் படைமுகாம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

இத் தாக்குதலை அடுத்து இம் முகாமின் பாதுகாப்பிற்கென வாழைச்சேனையில் பல இடங்களிலும் உள்ள இராணுவமுகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை தாக்குதலினால் முகாமை அண்டிய பகுதியில் உள்ள குடியிருப்புக்கள் பாதிப்புக்கு உள்ளாகின. பல வீடுகள் எறிகணை தாக்குதல்களினால் சின்னாபின்னமாகின. இத் தாக்குதலினால் பத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் பலியானதுடன் பலர் காயமடைந்தனர்.

**விசேட அதிரடிப்படையினர் இக் கிராமங்களில் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியிருந்தனர். அடிக்கடி இவ்வாறான தாக்குதல்களால் பொது மக்களே அதிகம் இலக்காகவேண்டியிருந்தது. இதனால் இப்பகுதி மக்கள் இரவு வேளையில் நடமாடவோ வாவியில் மீன் பிடிக்கவோ முடியாத நிலை**

இத் தாக்குதலை அடுத்து இரவோடு இரவாகவும் விடிந்த பின்னரும் வீடுகளை விட்டுவெளியேறிய மக்கள் பின்னர் போர் முடியும் வரை தமது வீடுகளுக்கு திரும்பவே இல்லை அவர்கள் வாழைச்சேனை, சுங்கான்கேணி போன்ற இடங்களில் தற்காலிகமாக தங்கிவிட்டனர். இத் தாக்குதல் நடந்து இருவாரங்களின் பின் இந்த முகாம் மீது மீண்டும் புலிகள் அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.

இதன் பின் இப் படை முகாம் மீது அடிக்கடி விடுதலைப்புலிகள் வாவிக்கு அப்பால் இருந்து எறிகணை தாக்குதல் நடத்திவந்தனர். இதற்கு படையினர் பதில் தாக்குதலாக பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கியே தாக்குதல் நடாத்தினர்.

இவ்வாறான சம்பவங்களினால் அங்கு வாழ்ந்த சுமார் 600 குடும்பங்களில் 400ற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து பல வருடங்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களின் வீடுகள் உடைக்கப்பட்டதுடன் அவர்களின் தொழில்களும் பாதிக்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு கிண்ணையடிக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினர் வாவியில் மீன்பிடித்துக்கொண்டு நின்றவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதனால் 06 பேர் அவ்விடத்திலேயே பலியாகினர். இவர்களின் சடலங்கள் தோணியில் போடப்பட்டு மண்ணினால் மூடிய நிலையில் வாவியில் கிடந்து உறவினர்களால் கண்டெடுக்கப்பட்டது. அன்றிலிருந்து இக் கிராமத்தில் அடிக்கடி இவ்வாறான துப்பாக்கி பிரயோகம் இடம் பெறுவதும் , எறிகணைத்தாக்குதல் இடம் பெறுவதும் தொடர்ந்ததால் சுமார் ஐம்பது பேர் வரைகொல்லப்பட்டனர்.

கிண்ணையடி கிராமத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் போன்றே அதற்கு அருகில் உள்ள சுங்கான்கேணி மற்றும் கறுவாக்கேணி கிராமங்களிற்கும் ஏற்பட்டது. இக் கிராம மக்களும் அடிக்கடி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதுடன் காணாமலும் போயினர். இக்கிராமத்தில் அடிக்கடி எறிகணைகள் வந்து வீழ்ந்தன.

90 ஆம் ஆண்டில் இக் கிராமங்கள் பெரும் இழப்பைச் சந்தித்தன. 90 ஆம் ஆண்டில் 02ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளை

விரட்டியடிக்கும் வகையில் நகரை நோக்கி பல வழிகளால் படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஒரு மார்க்கமாக மின்னேரியில் இருந்து விசேட படையணி ஒன்று மட்டக்களப்பு கொழும்பு வீதிவழியாக நகர்த்தப்பட்டது.

புலிகள் மக்களின் இழப்பைக் கவனத்தில் கொண்டு பின்வாங்கிக் கொண்டனர்

புலிகளின் எதிர்த்தாக்குதல் ஏதும் இல்லாத நிலையில் இப்படையணி ஓட்டமாவடியை கடந்து பொற்றோல் நிலைய சந்தியை அடைந்தது. அந்தவேளையில் கறுவாக்கேணி மற்றும் சுங்கான்கேணி ஆகிய கிராமங்களின் ஊடாகவும் படையினர் சென்றனர் இவர்கள் கண்ணில் தென்பட்டவர்கள் மற்றும் வீடுகளில் இருந்தவர்களை பிடித்துச் சென்று சுங்கான்கேணி சாராயத் தவறணைக்கு முன்பாக இருந்த காட்டினுள் வெட்டிப்போட்டனர். அங்கு ஒரு சிலரின் சடலங்கள் கிடந்து கண்டெடுக்கப்பட்டன. ஆனால் பலரைக்காணவில்லை இந்த நடவடிக்கையின்போது இக் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 60 பேர்வரை காணமால் போயுள்ளனர். அது மட்டுமின்றி ஆட்கள் இல்லாத வீடுகள் சேதமாக்கப்பட்டதுடன் உடமைகளும் காணாமல் போயிருந்தன.

இப்படை நடிவடிக்கைக்குப் பின்னர் கறுவாக்கேணி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பெரும் அச்சத்துடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.பெற்றோல் நிலையச் சந்தியிலிருந்த பிரதேச செயலக கட்டிடத்தில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டதால் கறுவாக்கேணி கிராமத்தில் வாழ்ந்த பல குடும்பங்கள் இடம் பெயரத்தொடங்கின. அத்துடன் எல்லைப்பகுதி மக்களும் அச்சத்தினால் இடம் பெயர்ந்தன.

கறுவாக்கேணியை பொறுத்தவரை இங்குள்ள அதிகமான குடும்பங்கள் முன்பு ஓட்டமாவடியிலேயே வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு காணி நிலபுலங்கள் இருந்தன. பிள்ளையார் ஆலயம், மயானம் என்பனவும் இருந்தன. தமிழர்களும், முஸ்லீம் மக்களும் மிகவும் அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால்1985ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட கலவரங்களை அடுத்து அங்கிருந்த தழிழர்கள் இடம்பெயரத் தொடங்கினர். இவர்கள் கறுவாக்கேணியில் இன்று வரை வாழ்ந்து வருகின்றனர். ஓட்டமாவடியில் முன்பு இருந்த பிள்ளையார் ஆலயப் பகுதியில் இன்று பொதுச் சந்தை அமைக்கப்பட்டுள்ளதுடன்.மயானத்தில் தபாலகமும், பிரதேசசெயலகமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உண்மை அங்குள்ள பலருக்கு தெரிந்தவிடயம். தமிழர்களும், முஸ்லிம்களும் அன்று ஒற்றுமையாக வாழ்ந்ததை இரு சமூகத்திலுமுள்ள முன்னோர்களில் பலர் இன்றும் நினைவு கூறுகின்றனர். ●


# மாவீரர்கள் தமிழர்கள் என்பதால் நினைவுகூரத் தடை விதிப்பு


## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழர்கள் என்பதால் தமிழர்களுக்கு எதிரான இனவாத சிந்தனையின் அடிப் படையிலேயே அவர்களை நினைவு கூருவதற்கான உரிமைகளை அரசு மறுக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் மீதான கொலை அச்சுறுத்தலுக்கு கடும் கண் டனத்தை வெளியிட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் கற்பிக் கும் ஒரு விரிவுரையாளரதும், நான்கு மாணவர்களதும் பெயர்களை குறிப் பிட்டு அவர்களை சுட்டுக் கொல்லு வோம் என்று எச்சரிக்கை செய்யும் துண்டுப் பிரசுரங்கள் யாழ் பல்கலைக் கழக வளவினுள் ஒட்டப்பட்டுள்ளன. கலைப்பீடத்திலுள்ள ஆங்கிலக் கற்கை கள் துறைத் தலைவரும் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவருமான அமிர்தலிங்கம் இராசகுமாரன் மற்றும் கலைப்பீடத்தில் ஊடகற்கைநெறியில் கல்வி பயிலும் 3ம் வருட மாணவர் களான துரைராசா தமிழ்ச்செல்வன், கணேசலிங்கம் நிவாஸ், தங்கராசா ஐங்கரன் மற்றும் புவியியல்துறையில் 3ம் வருடத்தில் கல்வி பயிலும் பிலிப் பேரிஸ் பிறிட்டோ ஆகியோரது பெயர் கள் குறிப்பிடப்பட்டு சுட்டுக் கொல்லு வோம் என கொலை மிரட்டல் விடுக்கப் பட்டுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் கள் மற்றும் மாணவர்கள் மீதான இக் கொலை அச்சுறுத்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின் றோம்.

கொச்சைத் தமிழில் எழுதப் பட்டுள்ள அந்த துண்டுப் பிரசுரத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை நடாத்தக் கூடாதென்றும் அவ்வாறு நடாத்தினால் சுட்டுக் கொல்லுவோம் என்றும் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசும், இராணுவத்தினரும் மட்டுமே மாவீரர் தின நிகழ்வுகளை நடாத்தக் கூடாதென தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்ற நிலையில் 21 27 வரையான மாவீரர் தின வாரகாலத்தில் மாவீரர்களை நினைவு கூரக்கூடாதென அச்சுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டமை யரனது ஸ்ரீலங்கா இராணுவ உளவுத்துறையினரே மேற்கொண்டி ருக்க வேண்டும் என நாம் சந்தேகிக் கின்றோம்.





கொலை அச்சுறுத்தல் விடுத்து யாழ். பல்கலையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள்.

கடந்த சில நாட்களாக மேற்படி மாணவர்கள் தொடர்பில் இனந் தெரியாத நபர்களால் விபரங்கள் திரட் டப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ். பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கைகள் பிரிவில் மூன்றாம் வருடத்தில் கல்வி பயிலும் க.நிவாஸ் என்பவரது வீட்டிற்கு மூன்று உந்துருளிகளில் முகத்தை மறைத்து தலைக் கவசம் அணிந்து சிவில் உடையில் சென்ற இனம் தெரி யாத நபர்கள் ஐந்துபேர் நிவாசை விசா ரணை என்ற பெயரில் கடத்திச் செல்ல முயன்றுள்ளனர். எனினும் நிவாஸ் சாதூரியமாக நடந்து கொண்டதன் மூலம் அந்தக் கடத்தல் முயற்சி யிலிருந்து தப்பித்துக் கொண்டார். நிவாஸ் அகப்படாத நிலையில் குடும்பத் தினரை அந்த மர்மநபர்கள் அச்சுறுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

சர்வதேச சட்டங்களின் பிரகாரம் போரில் இறந்தவர்களை நினைவு கூரு வதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. போரில் இறந்த ஜே.வி.பி உறுப்பினர்களை நினைவு கூர பூரண அனுமதியும், சுதந்திரமும் வழங்கி யுள்ள ஸ்ரீலங்கா அரசானது உயிர்த் தியாகம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவு கூர அனுமதி மறுக்கிறது. விடுதலைப் புலிகள் தமிழர்கள் என்பதால் தமிழர்களுக்கு எதிரான இனவாத சிந்தனையின் அடிப்படையி லேயே அவர்களை நினைவு கூருவதற் கான உரிமைகளை அரசு மறுத்து வரு கின்றது.

நினைவு கூருவதற் கான உரிமையை மறுத்துள்ளமை மட்டு மன்றி தமிழர்கள் மீது குறிப்பாக பல்கலைக் கழக சமூகத்தின் மீது அரச பயங்கர வாதத்தை யும் கட்டவிழ்த்து விட் டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற, இடம் பெற்றுவரும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசா ரணை ஒன்று இடம்பெற்று வரும் நிலையில் கூட அரசு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை குறைப்ப தாகவோ கைவிடுவதாகவோ இல்லை. இவ்விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய அக்கறை செலுத்தி மாணவர்களையும் விரிவுரையாளர் களையும் பாதுகாக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய அக்கறை செலுத்தி பல் கலைச் சமூகத்தை பாதுகாக்க வேண் டும் எனக் கோருகின்றோம் என அக் காட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் பொதுச்செயலாளர் ஆகி யோர் இணைந்து விடுத்துள்ள கண் டண அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் கொலைக்கு கண்டனம்

-த.தே.ம.முன்னணி பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் -

மன்னார் மாவட்டம் வெள்ளாங் குளம் பிரதேசத்திலுள்ள கணேசபுரம் என்றகிராமத்தில் வசித்துவந்த முன்னாள் தமிழீழ காவல்துறையில் முக்கியபொறுப்பில் இருந்தவரெனக் கூறப்படும் கிருஸ்ணசாமி நகுலேஸ் வரன் (வயது 40) புதன்கிழமை (12-11-2014) இரவு 8.00 மணியள வில் அவரதுகாணியில் வேலை செய்துகொண்டிருந்த போதுசுட்டுப் படுகொலைசெய்யப்பட்டுள்ளார். இப் படுகொலைச் சம்பவத்தினை தமிழ்த் தேசியமக்கள் முன்னணியினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழீழவிடுதலைப் புலிகளது ஆளுகையின் கீழ் வன்னிப்பிரதேசம் இருந்த காலப்பகுதியில் அங்கு நடைமுறையிலிருந்த தமிழீழ காவல்துறை என்ற கட்டமைப்பில் அதிகாரியாகப் பணியாற்றிதாகக் கூறப்படும் நகுலேஸ்வரன் 2009 மே மாதத்தின் பின்னர் இராணு வத்தினரால் கைதுசெய்யப்பட்டு ஸ்ரீலங்கா அரசினால் "புனர்வாழ்வு" அளிக்கப்பட்டதாகக் கூறி சமூகத் துடன் இணைக்கப்பட்டிருந்தார்.

புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுதலையான பின்னர் தனது மனைவி, பிள்ளைகள் மற்றும் உற் றார் உறவினர்களுடன் வாழ்ந்து வந்த நிலையிலேயே சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இலங் கைத் தீவு முழுவதும் ஸ்ரீலங்கா அரசின் பூரண கட்டுப் பாட்டிலுள்ள நிலையில் ஸ்ரீலங்கா ஆயுதப் படை யினரிடமும்,பொலீசாரிடமும் மட் டுமே ஆயுதங்கள் காணப்படு கின்றன. அதிலும் வடமாகாணத் தில் சுமார் 15 இராணுவ டிவிசன்கள் நிலைகொண்டுள்ளதுடன், இப்பிர தேசம் உளவுத் துறையினரது அதி உச்சகண்காணிப்பின் கீழும் உள் ளது. அதுமட்டுமன்றி "புனர்வாழ்வு" அளிக்கப்பட்டதாக கூறி சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போரா ளிகள் அதிதீவிரமாக கண் காணிக்கப்பட்டும் வருகின்றனர்.

இவ்வாறான புறச்சூழ்நிலையில் நகுலேஸ்வரன் படுகொலை செய்யப் பட்டுள்ளார், இக் கொலைக்கு ஸ்ரீலங்கா அரசாங்கமே முழுப் பொறுப்பாகும்.

இக் கொலைதொடர் பாக ஸ்ரீலங்கா அரசு நியாயமான விசார ணைகள் எதனையும் நடாத்தும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. எனவே இலங்கையில் இடம்



பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொண்டு வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இக்கொலை தொடர் பாகவும் முழுமையான விசாரணை ஒன்றினை மேற்கொள்ளவேண்டும் எனக் கோருகின்றோம்.

கிராமீய உழைப்பாளர் சங்கத்தலைவரான என். இன்பம் குப்பிழான் தெற்கினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். பள்ளிப்படிப்பை முடித்த காலம் தொடக்கம் சுமார் 30 வருடங்களாப் பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார். 1987 ஆம் ஆண்டு தொடக்கம் கிராமீய உழைப்பாளர் சங்கத் தலைவராக இருக்கும் இவர் தேசிய மீனவ ஒத்தழைப்பு இயக்கத்தின் யாழ்மாவட்ட இணைப்பாளராகவும், தமிழ் சிவில் சமூக அமையத்தின் செயற்பாட்டாளராகவும் பணியாற்றுகின்றார்.

கிராமீய உழைப்பாளர் சங்கம் மேற்கொண்ட கூலி உயர்வுப் போராட்டம், காணிப் போராட்டம், மது ஒழிப்புப் போராட்டம், பாதைப் போராட்டம் என்பவற்றைத் தலைமையேற்று வழி நடத்தியவர். தேசிய விடுதலை இயக்க வெகுஜனப் போராட்டங்கள், இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றப் போராட்டங்கள், சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டங்கள் என்பவற்றிலும் அமைப்பு ரீதியாக பங்கு பற்றியிருக்கின்றார்.

"இதயநாதம்" எனும் பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றியதோடு மனித உரிமைச் செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்டினார். நேபாளத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் சம்பந்தமான மாநாட்டிலும் கலந்து கொண்டிருக்கின்றார். இவர் ஒரு நல்ல நடிகரும் நாடக இயக்குனரும் ஆவார். கிராமீய உழைப்பாளர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்திய " சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகத்தில் முதன் முதலாக நடித்த இவர் " அவலங்கள்" தெருவழி நாடகத்திலும் நடித்திருக்கின்றார். அதே வேளை " எழுச்சி கொள்வோம்" "உண்மைகள்", "வாழவைத்த மண்", "ஓநாயும் சேவலும்" என்கின்ற நாடகங்களை தானே இயக்கி மேடையேற்றியிருக்கின்றார். இதில் "எழுச்சி கொள்வோம்" என்ற நாடகம் தேசிய விடுதலைப்போராட்டத்தில் கிராமீய உழைப்பாளர்கள் பங்கு பற்ற வேண்டும் என்பதை வற்புறுத்தியது.

காக கிராமீய உழைப்பாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. புன்னாலைக்கட்டுவன் மத்தாளோடை கூலி உயர்வுப் போராட்டம் கிராமீயஉழைப்பாளர் சங்கத்தினை வெளி உலகத்திற்கு கொண்டு வந்தது. தமக்கு கூலி உயர்வு கட்டாயம் வழங்கப்படல் வேண்டும் என்பதில் வறிய விவசாயிகளும் கூலி உழைப்பாளர்களும் உறுதியாக நின்றனர். தொடர்ந்து புத்தூர் காணிப்போராட்டம், உரும்பிராய் காணிப்போராட்டம், குப்பிழான், புன்னாலைக்கட்டுவன், தெற்கு பாதைப்போராட்டம் என்பவற்றில் கிராமீய தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து பங்காற்றியது.

1987ம் ஆண்டு தொடக்கம் நான் கிராமீய உழைப்பாளர் சங்கத்தலைவராக பதவியேற்றேன்.தேசிய இனப்போராட்டம் கூர்மையடைந்த காலப்பகுதியாக இருந்ததினால் கிராமீய உழைப்பாளர்களும் அக்கறை கொண்டு பங்களிப்பு செலுத்த வேண்டும் என கிராமீய உழைப்பாளர் சங்கம் முடிவெடுத்தது. அதற்கேற்ப தேசிய விடுதலைப்போராட்டம் தொடர்பாக கிராமீய உழைப்பாளர்களை விழிப்பூட்டும் பணியில் நாம் முக்கிய கவனம் செலுத்தினோம். கலைச்செயற்பாடுகளை குறிப்பாக மேடை நாடகத்தையும், தெருவழிநாடகத்தையும் பிரதான ஊடகமாக தெரிவு செய்து அதனூடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்க்கொண்டோம். "எழுச்சிகொள்வோம்", "வாழவைத்தமண்" போன்ற நாடகங்கள் இந்த வகையிலேயே மேடையேற்றப்பட்டன அதேவேளை கிராமீய உழைப்பாளர்களின் குடும்பங்களை சிதைக்கும் அரக்கனான மதுவினை ஒழிக்கும் வகையில் மது ஒழிப்புப் போராட்டங்களையும் முன்னெடுத்தோம்.

தேச விடுதலைப்போராட்டம் தென்னிலங்கையை முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் சர்வதேச முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள வேண்டும். என்பதிலும் நாம் அக்கறையாக செயற்பட்டோம்.அச்சக்திகளுடன் உறவுகளை வளர்த்துக்கொண்டோம்.எமது போராட்டத்தின் நியாயங்களை எம்மால் முடிந்தவரை அவர்களுக்கு புரியவைத்தோம். காணிப்பறிப்புகளுக்கு எதிரான போராட்டம், காணமல் போனவர்கள் சம்பந்தப்பட்ட போராட்டம் என்பவற்றில் தென்னிலங்கை முற்போக்கு ஜனநாயக சக்திகள் பலரும் பங்கெடுத்துள்ளனர்.

நேபாளத்தில் மனித உரிமைகள் சம்பந்தமான மாநாடு இடம் பெற்றது. கிராமீய உழைப்பாளர் சங்கத்தின் சார்பில் நான் கலந்து கொண்டேன். முடிந்தவரை தேசிய

உழைப்பை மேற்கொள்கின்றனர். அந்த விவசாயிகள் பல நெருக்கடிகளை சந்திக்கும்போது அது வறிய கூலி விவசாயிகளையும் பாதிக்கின்றது. உற்பத்திகள் நியாயமான விலையில் சந்தைப்படுத்த முடியாமை அதில் முக்கியமானதாகும். தென்னிலங்கை உற்பத்திகள் குவிவதனாலும் இராணுவத்தின் உற்பத்திகள் சந்தைக்கு வருவதனாலும், இந்நிலை ஏற்படுகின்றது இதனால் சிலவேளைகளில் அதிக நட்டத்தை விவசாயிகள் எதிர்நோக்குகின்றனர். விளைந்த பீற்றூட் கிழங்குகளை அறுவடை செய்து விற்றால் அறுவடைக் கூலிக்கான வருமானத்தைக் கூட பெறமுடியாமல் இருக்கின்றது எனக் கருதி மண்ணோடு அதனை உழுதுவிட்ட விவசாயிகளும் உள்ளனர்.

இதைவிட காலநிலை மாற்றமும் நோய்களின் பெருக்கமும் கூட பயிர்களை பாதிப்பதால் போதிய வருமானத்தை பெற முடியாத நிலை ஏற்படுகின்றது. கிருமிநாசினி மருந்து வகைகளில் பயிர்களை திட்டமிட்டு அழிக்கும் மருந்தும் கலக்கப்பட்டுள்ளது என விவசாயிகள் சந்தேகிக்கும் நிலையும் தோன்றியுள்ளது. முந்திரிகை செய்கைகயை பீடித்த கராவல் போன்ற நோய்களினால் பல லட்சம் ரூபாய்கள் நட்டமும் அடைந்துள்ளன. பல்லாயிரம் கிலோவரையிலான முந்திரிகைப் பழங்களை வீசிஎறிந்த விவசாயிகளும் உள்ளனர்.

எனவே விவசாயிகள் நட்டமடையும் போது வறிய .கூலி விவசாயிகளுக்கும் தொழில் இன்மை ஏற்படுகின்றது.இதன் போது நிவாரணம் வழங்கும் செயற்பாடு பல வெளிநாடுகளில் கடைப்பிடிக்கப்படுகின்றது. நியாய விலையில் கிடைக்கவில்லை என்றால் அரசாங்கம் தானே நியாய விலையில் கொள்வனவு செய்து விநியோகிக்கும் அல்லது நட்டஈட்டினை வழங்கும். அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் கூட இம்முறை பின்பற்றப்படுகின்றது. சந்தை விலையை உறுதியாக வைத்திருப்பதற்காக அமெரிக்கா

**புன்னாலைக்கட்டுவன் மத்தாளோடை கூலி உயர்வுப் போராட்டம் கிராமீய உழைப்பாளர் சங்கத்தினை வெளி உலகத்திற்கு கொண்டு வந்தது. தமக்கு கூலி உயர்வுக் கட்டாயம் வழங்கப்படல் வேண்டும் என்பதில் வறிய விவசாயிகளும் கூலி விவசாயிகளும், கூலி உழைபப்ராளர்களும் உறுதியாக நின்றனர்.**

# தமிழ்த்தேசம் விடுதலை பெறாமல் கிராமீய

## கிராமீய உழைப்பாளர் சங்கத்தலைவர் இன்

**கிராமீய உழைப்பாளர் சங்கத்தின் தலைவராக சுமார் 27 வருடங்கள் பணியாற்றுகின்றீர்கள் இதன் நோக்கம் செயற்பாடுகள் பற்றி கூறுவீர்களா?**

யாழ்குடா நாட்டின் செம்மண் பிரதேசங்களில் மிக வறுமை நிலையில் வாழும் வறிய, கூலி விவசாயிகளின் நலன்களைப் பேணுவதற்காக கிராமீய உழைப்பாளர் சங்கம் 1977ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இடது சாரி இயக்கப் பின்னணியைக் கொண்ட கௌரிகாந்தன், பாலசிங்கம், சின்னராசா, ஜெகநாதன், சிறீதரன், ஆகியோர் இதன் உருவாக்கத்தில் முன்னணியில் நின்றனர்.

இங்கு வறிய விவசாயிகள் என்போர் சிறு நிலத்தில் சொந்தமாகப் பயிர் செய்து கொண்டு கூலி உழைப்பிலும் ஈடுபடுபவர்கள். கூலி விவசாயிகள் தனித்து கூலி உழைப்பில் மட்டும் ஈடுபடுபவர்கள். இவர்கள் மிக நீண்ட காலமாகவே மிகவும் வறுமைநிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஒரே நேரத்தில் தேசிய இன ஒடுக்குமுறை, சாதி ஒடுக்கு முறை, வர்க்க ஒடுக்கு முறை என்பவற்றிற்கு உள்ளாகி இருந்தனர். இவர்களுடைய பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்கு அமைப்புக்கள் எதுவும் இருக்கவில்லை. இந்நிலையில் தான் அவர்களின் நலன்களைப் பேணுவதற்

இன விவகாரத்தை அவர்களுக்கு புரியவைப்பதில் அக்கறை செலுத்தினேன்.

கிராமீய உழைப்பாளர்களின் விடுதலை என்பது கிராமீய விடுதலை ,தேசிய விடுதலை,சர்வதேச விடுதலை என்பவற்றிலேயே தங்கியுள்ளது.எனவே எமது வேலைத் திட்டங்கள் கிராமம்,தமிழ்த்தேசியம்,சர்வதேசம் என்பவற்றை மையப்படுத்தி நகர்த்துவதற்கு முயற்சிக்கின்றோம்.

**தமிழ்ப்பிரதேசங்களை பொறுத்தவரை கிராமீய உழைப்பாளர்கள் என்னவகையான பிரச்சினைகளுக்கு தற்போது முகம் கொடுக்கின்றனர்?.**

பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் எனலாம். செம்மண் பிரதேசங்களில் வாழும் கிராமீய உழைப்பாளர்களில் பெரும்பான்மையோர் வறிய கூலி விவசாயிகளாக உள்ளனர். சிறுதொகையினர் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்த இரண்டு தரப்பினரும் சந்திக்கின்ற முதலாவது பிரச்சினை தொழில் இன்மையாகும்.

வறிய கூலி விவசாயிகள் சொந்தமாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் நிலங்களில் தமது கூலி

அரசாங்கம் கோதுமை மாவினை கொள்வனவு செய்து கடலில் கொட்டியது என்றும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அங்கெல்லாம் அரசாங்கங்கள் விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதுகாப்பதை சமூகப்பொறுப்பாக கொள்கின்றன. இங்கே கலாச்சாரத்தை பாதுகாத்தல் என்ற விடயமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆனால் இலங்கையில் இவ்வாறான நிவாரணத் திட்டங்கள் எதுவும் இல்லை. உரமானியம் கூட நெற்செய்கைக்கு வழங்கப்படுகின்றதே தவிர உப உணவுப்பயிர் செய்கைக்கு வழங்கப்படுவதில்லை.

கைத்தொழிலில் ஈடுபடும் கிராமீய உழைப்பாளர்களை பொறுத்தவரை பெரும்பான்மையோர் மேசன்தொழில், கல்லுடைத்தல் என்பனவற்றிலேயே ஈடுபடுகின்றனர்: மேசன் தொழில் தென்னிலங்கையில் இருந்து வந்தவர்கள் ஆக்கிரமிப்பதனால் அங்கும் தொழில் இன்மை அதிகரிக்கின்றது. கல்லுடைத்தல் தொழிலை பாரிய இயந்திரங்களுடன் கூடிய முதலாளிகள் ஆக்கிரமித்துள்ளனர்.

இரண்டாவது நிலப் பிரச்சினையாகும் வறிய விவசாயிகள் சிறிதளவு நிலத்தினைச் சொந்தமாக கொண்டிருந்தாலும் கூலி விவசாயிகள் பலருக்கு சொந்தமாக குடியிருப்பு நிலமும் கூட கிடையாது. சொந்தமாக விவசாயம் செய்வதற்கு எதுவும்

இல்லை. இதைவிட வலிகாமம் வடக்கு பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது. பல வறிய விவசாயிகள் நிலம் இழந்துள்ளனர். சுமார் 6981 ஏக்கர் நிலத்தினை இராணுவம் ஆக்கிர மித்துள்ளது. மக்களுக்கு குடியிருக்கவும், விவசாயம் செய்யவும் நிலம் இல்லாத நிலையில் இராணுவம் மக்களினுடைய நிலத்தில் பயிர் செய்கின்றது, உல்லாச விடுதிகளைக் கட்டுகின்றது.

யாழ்குடா நாட்டில் வளமான மண்ணும் குடிதண்ணீர் வசதியும் உள்ள பிரதேசங்கள் குறைவு வலிகாமம் வடக்கு பகுதி பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்ற செம்மண் வளத்தையும், சுத்தமான குடிதண்ணீர் வளத்தினையும் கொண்ட பிரதேசம். அது தமிழ் மக்களிடம் இருந்து திட்டமிட்டுப் பறிக்கப்பட்டுள்ளது.

**கிராமீய உழைப்பாளர்களின் விடுதலை என்பது கிராமீய விடுதலை, தேசிய விடுதலை,சர்வதேச விடுதலை என்பவற்றிலேயே தங்கியுள்ளது.எனவே எமது வேலைத்திட்டங்கள் கிராமம்,தமிழ்த்தேசியம்,சர்வதேசம் என்பவற்றை மையப்படுத்தி நகர்த்துவதற்கு முயற்சிக்கின்றோம்.**

மருந்துக்குக் கூட உதவவில்லை என்றே கூறுவேன் அரசாங்கம் வீதிகள் செப்பனிட்டதையும் நிதி நிறுவனாங்கள் பல்கிப்பெருகியதையும் அபிவிருத்தியாக காட்டுகின்றது. வீதி செப்பனிடல்கள் தென்னிலங்கை வியாபாரிகள் இலகுவாக வருகை தந்து சுரண்டுவதற்கும், இராணுவத்தினரது போக்குவரத்துக்களை இலகுவாக்கு வதற்குமே உருவாக்கப்பட்டன. நிதி நிறுவனங்கள் முன்னர் கூறியது போல மக்களிடம் இருந்த சிறு சேமிப்புக்களையும் கொள்ளையடிப்பதற்காக திறக்கப்பட்டன. இவை எதுவும்



விவசாய பீடம் என்பன பற்றி கூறவே தேவையில்லை மக்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுதல்,மக்களுக்காக கற்றுக் கொள்ளுதல் என்ற கலாச்சாரம் எமது கல்வி நிறுவனாங்களிடம் இருந்தாலல்லவா?அவை அக்கறை கொள்வதற்கு. மக்கள் அக்கறை வேண்டாம் பரந்த அளவில் தமது புலமை அறிவை வளர்த்துக் கொள்வதற்காகவாவது அக்கறைப்பட வேண்டும் எங்களது கல்வியாளர்களிடம் அந்த பண்பு இல்லை. வெறும் ஏட்டுக்கல்வி மட்டும்தான் அவர்களிடம் இருக்கின்றது.

உண்மையில் நவீன விவசாயம் தொடர்பான அறிவூட்டல் கள் மக்களுக்கு வழங்கி அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்கு உள்ளது. வேண்டும் என்றே அந்த பொறுப்பினை அவர்கள் தட்டிக்கழிக்கின்றன்றனர். இது விவ சாய கல்வித்துறைக்கு மட்டுமல்ல அனைத்துக் கல்வித்துறைக் கும் பொருந்தும்.

**சாதி ஒடுக்கு முறை தற்போதும் இருக் கின்றது என்றும் தலித் என்ற அடையாளம் இங் கும் தேவை என்றும் இங்கிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் சிலர் கூறி வருகின்றனர். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீரகள்?**

சாதி ஒடுக்கு முறை என்பது பொருளாதார ரீதியான ஒடுக்கு முறை சித்தாந்த ஒடுக்குமுறை என இரு வகைகளைக் கொண் டது. பொருளாதார ஒடுக்கு முறை உற்பத்தி உறவு அடிப்படை யில் எழுவதாகும். உயர் சாதியின் நிலத்தில் குடியிருந்து கொண்டு அவனுக்காகவும், தனக்காகவும் உழைக்கின்ற உறவு முறை அது. அந்த உறவு முறை தற்போதுகிடையாது. எனவே பொருளாதார ஒடுக்கு முறை நடைமுறையில் உள்ளது எனக் கூறமுடியாது.

சித்தாந்த ஒடுக்கு முறையில் தீண்டாமை, அந்த சாதிக்கேயுரிய சடங்கு ரீதியான பணிகள் என்பன முக்கியமானவையாகும். தீண்டாமை தற்போது நடைமுறையில் இல்லை. சடங்கு முறையான பணிகளும் ஏறத்தாழ அருகிவிட்டது. சித்தாந்த ஒடுக்கு

# ...ய உழைப்பாளர்களுக்கு விடுதலை இல்லை

## ...ன்பத்துடன் ஒரு நேர்காணல்-

**நேர்கண்டவர். சி.அ. யோதிலிங்கம்.**

மூன்றாவது கடன் திட்டங்களாகும். அரசாங்கத்தி னதும் தனியார் நிதி நிறுவனாங்களினதும் கடன் திட்டங்கள், லீசிங்கடன்கள் என்பன வறிய கூலி விவ சாயிகளை மேலும் வறியவர்களாக்கியுள்ளது. அவர் களது சிறு சேமிப்புகளைக்கூட இல்லாது செய்துள்ளது. போர் முடிவிற்கு பின்னர் உற்பத்தி துறை வட பகுதிக்கு வரவில்லை. மாறாக நிதி நிறுவனங்கள் போன்ற சேவைத்துறையே வடபகுதிக்கு வந்தது. அவை மக்களிடம் இருந்த சிறு சேமிப்புகளையும் கொள்ளை யடித்து மக்களை ஒட்டாண்டியாக்கியுள்ளது. உண்மையில் இந்த பிரச்சினைகள் எல்லாமே தேசிய இனப்பிரச்சினைகளுடன் இணைந்தவை. தேசிய இனம் விடுதலை அடையாமல் கிராமீய உழைப்பாளர் களும் ஒரு போதும் விடுதலை அடையப்போவ தில்லை.

**அரசாங்கம் வடபகுதியில் பாரிய அபிவிருத் தியை செய்துள்ளது என்று சர்வதேச மட்டத் தில் பிரச்சாரம் செய்கின்றது. அரசாங் கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் இந்த மக்களுக்கு உதவவில்லையா?**

மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தை கொண்டு வர வில்லை. போர்க்காலத்தில் இருந்த சிறு சேமிப்புக்கள் கூட மக்களிடம் தற்போது இல்லை. நிதி நிறுவனங்களின் கடன் திட்டத்தினால் பலர் தற்கொலை செய்துள்ளனர். பலர் மனநோயாளிகளாக மாறியுள்ளனர். இவையெல்லாம் வட பகுதியின் சுய சார்புப்பொருளாதாரத்தை திட்டமிட்டு சிதைப் பதற்காக களமிறக்கப்பட்டவையே என்று கூறவேண்டும். வடபகுதியில் விவசாய சம்மேளனங்கள் பல உள்ளனவே அவை இந்த மக்களின் பிரச்சினைகளில் விவசாயிகள் சம் மேளனங்கள் இன்று கிருமிநாசினிகளின் கம்பனிகளின தும், விதைகள் கம்பனிகளினதும் முகவர்களாக மாறி யுள்ளன. அவர்களுக்கு இந்த மக்கள் பற்றி பெரிய அக் கறை கிடையாது. விதை கிழங்கு கம்பனி ஒன்று தனக்கு சார்பாக புதிதாக விவசாயிகள் சம்மேளனங்கள் உரு வாக்குவதையும் வடபகுதியில் காண்கின்றோம்.

**விவசாயத்திணைக்களம், விவசாய கல்லூரி, பல்கலைக்கழக விவசாய பீடம் என்பன அக்கறை கொள்வதில்லையா?**

விவசாயத் திணைக்களங்கள் புள்ளிவிபரங்களை திரட்டுவதில் அக்கறைப்படுகின்றனவே தவிர விவசாயி கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் அக்கறைப்படுவ தில்லை. விவசாயக்கல்லூரி,யாழ்ப்பாண பல்கலைக்கழக

**சித்தாந்த ஒடுக்கு முறையில் தீண்டாமை, அந்த சாதிக்கேயுரிய சடங்கு ரீதியான பணிகள் என்பன முக்கிய மானவையாகும். தீண்டாமை தற்போது நடைமுறையில் இல்லை.**

முறையில் தற்போது எச்ச சொசச்மாக இருப்பவை அக மணமுறையும்.அகக்குடியிருப்பு முறையும் தான். இவற்றில் கூடவன்னிப்பகுதியில் அகமண முறை பலவீனமடைந் திருந்தது. போராளிகள் பலர் அகமண முறையை மீறி திருமணம் செய்திருந்தனர். அகக் குடியிருப்பு முறையும், அண்மைக்காலமாக பலவீனமடைந்து வருகின்றது.

எனவே எச்ச சொச்சமாக உள்ள சித்தாந்த ஒடுக்கு முறையையும் தேசிய இயக்க வேலைத்திட்டங்கள் மூலம் நீர்த்துப் போகச் செய்ய முடியும். இதற்கு இந்தியாவைப் போல தலித் அடையாள அரசியல் அவசியம் இல்லை என்றே கருதுகிறேன்.

சாதி ஒடுக்கு முறையை பொருளாதார தளத்திலும், சித்தாந்த தளத்திலும் தேசிய விடுதலைப் போராட்டம் பலவீனப்படுத்தி வந்தது. எதிர்காலத்திலும் அது தொடர்ந்தும் பலவீனப்படுத்தும்

(23 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல்! தடுமாறும் மலையகக் கட்சிகள்

ஜனாதிபதித் தேர்தல் களம் மலையகத்திலும் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. ஏதிர்பார்க்காதவகையில் மைத்திரிபாலசிறீசேனா பொது வேட்பாளராக களமிறங்கியதால் மலையகஅரசியல் வாதிகள் பலர் ஆடிப்போயுள்ளனர். குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செய்வதறியாது திணறுகின்றது. ஆறுமுகம் தொண்டமான் பொது எதிரணிக்கு மாறுவது பற்றியும் யோசித்திருந்தார். ஆனாலும் அமைச்சர்களுடையகோவைகள் தன் கையில் உள்ளது என ஜனாதிபதி அறிவித்ததும் அவர் அடங்கிவிட்டார்.

மலையகமக்கள் மகிந்தரின் இனவாதம் காரணமாக அவரை ஆதரிக்க பெரியளவிற்கு விரும்பவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் நிற்பதால்தான் ஓரளவு ஆதரவு கிடைக்கின்றது. தோட்டப்புறங்களில் இலங்கைதொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க கட்டமைப்பு வலுவாக உள்ளது. அங்குமக்களும் தங்களின் பிரச்சினை உட்பட பல்வேறு விவகாரங் களுக்கும் இலங்கைதொழிலாளர் காங்கிரஸில் தங்கியுள்ளனர். இதனால் அது கூறும் வேட்பாளரையே ஆதரிக்கமுற்படுகின்றனர்.

ஆனால் நகர்ப்புற மலையக மக்களின் நிலை அவ்வாறானதல்ல அவர்கள் தோட்ட மக்களுடன் ஒப்பிடும் போது ஓரளவிற்கு சுயாதீனமானவர்கள். அரசியல் விடயங்களை நுணுக்கமாகப் பார்க்கும் ஆற்றலும் கொண்டவர்கள். இதனால் சுயாதீனமாகச் சிந்தித்து வாக்களிக்க முற்படுகின்றனர்.

ஊவாமாகாணாசபைத் தேர்தலில் தோட்டப்புறமக்கள் அரசாங்கக்கட்சிக்கும் நகரப்புறமக்கள் ஐக்கியதேசியக்கட்சிக்கும் அதிகளவில் வாக்களித்திருந்தனர். அத் தேர்தலில் ஏறத்தாழ 50 வீதமானவாக்குகள் அரசாங்கத்திற்கும் மீதி 50 வீதமானவாக்குகள் ஐக்கியதேசியக்கட்சிக்கும் கிடைத்திருந்தன. இலங்கைத் தொழிலாளர்



காங்கிரஸின் வாக்குவங்கி அதிகளவில் சரிந்திருந்தது. அரசாங்கத்தின் மீதான கோபமே இதற்கு பிரதானகாரணம்.

இந்தத் தேர்தலில் வாக்குவங்கிமேலும் சரியலாம் என்றபயம் ஆறுமுகம் தொண்டமானுக்கு உண்டு. இதனால் தான் எதிர்த்தரப்புமாறினால் என்ன? எனயோசிக்கத் தொடங்கியுள்ளார். இவருக்கு ஜனாதிபதி தேர்தலைவிட பாராளுமன்றத் தேர்தல் பற்றித்தான் கவலை அதிகம். சென்ற பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கத்துடன் இணைந்துவெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு நுவரெலியா மாவட்டத்திலிருந்து 03 ஆசனங்களையும்,தேசியப்பட்டியலிருந்து 01 ஆசனத்தையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெற்றிருந்தது. இதன் ஆதரவுடன் மாவட்டத்தில் முதல்நிலைக்கு வந்திருந்ததால் அரசாங்கக்கட்சிக்குப் போனஸ் ஆசனமும் கிடைத்திருந்தது.

தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ராதாகிருஸ்ணனும், இராசதுரையும்,ஆறுமுகம் தொண்டமானின் அடாவடித்தனத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வெளியேறினர் என்பது வேறுகதை. இவர்களில் ராதகிருஸ்ணன் மலையகமக்கள் முன்னணியில் இணைந்து அதன் அரசி யல் பிரிவுத்தலைவராக வந்தது மல்லாமல் அரசாங்கத்துடன் இணைந்து பிரதி அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார். இராசதுரை திகாம்பரத்தின் கட்சிக்கு மாறி அங்கும் நிற்க முடியாமல் தனது இருப்பைப் பாதுகாப்பதற்காக ஐக்கியதேசியக் கட்சியில் இணைந்துள்ளார்.

வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கச் சின்னத்தில் போட்டியிட்டால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு ஒரு ஆசனத்திற்குமேல் கிடைப்பது கடினம். சிலவேளைகளில் இரண்டு ஆசனம் கிடைக்கலாம். தேசியப்பட்டியல் மூலம் ஒருஆசனம் கிடைக்கும். மொத்தம் 03 ஆசனங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சி முதலாம் நிலைக்கு வந்தால் அங்கு 03 தமிழ் ஆசனங்கள் கிடைக்க கூடியதாக இருக்கும். இது ஐக்கிதேசியக் கட்சி மூலம் வெற்றி பெறும் மலையகக் கட்சிகள் மேல் நிலைக்குகொண்டு செல்லும் என்ற அச்சம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு உண்டு.



பழனிவேல்

மலையகமக்கள் முன்னணி இராதாகிருஸ்ணனுக்கு பிரதி அமைச்சர் பதவியும், அரவிந்தகுமாருக்கு ஜனாதிபதியின் இணைப்பாளர் பதவியும் கொடுத்தவுடன் சற்று அடங்கியிருந்தது. ஆனால் இன்று எதிர்த்தரப்பு பலமானவுடன் யோசிக்கத் தொடங்கியுள்ளது. அதற்கும் ஜனாதிபதி தேர்தலைவிட பாராளுமன்றத் தேர்தல் பற்றித்தான் கவலை அதிகம். அரசாங்கக்கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டால் தமக்கு ஒரு ஆசனம் கூட கிடைப்பது கடினம் என்பது அதற்கு நன்றாகவே தெரியும். இராஜதுரை தனது இருப்பைப் பாதுகாப்பதற்காக முந்திக் கொண்டது போல தானும் முந்திக்கொண்டால் என்ன என அது தற்போது நினைக்கின்றது. மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் லோரன்ஸ் இதன் அடிப்படையில் தான் மகிந்தரை ஆதரிப்பது என்ற தமது முன்னைய முடிவினை பரிசீலனை செய்யவிருப்பதாக பத்திரி

**வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கச் சின்னத்தில் போட்டியிட்டால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு ஒரு ஆசனத்திற்குமேல் கிடைப்பது கடினம். சிலவேளைகளில் இரண்டு ஆசனம் கிடைக்கலாம். தேசியப்பட்டியல் மூலம் ஒருஆசனம் கிடைக்கும். மொத்தம் 03 ஆசனங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சி முதலாம் நிலைக்கு வந்தால் அங்கு 03 தமிழ் ஆசனங்கள் கிடைக்க கூடியாதாக இருக்கும். இது ஐக்கிதேசியக் கட்சி மூலம் வெற்றி பெறும் மலையகக் கட்சிகள் மேல் நிலைக்கு கொண்டு செல்லும் என்ற அச்சம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு உண்டு.**

கைக்கு அறிக்கை விட்டிருந்தார். ஆனால் மகிந்தர் ஐக்கிய தேசியக் கட்சிப்பக்கம் இக் கட்சி செல்வதை அனுமதிக்க மாட்டார் போலவே தெரிகின்றது.

திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசியசங்கத்திற்கும் எதிர்காலம் பற்றிய கவலை உண்டு. ஆனாலும் கிடைத்த பிரதிஅமைச்சர் பதவியை உதறி எறிவதற்கு அது தயாராக இல்லை. இராஜதுரை தனது கட்சியில் வந்து சேர்ந்த போது அவருக்குரிய கௌரவத்தைக் கொடுத்திருந்தால் கட்சி சற்றுப் பலமாக இருந்திருக்கும். தலைமைத்துவப் போட்டி அதற்கு இடம் கொடுக்கவில்லை.



வடகிழக்கு வம்சாவழியான சறீரங்கா சக்தி தொலைக் காட்சி கொடுத்த மாயையில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து தெரிவானார். அங்கு தனது எதிர் காலத்தை நிச்சயப்படுத்திக் கொள்வதுகடினம் என்பதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கத்தின் உதவியுடன் களமிறங்க முடிவு செய்தார். வடமாகாணசபைத் தேர்தலின் போது அதற்கான முயற்சிகளையும் செய்தார். ஆனால் தமிழ்த்தேசிய அரசியலுக்கு முன்னால் அவரது பம்மாத்து அரசியல் அங்கு எடுபடவில்லை. அரசாங்கமும் அவருடன் பெரியளவிற்கு ஒத்துழைக்கவில்லை. டக்ளஸின் எதிர்ப்புவேறு. இதனால் நுவரெலியா மாவட்டத்திற்கே மீண்டும் திரும்பிவிட்டார். முன்னர் போல சக்தி தொலைக்காட்சி மாயைகள் நுவரெலியாவில் எடுபடுவதற்கானவாய்ப்புக்கள் இருக்கும் எனக் கூறமுடியாது,

மலையகத்தின் மிகப் பெரிய துரதிஷ்டம் அனைத்துக்கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்திருப்பதுதான். தொண்டமான் உருவாக்கிவைத்த கலாச்சாரம் இது. அரசாங்கத்தடன் இணைவதன் மூலமே மலையகமக்களின் நலன்களைப் பேணலாம் என்பது அவரது கொள்கையாக இருந்தது. அவருக்காவது அரசாங்கத்துடன் பேரம் பேசி சிலவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆளுமை இருந்தது. இப்போது உள்ள தலைவர்களிடம் அந்த ஆளுமை மருந்திற்குக் கூட கிடையாது.

அனைத்துக் கட்சிகளும் மகிந்தவின் கூடாரத்திற்குள் ஒதுங்கியிருப்பதனால் இக் கூட்டங்களின் கோரிக்கைகளுக்கு பெரியளவில் செவிசாய்க்கவேண்டும் என்ற அவசியமும் மகிந்தருக்கு இருக்கவில்லை.

**மலையகத்தின் மிகப் பெரிய துரதிஷ்டம் அனைத்துக்கட்சிகளும் அரசாங்கத்துடன் இணைந்திருப்பது தான். தொண்டமான் உருவாக்கி வைத்த கலாச்சாரம் இது. அரசாங்கத்துடன் இணைவதன் மூலமே மலையக மக்கவின் நலன்களைப் பேணலாம் என்பதுஅவரதுகொள்கையாக இருந்தது. அவருக்காவது அரசாங்கத்துடன் பேரம் பேசி சிலவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆளுமை இருந்தது. இப்போது உள்ள தலைவர்களிடம் அந்த ஆளுமை மருந்திற்க்குக் கூட கிடையாது.**

வெறும் அடிமைக் கூட்டங்கள் போலவே அரசாங்கத்தினால் அவை மதிக்கப்படுகின்றன.

இன்றுமலையகக் கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றன. மலையக மக்களது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு கட்சிகள் எவையும் இல்லை. ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனம் என்ற வகையில் அது பல்வேறு நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கின்றது. மலையகத் தேசிய இனத்தின் தாங்கு தூண்களான நிலம்,மொழி,பொருளாதாரம்,கலாச்சாரம் என்பன திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. எதிர்க்கட்சி அரசியல் மூலமே தேசியமட்டத்திலும், சர்வதேசமட்டத்திலும் இவற்றை பேசு பொருளாக்கி பாதுகாப்புப் பொறிமுறைகளைக் கண்டறியமுடியும். எந்த வேலைத் திட்டத்தை நகர்த்துவதற்கு இந்தமலையகக் கட்சியும் தயாராக இல்லை. தங்களது இருப்பைப் பாதுகாப்பதற்காக மலையகத்தில் தேனும் பாலும் ஒடுவது போன்ற தோற்றத்தை இக்கட்சிகள் கொடுக்கப்பார்க்கின்றன.

அனைத்து மலையகக் கட்சிகளும் அரசாங்கத்திடம் சரணடைந்து இருப்பதால் மாற்றத்தை வேண்டும் என நினைக்கின்ற மலையகமக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நோக்கி நகர்கின்றனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த மக்களுக்காக எதுவும் செய்யப்போவதில்லை. இந்தமக்களின் பிரஜா உரிமையையும், வாக்குரிமையையும் பறித்த கட்சியிடம் எதிர்பார்ப்பதற்கு பெரிதாக ஏதுமில்லை.

அதுவும் இந்தத் தேர்தலில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் அனைத்தும் வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டுத் தர வேண்டும் என்றே பொது எதிரணி எதிர்பார்க்கின்றது. இந்நிலையில் மலையக மக்களின் கோரிக்கைகளை எப்படித் தான் நிபந்தனை ஆக்கமுடியும்.


மலையகத்தைப் பொறுத்தவரை மலையகக் கட்சிகள் கையாலாகாத நிலையில் உள்ளன. இடதுசாரிகள் வெறும் பெயர்ப்பலகையுடன் மகிந்தரின் தாழ்வாரத்தில் ஒதுங்கியிருக்கின்றன இரு பிரதான சிங்களக்கட்சிகளும் மலையக மக்களை எப்படி ஒடுக்குவது என்பதிலேயே கவனமாக இருக்கின்றன. இந் நிலையில் கட்சி அரசியலுக்கு அப்பாலான மலையக சிவில் சமூகமே மலையகத்தின் எதிர்காலத்தை கையில் எடுக்கவேண்டும். இது ஆரோக்கியமான கலந்துரையாடல்களை நடாத்தி மக்களை அமைப்பாக்கி அழுத்தம் கொடுப்பதன் மூலமே மலையக அரசியல்வாதிகளையும் சரியானபாதையில் கொண்டு வரமுடியும்.

இன்று மலையகத்தின் டயஸ் பொறா கொழும்புதான். ஆயிரக்கணக்கான மலையக இளைஞர்கள் தமது வாழ்வாதாரத்திற்காக கொழும்பில் வசிக்கின்றனர். ஒப்பீட்டு ரீதியில் இவர்கள் சுயாதீனமானவர்கள். பல தரப்பட்டவர்களுடன் உரையாடும் வாய்ப்பு இருப்பதனால் புலமை ரீதியாக மலையக அரசியலைப்பார்க்கும் ஆற்றலும் இவர்களுக்கு உண்டு. இவர்கள் ஒருசக்தியாவதன் மூலம் வலுவானஒருசிவில் சமூகத்தை மலையகத்தில் வாழ்பவர்களையும் இணைத்து கட்டி எழுப்பமுடியும். சிங்கள முற்போக்கு சக்திகளின் ஒத்துழைப்பையும் வடகிழக்குதேசிய சக்திகளின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

சம்பந்தப்பட்டவர்கள் இது பற்றி சிந்திப் பார்களா?

# அதிகாரிகளின் ஊழல் மோசடி தடுப்பவர் யார்

-கோப்பாய் சண்முகம்-



வடமாகாணத்தில் ஊழல் மோசடி தலை விரித்தாடுகின்றது. அதிகாரிகள் பலர் ஊழல் மோசடியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வடக்கில் அபிவிருத்தி என்று ஒதுக்கப்படும் நிதியில் அதிகாரிகள் தமக்கு பிரமாண்டமாக வீடு கட்டுவதற்காக சுருட்டப்படுகிறது. மக்களின் வரிப்பணத்தில் அந்த மக்களுக்கு செய்யவேண்டிய பல அபிவிருத்தித் திட்டங்கள் கிடப்பில் இருக்கும் நிலையில் அதிகாரிகள் ஊழல் மோசடியில் ஈடுபடுவதால் போரினால் அழிக்கப்பட்ட தமிழ் மக்களது வாழ்வு மேலும் அழிந்தே செல்கின்றது.

மூன்று தசாப்த போரில் பலதை இழந்து மீளமுடியாமல் இருக்கும் தமிழ் மக்கள் போர் முடிவடைந்ததும் துன்பங்களை சுமக்கும் வேளையில் அவர்களின் வாழ்வில் பெரும் பின்னடைவை இந்த ஊழல் மோசடி ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சிசபையில் ஒப்பந்த அடிப்படையிலான அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் 100 மில்லியன் ரூபா வரையில் சுருட்டப்பட்டுள்ளது. வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு எதிராகவே இந்தக் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

உலக வங்கியினால் போரில் பாதிப்பிற்குள்ளான வடக்குப் பிரதேச மக்களின் உட்கட்டுமான வேலைகளை மேற்கொள்வதற்கென 2010 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் 3500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. வீதிகள் உட்கட்டுமான வேலைகள் உள்ளிட்டவற்றை முன்னெடுக்க ஒதுக்கப்பட்ட நிதியில் 120 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களிற்கான பொறியியலாளராக பிரதம செயலாளர் அவர்கள் தனக்கு வேண்டிய ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துள்ளார் என்றும், இந்த நபர் தனது தந்தை யாரை மற்றும் நண்பர் ஒருவரையும் ஆகியோரை பங்காளர்களாக்கி ஒரு போலி ஒப்பந்த நிறுவனத்தைத் தோற்றுவித்து அதற்கான வேலைகளை ஆரம்பித்து பெரும் பண மோசடிகளைச் செய்துள்ளார் என்றும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளது.

மேலும் அவருக்கு நெருக்கமான 5 ஒப்பந்த நிறுவனங்களிற்கே வேலைத் திட்டங்களை ஒதுக்கி வழங்கியுமுள்ளதாகவும், மிகக்குறைந்த காலப்பகுதியினுள் சுமார் 40 மில்லியன் வரை சொத்துச் சேர்த்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

அதேவேளை இந்த மோசடியில் கிடைத்த பணத்தில் உள்ளூராட்சி ஆதிகாரி ஒருவரது வீடு பல மில்லியன் ரூபாவில் மீளப் புனரமைக்கப்படுவதாகவும் அரியாலையில் புதிய பங்களா ஒன்றை அமைத்து வருகின்றார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

தனியொரு நபர் இந்த மோசடியில் ஈடுபட்டிருக்க முடியாது. இங்கு கூட்டு மோசடிகள் இடம்பெற்றுள்ளன. சில இலட்சக்கணக்கான மக்கள் வாழும் வடக்கில் 100 மில்லியன் ரூபா மோசடி என்பது சாதாரணமானதல்ல அண்மைக் காலங்களில் மக்களிற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் வடக்கில் நிகழ்ந்துள்ள மிகப்பெரிய மோசடி இதுவாகும். சுருட்டப்பட்ட நிதி இதைவிட அதிகமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வடமாகாணத்தில் நெல்சிப் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் இடம்பெற்ற 100 மில்லியன் ரூபாய் ஊழல் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உருவாக்கியுள்ள விசாரணைக் குழு கண்துடைப்பென யாழ்.மாவட்ட ஒப்பந்தக்காரரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்

உலக வங்கியின் 3500 மில்லியன் ரூபாய் செலவில் நெல்சிப் திட்டத்தின் கீழ் வடக்கில் 120 வேலைத்திட்டங்கள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்டன. இந்த வேலைத்திட்டங்களை வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலும் மேற்கொண்ட பொறியியலாளர் ஒருவர் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது விசாரணை நடத்துவதற்கே இந்த விசாரணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தரப்பினில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



**இவ்வுயர்மட்டத்துடன் ஒப்பிடுகையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவால் எதனையும் செய்ய முடியாதெனவும் ஒப்பந்தக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த விசாரணைக்குழுவில் கட்டிட திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் மற்றும் இலங்கை நிர்வாக சேவையின் மூத்த பெண் அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டபோதும் எந்தவித முன்னனுபவமும் அற்ற புதியவரான இளம் பொறியிலாளரும் ஆளுநர் அலுவலகத்தை சேர்ந்த பெண்மணி ஒருவருமே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பாரிய மோசடியில் பிரதம செயலாளர் முதல் உள்ளூராட்சி ஆணையாளர்கள் வரை தொடர்புபட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களால் சாட்சியங்கள் மறைக்கப்படலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்வுயர்மட்டத்துடன் ஒப்பிடுகையில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவால் எதனையும் செய்யமுடியாதெனவும் ஒப்பந்தக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்னாரில் இடம்பெற்ற ஊழல் மோசடியை தட்டிக்கேட்ட வெள்ளாங்குளம், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளி நகுலேஸ்வரன் கடந்த 12.11.2014 அன்று இரவு 8.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை அடுத்து பிரதேச செயலாளர் ஒருவர் மற்றும் கிராமசேவகர் ஒருவர் உட்பட 6 பேர் மீது சந்தேகம் எழுந்துள்ளது.

**சம்பளத்தில் அவர்கள் தமது வாழ்வை நகர்த்த முடியும். இப்படியிருந்தும் ஆகாயத்தில் பறக்க நினைப்பவர்கள் போல் ஊழல் மோசடியில் ஈடுபட்டால் அந்தரத்தில் தம்மை நிலையெடுத்து வைக்க முடியாத அளவுக்கு கொண்டுபோய் சேர்த்து விடும் இதனை உணருங்கள்.**

அதனை அடுத்து 6 பேரிடம் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

மோப்பநாயின் உதவியுடன் ரி 56 ரக பழுதடைந்த துப்பாக்கி ஒன்றும், மேலும் ஒரு ரி 56 ரக புதிய துப்பாக்கியும் மீட்கப்பட்டன. ஊழல்களைத் தட்டிக் கேட்ட நகுலேஸ்வரனுக்கே இந்த நிலைமை என்றால் இனிமேல் ஊழல்களையும் தட்டிக்கேட்க முடியாது போலும் என்று மக்கள் அச்சத்தில் உறைந்து போய் உள்ளனர். இதனால் பிரதேச செயலாளர் ஒருவர் இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலையுடன் பல அரச உயர் அதிகாரிகள் சம்ப்ந்தப்பட்டிருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் எவர் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்களின் பதவி நிலை பாராமல் கைது செய்து கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இடமாற்றமா? தண்டனையா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஊழல் மோசடியில் ஈடுபடும் அதிகாரிகள் இதே மண்ணில் தான் பிறந்து வளர்ந்தவர்கள். எனவே எமது மக்கள் மீதும் எமது மண் மீதும் பற்றிருக்கவில்லை என்றால் அவர்கள் தமிழர்கள் என்று தம்மை சொல்லிக் கொள்ள முடியாதவர்களாகிப் போவார்கள்.

தமது அன்றாட வாழ்க்கையையே நகர்த்த முடியாமல் தொழில் வாய்ப்பு இன்றி இருக்கும் மக்களிடம் தாய் மண்ணின் மீது இருக்கின்ற அக்கறையைப் பாருங்கள் இத்தகைய அதிகாரிகளுக்கும் மக்களது வரிப்பணத்தில் சம்பளம் வழங்கப்படுகின்றது.

இப்படியிருந்தும் ஆகாயத்தில் பறக்க நினைப்பவர்கள் போல் ஊழல் மோசடியில் ஈடுபட்டால் அந்தரத்தில் தம்மை நிலையெடுத்து வைக்க முடியாத அளவுக்கு கொண்டுபோய் சேர்த்து விடும் இதனை உணருங்கள்.

# மலையகத் தேசியம்

## அச்சுறுத்தலை நோக்கி மலையகத் தமிழரின் பொருளாதாரம்

-வோல்டர் டெரி-

மலையகத் தமிழரின் பிரதான பொருளாதார வளமானது பெருந்தோட்டத்துறையாகும். பெருந்தோட்டத்துறை என்னும் போது தேயிலையும், இறப்பருமே அதன் முக்கிய கூறுகளாக இன்று உள்ளன. துணைப்பொருளாதார வளங்களாக சிறு விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுவர்த்தகம், அரச வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை, மாணிக்கக்கல் அகழ்வு என்பனவும் காணப்படுகின்றன.

இன்று மலையக மக்களின் பிரதான பொருளாதார வளமான பெருந்தோட்டத் துறையானது மிகவும் திட்டமிட்ட முறையில் மலையக மக்களின் கைகளில் இருந்து பிடுங்கப்பட்டு வருவதையும் அவதானிக்கலாம். அதனூடாக மலையகத் தேசிய இனத்தின் இருப்பில் ஆட்டம் காண செய்வதற்கான நீண்டகால திட்டமிடல்கள் இடம்பெற்று வருகின்றன.

1904ம் ஆண்டில் இலங்கையில் மொத்தமாக 1320 தோட்டங்கள் இருந்துள்ளன. இவை படிப்படியாக குறைந்து முறையே 1980 இல் 668 ஆகவும் ,1992 இல் 506 ஆகவும் (தோட்டங்கள் மீளவும் தனியார் மயப்படுத்தப்பட்ட வருடம் )2013ல் 427 ஆகவும் காணப்படுகின்றன. இதுபோன்றே பெருந்தோட்டத்துறையின் ஆளணியானது 1981ல் 497,995 ஆகவும், 1992ல் 376,498 ஆகவும், 2013ல் , 193,412 ஆகவும் குறைந்து செல்லும் ஒரு போக்கை காணலாம்.

மலையகத் தமிழரின் பொருளாதாரமானது மிகவும் திட்டமிட்ட முறையில் ஆட்சியாளர்களினால் பறிக்கப்பட்டு வருவதற்கு மேலே உள்ள புள்ளி விபரம் சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும் 1948,1949 காலப்பகுதிகளில் மலையகத் தமிழரின் குடியுரிமை எவ்வாறு திட்டமிட்ட வகையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டதோ அவ்வாறே. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சிக் காலத்தில் (1970-1977) மலையக மக்களின் பொருளாதாரம் நிலச் சட்டங்கள் மூலம் திட்டமிட்டு பறிக்கப்பட்டது.

1972ம் ஆண்டின் முதலாம் இலக்க நிலச்சீர் திருத்தச் சட்டம் (இதன் பிரகாரம் நில சீர்திருத்த ஆணைக்குழு அமைக்கப்பட்டு தனியார் காணி உரிமைக்கு உச்சவரம்பு கொண்டுவரப்பட்டது. 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பெருந்தோட்ட காணி ஆயின் 50 ஏக்கர் எனவும், மற்றைய நிலமாயின் 25 ஏக்கர் எனவும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது). 1950ம் ஆண்டின் நிலச்சுவீகரிப்பு சட்டம், 1972ம் ஆண்டின் இரண்டாம் இலக்க பெருந்தோட்டச் சட்டம், 1972ம் ஆண்டின்

1948,1949 காலப்பகுதிகளில் மலையகத் தமிழரின் குடியுரிமை எவ்வாறு திட்டமிட்ட வகையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டதோ அவ்வாறே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சிக் காலத்தில் (1970-1977) மலையக மக்களின் பொருளாதாரம் நிலச் சட்டங்கள் மூலம் திட்டமிட்டு பறிக்கப்பட்டது.

நாட்டின் விவசாயக் கூட்டுத்தாபன சட்டம், 1973ம் ஆண்டின் 42ம் இலக்க விவசாய நிலச்சட்டம், 1975ம் ஆண்டில் திருத்தப்பட்ட நிலச் சீர்திருத்த சட்டம் ஆகிய சட்டங்களை பயன்படுத்திய அப்போதைய அரசாங்கம் நில சுவீகரிப்பை நடைமுறைப்படுத்தியது.

இதன் பிரகாரம் 166,405 ஹெக்டேயர் தேயிலை நிலங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 419,101 ஹெக்டேயர் நிலம் அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட பெருந்தோட்டப் பயிர் நிலங்கள் 230,000 ஹெக்டேயர் மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்திலும் 105,000 ஹெக்டேயர் நிலம் வேறுபட்ட கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகத்திலும் விடப்பட்டது. மேலும் 45,000 ஹெக்டேயர் நிலமற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.



1977 பொதுத்தேர்தலின் பின்னர் பொதுத்துறை நிறுவனம் ஒன்று வாபஸ் பெறப்பட்டதுடன், கூட்டுறவு நிறுவனங்களும் நீக்கப்பட்டன. இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனமும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் தொடர்ந்து பொதுத்துறை சார்ந்த பெருந்தோட்டங்களை நிர்வாகம் செய்தன. பொதுத்துறை சார்ந்த பெருந்தோட்டங்களின் நிர்வாகம் 1992ல் மீண்டும் 23 பிராந்திய தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

1930-1987 வரை 57 வருடங்களில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டு 105 ஆற்று வடி நில அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 2இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலம் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டு. 1980களில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் 55ஆயிரம் குடும்பங்களுக்கு 165,000 ஏக்கர் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இந்த 4 இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மலையகத் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு திட்டத்தின் கீழும் நிலம் வழங்கப்படவில்லை. அங்கும் இங்குமாக ஒரு சிலர் சிறிய துண்டு காணியை பெற்றிருக்கலாம்.

இன்றைய நிலையில் பெருந்தோட்டத்துறை பொருளாதாரமானது திட்டமிட்ட பெரிய குடியேற்றங்கள், முறையாக பராமரிப்பின்மை, கிராமமயப்படுத்தல், காடாக விட்டு பிரித்துக்கொடுத்தல் மீள்நடுகை இல்லாமை, தொழிற்சாலைகளை மூடுதல், வளங்கள் (மரங்கள், கற்கள்) சூறையாடப்படல், மாற்றுப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் வளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்படுகின்றது. மேலும் சிறு தோட்டத்துறை ஊக்குவிப்பு மூலமாக பெருந்தோட்டத்துறை பொருளாதாரமானது மலையக மக்களின் கைகளிலிருந்து பிடுங்கி எடுக்கப்படுகின்றது.

தென்னைச் செய்கையின் ஆதிக்கத்தை ஏற்கனவே இழந்துள்ள நிலையில் இறப்பர் துறையும் மலையக மக்களின் கைகளை விட்டு முழுமையாக பிடுங்கி எடுக்கப்படும் நிலையிலுள்ளது. இறப்பர் தோட்டங்களை பொறுத்தவரை களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட தென் மாவட்டங்களிலேயே அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று பெருமளவிலான இறப்பர் பயிர்ச்செய்கை நிலம் சகோதர சிங்கள இனத்தவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு அல்லது அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் மலையகத் தமிழரின் தொழில் பாதிக்கப்பட்டு இன்று பெருமளவிலான தொழிலாளர்கள் தொழில் இழந்து அன்றாட வாழ்விற்காக போராடும் ஒரு நிலையே காணப்படுகின்றது. 2013ம் ஆண்டு தகவல்களின் படி இறப்பர் செய்கையானது 81,863 ஹெக்டேயர் காணியில் சிறு உற்பத்தியாளர்களினால் செய்கை பண்ணப்படுகின்ற நிலையில் 48,917 ஹெக்டேயர் காணியிலேயே பெருந்தோட்ட நிறுவனங்களால் செய்கை பண்ணப்படுகின்றது.

**1904ம் ஆண்டில் இலங்கையில் மொத்தமாக 1320 தோட்டங்கள் இருந்துள்ளன.**
**இவை படிப்படியாக குறைந்து முறையே 1980ல் – 668 ஆகவும்**
**1992ல் – 506 ஆகவும்**
**2013ல் – 427 ஆகவும் காணப்படுகின்றன.**

இந்நிலையில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமானதொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அதாவது எந்தளவிற்கு தேயிலையை முதன்மைப்படுத்தி மலையகம் முன்னிறுத்தப்படுகின்றதோ அந்தளவு முக்கியத்துவம் இறப்பர் துறைக்கு கொடுக்கப்படுவதில்லை. இதன் விளைவு இன்று இறப்பர் பயிரிடப்படுகின்ற மலையக பிரதேசங்களில் வாழும் மலையகத் தமிழர்கள் தங்கள் அடையாளங்களை இழந்து சிங்கள பௌத்த இன தன்மையை ஏற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களின் நிலையிலிருந்து நோக்குகின்ற போது அவர்களின் பிரதான பொருளாதார வளமான தேயிலை செய்கையை பொறுத்த வரையில் இன்று அத்துறை எதிர்நோக்கும் பிரதான சவால் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் திட்டமிட்ட முறையிலான வளர்ச்சி ஆகும். பேருந்தோட்ட தேயிலை காணி திட்டமிட்ட முறையில் சிறு உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதோடு, பெருந்தோட்டங்களின் வளர்ச்சிக்கென பெறப்படுகின்ற நிதி உதவிகள் அனைத்தும் சிறு உற்பத்தியாளர்களுக்கே கொடுக்கப்படுகின்றது. 2013ம் ஆண்டு தவகல்களின் படி இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் மொத்த நில பிரதேசமான 203,020 ஹெக்டேயரில் 120,955 ஹெக்டேயர் சிறு உற்பத்தியாளர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் நிலையில் பெருந்தோட்ட நிறுவனங்களினால் 82,0065 ஹெக்டேயர் நிலங்களில் மட்டுமே பயிரிடப்படுகின்றது. சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் என்னும் போது 0.5 ஏக்கரில் இருந்து 50ஏக்கர் வரையிலான நிலப்பிரதேசத்தில் தேயிலைப்பயிர் செய்கையினை மேற்கொள்வோரையே குறிக்கின்றது இன்று இவ்வாறான உற்பத்தியாளர்களும் நான்கு இலட்சம் பேர் (2013தக்வல்) என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மதிப்பிட்டுள்ளது இச் சிறு உற்பத்தியாளர்களிடமும் மலையகத் தமிழர் தொழிலாளர்களாகவே உள்ளனர்.


மலையகத் தமிழரின் ஆதிக்கத்தில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்டு சிறு உற்பத்தியாளர்களிடமும் கொடுக்கப்படும் இந்த தேயிலை காணியின் 90 வீதத்திற்கும் மேற்பட்ட தேயிலை வளம் சகோதர இனத்தவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அனைத்து விதமான மானியங்களும், ஆலோசனைகளும், சந்தைப்படுத்தல் வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கென சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்கமும் அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது.

***இன்று அனைத்து தோட்டங்களிலும் உத்தியோகத்தர்களாக பெரும்பான்மை இனத்தவர்களே கூடுதலாக இருக்கின்றனர். முகாமைத்துவ மட்டத்திலும் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கமே காணப்படுகின்றது. அதனால் பெருந்தோட்ட துறையில் படித்த மலையக இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதோடு அவர்களை தொழில் நிமித்தம் வெளியில் தள்ளப்படும் போக்கும் காணப்படுகின்றது.***

தொடரும்

# கொலைகளுக்கு அன்று புலிகளை சாட்டியவர்கள் இன்று யாரைச் சாட்டப்போகிறார்கள்?



–துன்னாலைச் செல்வம்–

தமிழர் மண்ணில் போர்க் காலங்களில் இடம்பெற்ற படுகொலைகளின் இரத்தம் காய முதல் மீண்டும் மீண்டும் இரத்தம் சிந்தவைக்கப்படுகிறது. அன்றுபுலிகளைச் சாட்டினவர்கள் இன்று இடம்பெறும் கொலைகளுக்கு யாரைச்சாட்ட முடியும். ஆயுதம் தரித்து நிற்கும் இராணுவத்தினர் தமிழ் மக்களை பாதுகாக்க முடியவில்லை என்றால் இராணுவத்தினர் ஏன் இன்றும் தமிழர்களின் நிலங்களில் குடிகொண்டுள்ளனர். யாரைப் பாதுகாக்க. போர் முடிவடைந்த நிலையில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் நடமாட்டம் இன்றும் எமது மண்ணில் காணப்படுகிறது என்றால் இவர்களை யார் வழிநடத்துகின்றார்கள். தமிழர்களை அச்சுறுத்தி அடிமைகளாக்கி தம் போக்கில் அவர்களை நடைப்பிணமாக ஆக்கிவிடலாம் என சம்பந்தப்பட்ட தரப்பு நினைக்கிறது போலும்.

இறுதிக்கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து சரணடைந்த போராளிகளை அரசாங்கம் தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருந்து அவர்களுக்கு புனர்வாழ்வளித்து விடுவித்தது. ஆனாலும் முன்னாள் போராளிகளின் அன்றாட நடவடிக்கைகள் இராணுவத்தினரின் தொடர் கண்காணிப்பிலேயே இருந்து வருகின்றன.

விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் எந்தவிதக் காரணங்களும் இன்றி கைது செய்யும் நடவடிக்கைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று முன்னாள் போராளிகளை பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் முன்னாள் போராளிகளும் அவர்களின் குடும்பத்தினரும் அச்சமடைந்துள்ளனர். தமது பிள்ளைகளை இராணுவத்தினர் கைதுசெய்து கொண்டு போய் விடுவார்களோ என்ற பயத்தில் குடும்பத்தினரும் அன்றாட வாழ்வை நிம்மதியாக கழிக்க முடியாது தவிக்கும் முன்னாள் போராளிகளும் இந்த சூழலை எதிர் கொண்டுள்ளனர்.

கடந்த 12.11.2014 அன்று இரவு 8.30 மணியளவில் மன்னார் - வெள்ளாங்குளம் கணேசபுரம் சேவலங்கா கிராமத்தில் உள்ள வீடொன்றில் புகுந்து இனந்தெரியாத ஆயுததாரிகள் முன்னாள் போராளி ஒருவரை சுட்டுக் கொலை செய்துள்ளனர். இந்தக் கொலையை அடுத்து புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மத்தியில்

**விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் எந்தவிதக் காரணங்களும் இன்றி கைது செய்யும் நடவடிக்கைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று முன்னாள் போராளிகளை பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் முன்னாள் போராளிகளும் அவர்களின் குடும்பத்தினரும் அச்சமடைந்துள்ளனர்.**

பெரும் அச்ச நிலையை உருவாக்கியுள்ளது.

மாவீரர் நிகழ்வுகள் இடம்பெறும் நவம்பர் மாதம் இராணுவத்தினருக்கு பயத்தைக் கொடுக்கிறது போலும் அதனால் தான் இராணுவத்தினர் முன்னாள் போராளிகளை கைது செய்வது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் போலும்.

இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் காவல் துறையில் பணியாற்றிய கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் வயது 34 என்ற முன்னாள் போராளியே ஆவார். இவர் மேசன் வேலை செய்து தனது வாழ்வை நகர்த்தி வந்தார்.

அன்றும் மேசன் வேலைக்குச் சென்று வீடு திரும்பியுள்ளார். வேலைக்குப்போனகளைப்பை பொருட்படுத்தாமல் தனக்கு கிடைத்த இந்திய வீட்டுத்திட்ட வீட்டுக்காக கல்அரியும் வேலையில் இறங்கினார். கல் அரிந்து கொண்டிருக்கும்போது அவரது காணிக்குள் மறைந்திருந்தவர்கள் மிக நெருக்கமான தூரத்திலிருந்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரின் மீது துப்பாக்கிச் சூட்டை நடாத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் அவரது காதுப் பகுதியில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

முன்னாள் போராளி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட முதல் சம்பவம் அல்ல இது. இந்த சம்பவம் ஒரு செய்தியை முன்னாள் போராளிகளுக்கு விட்டுச் சென்றிருக்கிறது. அதாவது எப்பவேண்டுமானாலும் எந்த நேரத்திலும் முன்னாள் போராளிகளுக்கு ஆபத்து இருக்கிறது என்ற செய்தியைச் சொல்லி இருக்கிறது. இந்த செய்தி முன்னாள் போராளிகளுக்கு மட்டுமல்ல தமிழ் இளைஞர்களுக்கும் ஒன்றைச் சொல்லி இருக்கிறது. அதாவது தமிழ் இளைஞர்கள் என்றைக்குமே அரச அடக்குமுறைக்கு எதிரான செயற்பாட்டில் இறங்கக்கூடாது அது தொடர்பாக சிந்திக்கக் கூடாது என்ற செய்தியைச் சொல்லி இருக்கிறது.

ஜனநாயக நாட்டில் கொலைகளுக்கான காரணங்கள் தெரியவரும். அந்தளவிற்கு அந்த நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. உலகப் போரிலும் அநீதிகள் நடந்தாலும் அவை வெளிச்சத்துக்கு வந்தன. ஆனால் எமது நாட்டில் தமிழர்களின் பிரச்சனையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் படுகொலைகள் இன்றும் வெளிச்சத்துக்கு வரவில்லை. இனியும் வெளிவரும் என்பது ஐயப்பாடே ஆகும். ஆனாலும் இதேபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாது என்று சொல்ல முடியாது. ஏனெனில் எமது மண்ணில் சாவுக் கிடங்குகள் தான் அதிகம்.

**படுகொலைகள் இன்றும் வெளிச்சத்துக்கு வரவில்லை. இனியும் வெளிவரும் என்பது ஐயப்பாடே ஆகும். ஆனாலும் இதேபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாது என்று சொல்ல முடியாது. ஏனெனில் எமது மண்ணில் சாவுக் கிடங்குகள் தான் அதிகம்.**

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் காணாமல்போன ஒருவர் மீண்டுள்ளார். இவர் கொழும்பில் இருந்தவேளை குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து காணாமல்போனார். இவர் உயிருடன் இருக்கிறார் என்ற செய்தி அம்பாந்தோட்டை நீதிமன்றத்திலிருந்து உறவினர்களுக்கு வந்த ஒரு கடிதத்தால் யாழ். சுன்னாகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர் காணாமல் போனதில் இருந்து அவர் பற்றிய தகவல்கள் ஏதுமற்ற நிலையில் உறவினர் இருந்துள்ளனர். பல வருடங்கள் கடந்து உறவுகளால் அவரை கண்டுபிடிக்க முடியாத நிலையில் திடீரென அம்பாந்தோட்டை நீதிமன்றத்திலிருந்து அவரை அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடிதம் வந்ததால் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.


யாழ்.சுன்னாகம் மத்தியைச் சேர்ந்த க.வைரவநாதன் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அதாவது 28 வது வயதில் காணாமல் போயிருந்தார். காணாமல் போகும்போது 1991 ஆம் ஆண்டு கொழும்பு ஆமர் வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து இவர் காணாமல் போயிருந்தார் என்று கூறப்படுகின்றது. ஆனால் அது தொடர்பிலான தெளிவான தகவல் எதுவும் இல்லை. அந்தக் காலப்பகுதியில் குடாநாட்டிற்கும் கொழும்பிற்கும் இடையில் நிலவிய போக்குவரத்துச் சிக்கல் காரணமாக உறவுகள் அவரை உடனடியாகத் தேட முடியவில்லை. இங்கிருந்தபடியே உறவுகள் அவரைத் தேட எடுத்த முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை.

அவர் காணாமல் போன ஏக்கத்திலேயே அவரது பெற்றோரும் உயிரிழந்து விட்டார்கள். தற்போது அவரது சகோதரர்கள் மட்டுமே யாழ்.மாவட்டத்தில் உள்ளனர். 25 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் அவர்களும் வைரவநாதனை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில் அண்மையில் திடீரென ஒரு கடிதம் வைரவநாதனின் குடும்பத்தினருக்கு முகவரியிடப்பட்டு வந்துள்ளது. எங்கு தேடியும் முகவரிக்குரியவர்களைக் கண்டறியாத நிலையில் இறுதியாக கிராம அலுவலரின் உதவி நாடப்பட்டது. அவரது முயற்சியின் பேரில் வைரவநாதனின் உறவினர்கள் கண்டறியப்பட்டு கடிதம் அவர்களிடம் சேர்க்கப்பட்டது.

இவரது வாழ்வே முடிந்து விட்டது. உறவுகளுக்கே தெரியாத வகையில் இத்தனை வருடங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளார். இவருக்கு என்ன நடந்தது என்று இதுவரை காலமும் கண்மூடி இருந்தனர் அதிகாரிகள். இவரின் நிலைமைக்கு காரணமாக இருந்தவர்கள் யார். இதற்கான பதில் இல்லாமல் இந்த சம்பவமும் மூடி மறைக்கப்படும். இப்படியாக தமிழர் வாழ்வில் கொடூரங்கள் நிகழ்ந்துள்ளன. நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன. கைதுகள், காணாமல்போதல் எமது மண்ணில் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கு முடிவே இல்லாமல் தமிழர்கள் எலிப்பொறியில் அகப்பட்ட எலி போல் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

# குழந்தைகளுடன் உரையாடுதல்

–மனநல ஆலோசகர்
டாக்டர் ஷேய்ம் ஜி.இனோல்ட்
தமிழில் எஸ்.கே.விக்னேஸ்வரன்



© Alamy

## சம்பவங்களிலிருந்து உறவுக்கு

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றிச் சொல்லும் போது, அல்லதுகேட்கும் போது, அனேகமான சந்தர்ப்பங்களில் அச்சம்பவங்களைவிட, அச்சம்பவங்களின் மூலமாக மறைமுகமாக எதிர்பார்க்கப்படும் உறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே சிறப்பானதாக இருக்கிறது. இந்த உதாரணத்தைப் பாருங்கள்.

புளோரா தனது சகோதரனை விட தனக்குக் குறைவான பரிசுப் பொருட்களே கிடைக்கின்றன என்று தாயாரிடம் குறைபட்டுக் கொண்டாள். அவளுக்கு வயது ஆறு. தாயார் இந்தக் குற்றச் சாட்டை மறுக்கவில்லை. அவளது சகோதரன் வயது கூடியவன் என்பதால் அதிகளவு பரிசைப் பெறும் தகுதி அவனுக்கு உண்டு என்று குறிப்பிடவும் இல்லை. அது மட்டுமல்ல, இந்தப் பிழையை தான் திருத்தி விடப் போவதாகக் கூறவும் இல்லை குழந்தைகள் பரிசுப் பொருட்களின் அளவையையும் தொகையையும் விட பெற்றோர்களுடனான தமது உறவின் ஆழம் குறித்தே அதிகம் அக்கறையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அவள் "உங்களுக்கும் நிறையப் பரிசுகள் தேவையா?" என்று கேட்டாள். அதற்கு மேல் எதுவும் பேசாமல் புளேராவை அணைத்துக் கொண்டாள். மகளோ ஒரு வகை ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இந்தச் செயலை ஏற்றுக் கொண்டாள். நீண்ட முடிவேயற்ற விவாதங்களுக்கு இட்டுச்சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் எவ்வளவு இலகுவாக முடிந்துவிட்டது?

## சம்பவங்களிலிருந்து உணர்வுகட்கு

ஒரு குழந்தை ஒரு சம்பவம் பற்றிச் சொல்லும் போது அந்தச் சம்பவத்தை விட அச் சம்பவத்தை சூழவுள்ள உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சில வேளைகளில் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.

ஏழு வயதான குளோரியா வீட்டுக்கு மிகுந்த கவலையுடன் வந்தாள். தனது சினேகிதி டோரி மழை நீர் நிரம்பிய வாய்க்காலுள் எவ்வாறு தள்ளி வீழ்த்தப்பட்டாள் என்று தனது தாயாரிடம் அவள் தெரிவித்தாள். அதைச் செய்த பையன் மீது உங்களுக்கு சரியான கோபமாக இருக்கும் என்ன? இன்னும் அவர்கள் மீது உங்களுக்கு கோபமாக இருக்கும் என்ன? -

இந்த வசனங்கள் ஒவ்வொன்றிற்கும் குளோரியா "ஆம்,ஆம்" என்று மனக் கிளர்ச்சியுடன் பதிலளித்துக்கொண்டிருந்தாள். அவர்கள் இதே வேலையை உங்களுக்கும் செய்வார்களோ என்று பயமாக இருந்ததா?

குளோரியா உறுதியாகச் சொன்னாள்: "செய்யட்டும் பார்ப்பம். அவையளையும் சேர்த்து இழுத்துக் கொண்டு தான் நான் விழுவேன். அது அவையளையும் தோய வைத்துவிடும்."அவள் சொல்லும் போதே பலமாகச் சிரித்தாள். அவளது மனதில் அவர்களை இழுத்துக்கொண்டு தான் விழுவதும படமாக ஓடியிருக்க வேண்டும். தேவையற்ற புத்திமதிகளுக்கும் ,பாதுகாப்பு அறிவுரைகளுக்கும் இட்டுச்சென்றிருக்கக் கூடிய ஒரு உரையாடல் இவ்வாறு சந்தோசமாக முடிவுற்றது.

ஒரு குழந்தை தனது நண்பன் தனது ஆசிரியர் பற்றிய குற்றச்சாட்டுக்களுடன் வீட்டுக்கு வரும் போது, அதன் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமாகும். தகவல்களை விசாரித்து சம்பவத்தைப் புரிந்து கொள்ள முயல்வது ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல. பத்து வயது ஹெரால்ட் சிணுங்கிக்கொண்டு குற்றம் சாட்டியபடியே வீட்டுக்கு வந்தான்.

**ஹெரால்ட்:** என்ன வாழ்க்கை இது, வீட்டு வேலையை மறந்து போனேன் என்று சொன்னதற்காக ரீச்சர் என்னை ஒரு பொய்யன் என்று கூறிவிட்டார். அவர் என்னைத் திட்டினார். கடவுளே! திட்டினது மட்டுமல்லாமல் ,உங்களுக்கு ஒரு கடிதம் எழுதப்போவதாகவும் சொன்னார்.

**தாய்:** அப்ப உங்களுக்கு இன்றைய நாள் ஒரு கஷ்ரமான நாளாகப் போய் விட்டது என்ன?

**ஹெரால்ட்:** அப்பிடிச் சொல்லுங்கோ அம்மா

**தாய்:** எல்லாப் பிள்ளைகளுக்கும் முன்னால் பொய்யன் என்று திட்டு வாங்கியது ரொம்பவும் வெட்கமானதாக இருந்திருக்கும் தான்.

**ஹெரால்ட்:** ஓம்.....ஓம்.....சரியான வெட்கம்.

**தாய்:** அவளுக்கு ஏதாவது நடக்க வேண்டும் என்று நீங்கள் உங்களுக்குள் நினைத்திருப்பீர்கள் என்ன?

**ஹெரால்ட்:** ஓம், நினைத்தேன்... ஆனால் அது எப்படி உங்களுக்குத் தெரியும்?

**தாய்:** அப்படித்தான் நாங்கள் எல்லோரும் எங்களை யாராவது கவலைப்படுத்தும் போது நினைக்கிறோம்.

**ஹெரால்ட்:** அது ஒரு வகையான அமைதிக்காக.....

## பொதுவானதிலிருந்து குறிப்பானதற்கு

ஒரு குழந்தை தன்னைப் பற்றி ஒரு அபிப்பிராயம் சொல்லும் போது, அதை ஒப்புக்கொண்டோ, மறுத்தலித்தோ பேசுவதை விட , குழந்தை தனது எதிர்பார்ப்புக்கு மேலாகவே அதை விளங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் விபரமாகப் பேசுவது பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக ஒரு குழந்தை தனது கணக்குப்பாடத்தில் நான் சரியான வீக் என்று கூறும் போது , ஓம் ....உனக்கு கணக்கு என்றால் கஷ்டம் தான் என்று சொல்வதோ,அதன் அபிப்பிராயத்தை மறுதலிப்பதோ ,அல்லது கொஞ்சம் கவனமாகப்படித்தால் உன்னால் நன்றாக செய்யமுடியும் என்பன போன்ற வெற்று ஆலோசனைகளை வழங்குவதோ எந்தப் பயனுமற்றவை . இத்தகைய உதவிகள் குழந்தையின் சுய மரியாதையைப் பாதிப்பதுடன் இத்தகைய உடனடி அறிவுறுத்தல்கள் குழந்தையின் மனவுறுதியையும் குறைக்கும்.

நான் கணக்குப் பாடத்தில் சரியான வீக் என்ற கூற்றைப் புரிந்துணர்வுடனும் ஆதரவுடனும் எதிர் கொள்ள முடியும் . கீழ் வரும் ஏதோவொரு வசனம் இதைச் செய்யும் கணக்கு ஒன்றும் லேசான பாடம் அல்ல சில கணக்குகள் செய்யக் கஷ்டமானவை தான் ஆசியர் அதை இலகுபடுத்துவதில்லை அவர் உங்களை விமர்சிப்பதிலேயே காலத்தைக் கடத்தி விடுகின்றார்.

அவர் உன்னை நீயே ஒரு முட்டாள் என்று எண்ண வைப்பார் சோதனை இதை விட மோசமாக இருக்கும் பெயில் ஆகுவதைப்பற்றி அதிகமாக கவலைப்படுகிறாய் போல நாங்கள் என்ன நினைப்

> ஒரு குழந்தை தனது நண்பன் தனது ஆசிரியர் பற்றிய குற்றச்சாட்டுக்களுடன் வீட்டுக்கு வரும் போது, அதன் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமாகும். தகவல்களை விசாரித்து சம்பவத்தைப் புரிந்து கொள்ள முயல்வது ஒன்றும் அவ்வளவு முக்கியமானதல்ல.

போமோ என்று பயப்படுகிறாய் போல எங்களுக்கு ஏமாற்றமாய் போய் விடும் என்று பயப்படுகிறாய் போல எங்களுக்கு தெரியும் சில பாடங்கள் கஷ்டமானவை தான் என்று எங்களுக்கு நம்பிக்கை இருக்கு நீ உனக்கு ஏலுமான அளவுக்கு செய்வாய் என்று ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன். தான் பரீட்சையில் தோல்வியுற்ற பெறுபேற்று அறிக்கையுடன் வீட்டுக்கு வந்த போது இம்மாதிரியான புரிந்துணர்வுடன் தகப்பன் தன்னுடன் பேசியதைப் பற்றிக் குறிப்பிடுகையில் அந்தக் கணம் நான் செத்தே போய்விட்டேன் என்றான். அவனது உள் மனதின் பதிவு இவ்வாறு இருந்தது. "நான் எப்படியாவது எனது அப்பாவின் நம்பிக்கைக்கு ஏற்ற விதத்தில் நடக்க வேண்டும்"

இருந்தாற் போல அனேகமான எல்லாப் பெற்றோர்களும் தமது பிள்ளைகள் "நான் ஒரு முட்டாள்"என்று சொல்வதைக் கேட்டிருப்பார்கள். தமது மகன் அல்லது மகள் ஒரு போதும் முட்டாளாக இருக்கமுடியாது என்று கருதும் பெற்றோர்கள்.

தமது பிள்ளை முட்டாள் அல்ல புத்திசாலி என்று ஏற்றுக் கொள்ள வைக்கப் பிரயாசைப்படுவார்கள். இந்த உரையாடலைப் பாருங்கள்.

**மகன்:** நான் ஒரு முட்டாள்.

**தகப்பன்:** இல்லை நீ ஒரு முட்டாள் அல்ல.

**மகன்:** இல்லை நான் ஒரு முட்டாள் தான்.

**தகப்பன்:** இல்லை நீ முட்டாள் அல்ல யோசித்துப் பார் முகாமில் நீ எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாய் ? அந்த முகாம் பொறுப்பாளர் உங்களை சிறந்த புத்திசாலியாகவே கருதினார்.

**மகன்:** உங்களுக்கு எப்படி அவர் கருத்துத் தெரியும்.

**தகப்பன்:** அவர் எனக்குச் சொன்னார்.

**மகன்:**அப்படியானால் ஏன் அவர் எப்போதும் என்னை முட்டாள் என்றே திட்டிக் கொண்டிருந்தார்.

**தகப்பன்:**அவர்வேடிக்கைக்குச் சொல்லியிருப்பார்.

**மகன்:** நான் முட்டாள் தான் எனக்கு அது தெரியும். இதோ எனது பாடசாலைப் பெறுபேறுகளைப் பாருங்கள்.

**தகப்பன்:** நீ கொஞ்சம் கஷ்ரப்பட்டு உழைத்தால் சரி.

**மகன்:** நான் நன்றாகக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன். ஆனாலும் எந்தப் பயனும் இல்ல .எனக்கு மூளையே இல்லை.

**தகப்பன்:** நீ புத்திசாலி தான் எனக்கு தெரியும்.


**மகன்:** இல்லை. நான் முட்டாள் தான். எனக்கு தெரியும்.

**தகப்பன்:** (பலமாக) நீ முட்டாள் அல்ல.

**மகன்:** நான் முட்டாள்.

**தகப்பன்:** இல்லை இல்லை .... ஒரு பிள்ளை தன்னை முட்டாள் என்றோ அசிங்கமானவன் என்றோ குறிப்பிடும் போது எமக்கு அதன் சுய மதிப்பீட்டை உடனடியாக மாற்றுவதற்காக சொல்லவோ செயலாற்றவோ ஒன்றுமே இல்லை. தன்னைப் பற்றிய ஒருவரது சுய மதிப்பட்டை மாற்றுவதற்கான நேரடி முயற்சிகளை எவருமே எதிர்பார்க்கத்தான் செய்வார்கள். ஒரு சிறுவன் சொன்னான் அப்பா உங்கள் நல்லெண்ணம் உனக்குப் புரிகிறது ஆனாலும் நீங்கள் சொல்லும் அளவுக்கு நான் புத்திசாலியல்ல.

ஒரு பிள்ளை தன்னைப் பற்றி எதிர்மறையான ஒரு பார்வையை கொண்டிருக்கும் போது எமது மறுப்போ எதிர்ப்போ எந்தப் பயனும் தரப்போவதில்லை. அவர்கள் வெறுமனே தமது அபிப்பிராயத்தை உறுப்படுத்தி வெளிப்படுத்துகிறார்கள் என்பதால் நாம் செய்யக்கூடிய பெரிய உதவி அவர்களை நாம் புரிந்து கொள்வதாகக் காட்டுவது மட்டுமே, அவர்களது பொதுவான உணர்வை மட்டும்ல்ல, அவற்றின் தாக்கங்களையும் நாம் புரிந்து கொள்வதாகக் காட்டுவது மட்டுமே.




# நூல் அறிமுகம்

## “இலக்கியத்தில் சமூகம்”
### -பார்வைகளும் பதிவுகளும்-

*வெளியீடு*
*இ. இராஜேஸ்கண்ணன்*
*ஜீவநதி*
*விலை-250.00*

“இலக்கியத்தில் சமூகம்-பார்வைகளும் பதிவுகளும்” என்னும் இந்நூல் ஆசிரியரின் ஆறாவது நூலாக வெளிவந்திருக்கின்றது. இ.இராஜேஸ்கண்ணன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல்துறை விரிவுரையாளர். ஒரு சிறந்த இலக்கிய படைப்பாளியும் கூட. அத்தோடு சிறுகதைகளையும் கவிதைகளையும் தொடர்ச்சியாக எழுதி வருகின்றார். இந்த நிலையில் தான் அவரது ஆறாவது நூலாக “இலக்கியத்தில் சமூகம்-பார்வைகளும் பதிவுகளும்” என்ற நூல் வெளிவந்திருக்கின்றது.

இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தின் பளிங்கு கண்ணாடி என்று அழைப்பர். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ளதை உள்ளவாறு அப்பிடியே படம் பிடித்து காட்டி விடும். இந்த நிலையில் சமூகவியல் பார்வைத் தளத்திலான கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூல் படைக்கப்பட்டிருக்கின்றது.

நூலின் உள்ளே “கலையின் சமூகவியல்” சில சிந்தனா கூடங்களின் வழியான தேடல், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் “காதலியாற்றுப்படை”-ஒரு சமூகவியல் நோக்கு, திருக்குறள் புலப்படுத்தும் மக்கள் பங்கேற்றலின் கூறுகள்- ஒரு சமூகவியல் நோக்கு, யாழ்ப்பாணத்துச் சமூக பண்பாட்டு அசைவியக்கத்தில் பண்பாட்டு ஆளுமைகளின் வகிபாகம்-பாவலர் தெ.அ.துரையப்பாப்பிள்ளை குறித்த ஒரு சமூக மானிடவியல் நோக்கு, “ஔவையை மறுதலிக்கும் அவ்வைகள்” பெண்கவிஞர் தொடர்பான இருதுருவ நோக்கு, ஈழத்து கவிதைத் தடத்தில் “கைகூ” கவிதைகள், கவிதை மொழி உணர்வுத்தளமும் கருத்தியல் தளமும், “யுகசந்தி” ஒரு சமூக வரலாற்றுப் பதிவின் புனைவாக, புதுமைப்பித்தனின் “சாபவிமோசனம்” குறித்த ஓர் உசாவல், ஆத்திசூடி-ஔவையார்-பாரதி-முருகையன் ஒரு கருத்துநிலை ரீதியான ஒப்பாய்வு. போன்ற கட்டுரைகள் இந் நூலில் அடங்குகின்றன. இந்நூலின் மூலம் வெளிப்படுத்தும் நூலாசிரியரின் சிந்தனைப்புலமும் பார்வைப் புலமும் இலக்கியச் செல்நெறியை வழிபடுத்தும் ஓர் ஆளுமையாக அவர் எதிர்காலத்தில் விளங்குவார் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

---

**ஜனதிபதி தேர்தல் தமிழ் மக்கள்....**

(06 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாறாக ஆரம்பத்தில் தாமதமடையலாம் ஆனால் மீண்டும் தீவிரமடையும்.

புதிய ஆட்சியில் இலங்கை தொடர்பான புவிசார் அரசியல் போட்டி நிலைமாற்றம் அடையும். சீன ஆதிக்கம் படிப்படியாக கட்டுப்படுத்தடலாம். இந்தியாவின் பிராந்திய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படலாம், அமெரிக்காவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரிப்பதன் மூலம் அதன் பூகோள ஆதிக்க நலன் பேணப்படலாம்.

அதே வேளை தமது நட்புசக்தியாக இருக்கக்கூடிய புதிய ஆட்சிக்கு நெருக்கடி வருவதனை தவிர்க்கும் முயற்சியில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும், இந்தியாவும் இணைந்து ஈடுபடும். அந்நாடுகளுக்கு தமிழர்கள் தேவைப்படாத நிலை உருவாக தமிழ் மக்கள் பற்றிக் கதைப்பதையும் கைவிட்டுவிடும். சர்வதேச விசாரணை இடைநடுவில் நின்று போனாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை.

மூன்றாவது அரசியல் தீர்வு விடயத்தில் 13ம் திருத்தத்தினுள் நின்று கொள்ள வேண்டும் என்பதே மைத்திரிபாலவினதும், சோபித தேரரினதும், சந்திரிகாவினதும் நிலைப்பாடாகும். 13ஐயும் கொடுக்கக் கூடாதென்பது ஜாதிககெல உறுமய உள்ளிட்ட பௌத்த இனவாதிகளின் நிலைப்பாடாகும். 13ஐ தாண்டி ஏதும் கொடுப்பது பற்றி அரசுத் தலைவர் பேசுவாராகில் அவரை கதிரையில் ஏற்றிய பௌத்த இனவாதம் அவருக்கு எதிராக கொதித்தெழுந்து அவரை பதவியைவிட்டு தூக்கி எறியும். அவ்வாறான நிலை உருவாகினால் இந்திய மற்றும் மேற்குலக நட்புசக்தி ஆட்சியிழக்க மீண்டும் அதற்கு எதிராக சீன சார்பு சக்திகள் ஆட்சிப் பீடமேறும் நிலை உருவாகும்.

நான்காவது ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியில் தமிழ் மேட்டுக்குடி அதனுடன் கொஞ்சத் தொடங்கும். தற்போது மகிந்தர் தமிழ் மேட்டுக்குடியையும் புறக்கணித்து வருகிறார். அதனால் தமிழ்த்தேசிய அரசியலுடன் நிற்பதைத்தவிர அதற்கு வேறு தெரியவில்லை. ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியில் அது தமிழ் தேசிய அரசியலுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கும்,

தமிழ் மக்களைப் பொறுத்த வரை இன அழிப்பிற்கு நீதியும், இனப்பிரச்சனைக்கு சுயநிர்ணயமுடைய அரசியல் தீர்வும் மிக அவசியம். அந்த இரு விடயங்களிலும் எந்த விட்டுக்கொடுப்புக்களையும் செய்ய முடியாது. மைத்திரிபால தான் வென்றால் ராஜபக்சவிற்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை நடைபெற அனுமதிக்க மாட்டேன் என்று அடித்துக் கூறியுள்ளார். எனவே புதிய ஆட்சியிலும் இன அழிப்பிற்கு எந்த நீதியையும் எதிபார்க்க முடியாது. 13வது திருத்தத்தினுள் முடக்க விரும்புவதால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் கிடைக்கப் போவதில்லை.

எந்தத் தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் அவர்களாக விரும்பி தமிழ் மக்களுக்கு எந்தவொரு அரசியல் தீர்வையும் வழங்கப் போதில்லை. பூகோள போட்டியூடாக சர்வதேச தரப்பு ஒன்று தமிழர்களை அங்கீகரிக்கும் நிலை ஒன்று உருவாகுவதன் மூலம் மட்டுமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு வழி பிறக்க முடியும்.

இந்நிலையில் சிங்கள தேசத்திற்கான தலைவர்களை தெரிவு செய்யும் தேர்தலில் தமிழ்த் தேசம் பங்கெடுப்பதன் மூலம் தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரக் கோரிக்கை நீர்த்துப் போவதைத் தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை. இந்த யதார்த்த நிலைகளை புரிந்து கொண்டு வரப் போகும் தேர்தலில் தமிழ்த் தேசத்து மக்கள் ஒன்றில் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும், அல்லது தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களது அரசியல் வேணவாவை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

---

**ஜனதிபதி தேர்தல் காலங்கள் மாறும்....**

05 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

நிறுவனங்களும் சில ஊடகங்களும் இதற்குள் அடங்கும். குடும்பத்தினரிடம் அதிகாரக்குவிப்பும், இராணுவ இறுக்கமுமே இதற்குக் காரணம். ஆனாலும் அதற்கு தலைமை கொடுப்பதற்கு யுத்த வெற்றி வாத தளத்திலிருந்து ஒரு தலைவர் கிடைக்கவில்லை. தற்போது மைத்திரிபாலசிறீசேன கிடைத்திருக்கின்றார்.

ஆரம்பத்தில் போட்டியாளர்களில் ஒருவர் மைத்திரி என்பது இரகசியமாக பேணப்பட்டது. அதன் மூலம் ராஜபக்ச கம்பனி உசாரடையாமல் காய்கள் நகர்த்தப்பட்டன. சோபிததேரர் ஒதுங்கிய பின் சந்திரிகா, கரு, ரணில் என மும்முனைப் போட்டி போன்று திசைதிருப்பல்கள் நடந்தேறின. அதிலும் ரணிலா? சந்திரிகாவா? என்ற தெரிவே அதிகமாக இருந்தது. வேட்பாளர் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளராக இல்லாது பொது வேட்பாளராக அதுவும் யுத்த வெற்றி வாதத்தளத்திலிருந்து வந்த வேட்பாளராக இருக்க வேண்டும் என்பதில திட்டம் வகுத்தவர்கள் தீவிரமாக இருந்தனர். தனக்கு வெற்றிவாத முகம் இல்லை என்பதனாலும்,இயக்குநர் பாத்திரத்தை ஏற்க வேண்டியிருத்ததினாலும், பிள்ளைகளின் எதிர்ப்பினாலும் சந்திரிகா போட்டியிலிருந்து விலகுவதாக ஒரு தோற்றத்தைக் காட்டி மைத்திரியினை களம் இறக்கியிருக்கிறார்.

தயாரிப்பாளர்களான சர்வதேச சக்திகளின் தெரிவு வேறாக இருந்தாலும் ரணிலுக்கு தான் வேட்பாளராக நிற்க வேண்டும் என்பதே விருப்பம். தானே பொதுவேட்பாளருக்கு பொருத்தமானவர் என சரத் பொன்சேகாவைக் கொண்டும், விக்கிரமபாகு கருணநாயக்காவினைக் கொண்டும் அறிக்கை விடச் செய்தார். சரத் பொன்சேகாவை விட்டுவிடுவோம். விக்கிரபாகு ரணில் தான் பொருத்தமானவர் எனக்கூறுவதற்கு கிடைத்த மாக்சீய அகராதி எதுவெனத் தெரியவில்லை. ரணிலுக்கு பொது வேட்பாளர் முகம் இல்லை என சந்திரிகா வற்புறுத்தினார். இதனால் அமெரிக்கா அழுத்தம் கொடுக்க ரணிலுக்கு பணிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

மைத்திரி களமிறங்கப்போகின்றார் என்ற செய்தி தேர்தல் அறிவிப்பு பத்திரத்தில் கையொப்பமிட்ட பின்னரே மகிந்தருக்கு கிடைத்தது. அவரை சமாதானம் செய்ய சகோதரர்களை அனுப்பியும் இயலாத போது கடைசி நேரத்தில் தானே நேரடியாக சமாதானம் செய்ய முன்வந்தார். இறுதியில அவரது முயற்சியும் கைகூடவில்லை.

---

**மாவீரர் கெடுபிடி.....**

03 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

ஒருநாள் உணரும் என்றும் குறிப்பிட்டார். லண்டனில் எக்செல் மண்டபத்தில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் தமிழ்த்தேசிய ஆதரவு சக்திகள் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தனர். அங்கும் பொலிஸார் தாம் இலங்கை இராணுவத்திற்கு குறைந்தவர்கள் அல்லர் என்பதை கெடுபிடிகளில் காட்டினர். ஈழ அகதி முகாம் கோவில் ஒன்றில் குடும்ப விசேட நிகழ்வுகள் கூட தடுத்து நிறுத்தப்பட்டது. அதற்கு எதிராக போராட்டம் நடாத்திய மக்களும் கடுமையாக தாக்கப்பட்டனர்.

இந்திய அரசும் இலங்கை அரசும் தமிழ்த்தேசிய உணர்வு மீண்டும் வளர்ந்து விடும் அச்சத்தினால் தான் மாவீரர் தினம் அனுஷ்டிப்பதை தடுக்க முனைகின்றனர். இவ்வாறு தடுப்பதனால் தமிழ்த்தேசிய உணர்வு கூடுமே ஒழிய ஒருபோதும் குறையப்போவதில்லை.

---

**மோடியின் வெளிநாட்டுக்.....**

02 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

பேச சுதந்திரம் வழங்குதல் என்பன தொடர்ந்தன.

வியட்னாமுடனான இந்தியாவின் உடன்படிக்கைக்கு அதிர்ப்தி தெரிவிக்க சீனா அணுநீர் மூழ்கியை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. சீனாவை அனுப்ப வேண்டாம் என்று கூறும் துணிவு மகிந்தருக்கு இல்லை. சற்று இரகசியமாக வைத்திருக்க முற்பட்டார். சீனாவே அதனை பகிரங்கப்படுத்தியது. பெரியண்ணன் பாணியில் பாதுகாப்பு அமைச்சு செயலாளரை அழைத்து எச்சரிக்கை செய்தபோதும் திரும்பவும் நீர்மூழ்கி வந்தது. பெரியண்ணனுக்கு மகிந்தர் கொடுத்த மதிப்பு இதுதான். தற்போது மகிந்தரை அதிகாரத்தில் இருந்து அகற்ற அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்திருக்கின்றது. பொது எதிரணி வேட்பாளர் தெரிவில் இந்தியாவின் கையும் இருந்ததாக கதை.

கூட்டமைப்பிற்கு பெரியண்ணன் பொது எதிரணி வேட்பாளரை ஆதரிக்குமாறு கட்டளையிட்டார். ஆனால் மகிந்தர் இனவாத பிரச்சாரத்திற்கு பயன்படுத்தி விடுவார் என்பதற்காக பகிரங்க ஆதரவளிக்க சம்பந்தன் தயங்குகின்றார். திரைமறைவில் எதிரணியினரோடு சல்லாபத்திற்கு குறைவில்லை. இங்கும் கூட இரகசியம் வெளியில் வரக்கூடாது என்பதற்காக சந்திப்புகளுக்கு தனித்தே சம்பந்தன் செல்கின்றார். இது விடயத்தில் சுமந்திரனில் நம்பிக்கை வைக்க கூட அவர் தயாராகவில்லை.

சீனாவுடன் மோடியின் உறவு சாண் ஏற முழம் சறுக்கின கதைதான் . பெரிய ஆரவாரத்துடன் சீன ஜனாதிபதியை வரவேற்க மோடி காத்திருந்தபோது. எல்லையில் சீனப்படைகள் புகுந்து அந்த ஆரவாரத்தை குழப்பின. மலையளவிற்கு சீன முதலீடுகள் வரும் என எதிர்பார்த்த போதும் அங்கும் கிள்ளி எறிந்த நிலையே இருந்தது. தென் சீனக்கடலில் உள்ள எண்ணெய் படிவு தொகுதிகள் (oil Blocks) தொடர்பாக சீனாவிற்கும் வியட்னாமுக்கும் இடையே தகராறு நிலவுகின்றது. அதனை மதிக்காமல் வியட்நாமுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டமை சீனாவிற்கு கடுப்பேற்றியுள்ளது.

சீனா, இந்தியாவின் அயல் நாடுகளை தன் பக்கம் இழுக்க, இந்தியா சீனாவின் அயல் நாடுகளை தன் பக்கம் இழுக்கப் பார்க்கின்றது. ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், ஆகிய சீனாவின் அயல் நாடுகளுடன் நெருங்கிப்போக இந்தியா முயற்சிக்கும் போது சீனா ,இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் போன்ற இந்தியாவின் அயல் நாடுகளுடன் நெருங்கிப்போக முயல்கின்றது.

எனினும் இங்கு சீனாவின் ஓட்டத்திற்கு கிட்டக்கூட செல்ல இந்தியாவால் முடியவில்லை. சீனா நெருக்கத்தை காட்டுவதற்காக இந்தியாவின் அயல் நாடுகளுக்கு நிதியினை அள்ளி வீசுகின்றது. தனது நாட்டில் உள்ள பெரு வீதிக்கோட்பாட்டை அரங்கேற்றுகின்றது. இதற்கு முன்னால் இந்தியாவின் கிள்ளித்தெளிப்பு பெரியளவிற்கு வெற்றியை கொடுக்கவில்லை.

பாகிஸ்தானுடன் நல்லுறவுகளை கட்டியெழுப்ப முயற்சித்த போதும் காஸ்மீர் விவகாரம் அதற்கு குறுக்கே வந்து நின்றது. இந்தியாவுடன் உறவுகளை பேணுவதற்காக காஸ்மீர் விவகாரத்தை கைகழுவி விட பாகிஸ்தானின் எந்த தலைவரும் இன்று தயாராக இல்லை. சீன செல்வாக்கை சமனிலைப்படுத்த இந்திய,அமெரிக்க கூட்டு நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்ட போதும் அதுவும் வெற்றிப்பாதையில் பயணிக்கவில்லை

தெற்காசியாவில் கெடுபிடி யுத்தம் ஆரம்பித்து விட்டது. இதில் வெல்லப் போகின்றவர் யார்? சீனாவா? அமெரிக்க இந்தியக் கூட்டா? வரலாறு எழுப்பும் முக்கிய கேள்வி இதுதான்.

# சினிமா




## இயக்குனரின் நாற்காலி

கிறிஸ்தோபர் பிளம்மர் கனடாவின் மிகச்சிறந்த நாடக நடிகர். இவர் நடித்த ஷேக்ஸ்பியர் நாடகங்கள் மிகவும் பிரபல மானவை. திரையுலகிலும் மாறுபட்ட கதபாத்திரங்களில் நடித்து பல்வேறு விருது களைப் பெற்றிருக்கிறார்.

அறுபது ஆண்டுகளிற்கும் மேலாக நடிப்புத்துறையில் உள்ள பிளம்மர, "தி லாஸ்ட் ஸ்டேஷன்" திரைப்படத்தில் லியோ டால்ஸ்டாயாக அற்புதமாக நடித்திருக்கிறார். இவர் நடித்த man in the chair நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்த்த Feel Good Movie என்பேன். Michael Schroeder இப்படத்தை இயக்கியுள்ளார்.

சினிமாவிற்காகத் தனது வாழ்க் கையை அர்ப்பணித்துக் கொண்ட மூத்த கலைஞர்களையும் அவர்களின் புறக் கணிக்கப்பட்ட வாழ்க்கை நிலையினையும் ஆதங்கத்துடன் விவரிக்கிறது இப்படம்.

வெற்றி மட்டம் தான் ஹாலிவுட்டின் ஒரே இலக்கு. வெற்றிக்குத் துணையிருப்ப வர்கள் எவரும் கண்டு கொள்ளப்படுவ தில்லை. எத்தனையோ சாதனையாளர்கள் காலமாற்றத்தில் கண்டுகொள்ளப்படாமல் ஒதுங்கிப் போய்விட்டார்கள். திரையுலகின் மூத்த கலைஞர்கள் இன்று எப்படி வாழ் கிறார்கள் என்பதை இப்படம் சிறப்பாகப் பேசுகிறது.

பிளாஸ், ஹாலிவுட் சினிமாவில் ஆர்சன் வெல்ஸ் உடன் பணியாற்றிய ஒரு gaffer. ஒளிப்பதிவிற்கான விளக்குகளைக் கவனித்துக் கொள்வது, ஒளிப்பதிவிற்கு உறுதுணை செய்யும் மின்சாதனங்களை இயக்குவது போன்ற பணியது. "சிட்டிசன் கேன்" படத்தில் பணியாற்றிய போது ஒரு முறை படப்பிடிப்பில் திடீரென பிளாஷ் அடித்துவிட்ட காரணத்தால் அவரது பெயரை பிளாஷ் என மாற்றுகிறார்கள் ஆர்சன் வெல்ஸ்.

பல்வேறு முக்கிய திரைப்படங்களில் பணியாற்றி விட்டு ஓய்வுபெற்ற பிளாஷின் ஒரே பொழுதுபோக்கு, நாள் முழுவதும் குடிப்பதும்,திரையரங்கிற்குப் போய் பழைய திரைப்படங்களைக். காண்பதுமே. ஒவ் வொரு காட்சியைக் காணும்போது பழைய நினைவுகள் அவருக்குள் பீறிடுகின்றன. படத்தின் வசனங்களை அவர் கூடவே சொல்லுகிறார்.

அந்தக் காலத்து இயக்குனர்களைப் போல தனித்துவமிக்க அழகியலோடு ,அர்ப் பணிப்பு உணர்வோடு படம் எடுப்பவர்கள் இப்போது குறைந்து விட்டார்கள் எனத் திட்டு கிறார்கள்.

முதுமையில் தனியாக வாழும் பிளாஷ் ஒருநாள் Touch of Evil படத்தைக் காணச் செல்கிறார். படத்தில் இடம்பெற்ற காட்சிகளைப் போற்றிப் பாராட்டுகிறார். அதை கேமரூன் என்ற பதின்ம வயதுப் பையன் வியப்போடு பார்த்தபடியிருக் கிறான். திரைப்படம் பார்த்துக் கொண் டிருக்கும் போது ஆபரேட்டர் அறையில் தீப் பற்றிக் கொண்டுவிடுகிறது. அதை ஓடிப் போய் அணைக்கிறார் பிளாஷ். கேமரூன் அவரைப் பின்தொடர்ந்து சென்று பிளாஷ் எங்கே தங்கியிருக்கிறார். என அறிந்து கொள்கிறான். தானும் ஒரு சினிமா எடுக்க வேண்டும் என கேமரூன் ஆசைப்படு கிறான். ஒரு நாள் அவனும் நண்பனும் விளையாட்டாக ஒரு பழைய காரைத் திருடி விடுகிறார்கள், அதற்காகப் பிடிபட்டு சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார் கள், அப்பா இல்லாத கேமரூனை அவனது அம்மா சீர்திருத்தப் பள்ளியிலிருந்து வெளியே கொண்டு வருகிறாள்.

கேமரூனுக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை காரணம் அவனது தாய் இரண்டாம் திருமணம் செய்து கொண்டது. இதற்கிடையில் மாணவர்களிற்கான சினிமா எடுக்கும் போட்டி ஒன்றினைப் பற்றி அறிந்து கொண்ட கேமரூன் தான் அதில் கலந்து கொள்ள ஆசைப்படுகிறான் அந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் திரைப் படப்பள்ளியில் படிக்க உதவித்தொகை கிடைக்கும். இதற்காக ஒரு படம் எடுக்க வேண்டும் என தனது நண்பனை ஒன்று சேர்த்துக் கொண்டு பிளாஷை சந்தித்து உதவிகேட்கிறான்.

தான் சினிமாவை விட்டு ஒதுங்கி வாழ்வதாகச் சொல்லும் பிளாஷ் அவனு டன் இணைந்து பணியாற்ற விருப்ப மில்லை என விரட்டிவிடுகிறார். ஆனால் கேமரூன் அவரை விட்டுவிடவில்லை. தினமும் பின் தொடர்கிறான் திட்டுவாங்கு கிறான். ஒருநாள் அவருக்குப் பிடித்தமான ஹவானா சுருட்டை வாங்கி வந்து பரி சாகத் தருகிறான் இப்படியாக அவருடன் பேசிப்பேசி தனது சினிமா எடுக்கும் முயற் சிக்கு ஒத்துழைப்பு தர வைக்கிறான். அவ னிடம் கதையில்லாத காரணத்தால் தனது நண்பர் ஒருவரை எழுத்தாளராக வைத் துக் கொள்ளலாம் என அழைத்துப் போகி றார் பிளாஷ்.

இருவரும் ரோமன் ஹாலிடே போன்ற ஆஸ்கார் விருது பெற்ற படங்களுக்குத் திரைக்கதை எழுதிய Mickey Hopkins ஐக் காணச் செல்கிறார்கள்.நோயுடன் போராடியபடி தனித்து வாழும் மிக்கி தன்னைத் தேடி பழைய நண்பன் வந் துள்ளதைக் கண்டு வியந்து வரவேற் கிறார். இத்தனை ஆண்டுகளிற்கு பிறகு தனக்கு மீண்டும் ஒரு சினிமா வாய்ப்பு வந் துள்ளது குறித்து சந்தோசம் கொள்கிறார். ஆனால் அவரால் தனது டைப்ரைட்டரில் ஒரு வரி அடிக்க முடியவில்லை. மனது சந்தோசத்தில் மீண்டும் வேலை செய்யத் துடிக்கிறது. உடல் ஒத்துழைப்பு செய்ய மறுக்கிறது. அவரிடம் என்ன கதை என யோசித்து வைக்கும் படியாகச் சொல்லிப் போகிறார் பிளாஷ்.

மிக்கி போன்ற பெரும் வெற்றியாளர் கள் கூட குடும்பத்தினரால் துரத்தப்பட்டு முறையான மருத்துவ பராமரிப்பு இன்றி தனிமையில் வாடுவதை அறிந்த கேமரூன் அமெரிக்காவில் முதியோர்களிற்கான மருத்துவ உதவிகள் சரியாகக் கிடைக் கிறதா என்பதை மையமாகக் கொண்ட ஒரு படத்தை எடுக்க நினைக்கிறான்.

இதற்கு ஒத்துழைப்பு தருவதற்காக தன்னோடு ஹாலிவுட்டில் பணியாற்றிய பழைய திரைப்படக் கலைஞர்கள் அனை வரையும் ஒன்று சேர்க்கிறார் பிளாஷ்.

தங்களைப் புறக்கணித்து விட்டார்கள் என்ற கவலையுடன் ஒதுங்கி வாழ்ந்த மூத்த திரைக்கலைஞர்கள் அனைவரும் மீண்டும் ஒருமுறை ஒரு படம் எடுக்க ஒன்று சேருகிறார்கள்.பிளாஷின் உதவி யோடு கேமரூன் சினிமாவின் நுட்பங் களைப் பற்றி கொஞ்சம் கொஞ்சமாக தெரிந்து கொள்ளத் துவங்குகின்றான். அப்போது இயக்குனரின் நாற்காலி என்பது எவ்வளவு முக்கியத்துவம் என்பதைப் பற்றி பிளாஷ் அற்புதமாக விளக்குகிறார்.

படத்தினைத் தயாரிப்பதற்குப் பணம் வேண்டும் என்பதற்காகத் தனது மனை வியைக் கள்ளக்காதல் புரிந்த தன்னை விட்டு இழுத்துக் கொண்டு ஓடிய தாயாரிப் பாளரான டெய்லரிடம் போய் தனக்காக கேமரூனுக்கு உதவி செய்யும் படி கேட் கிறார்.

அப்போது தனது திரைப்படங்கள் பற்றி டெய்லர் பெருமை பேசும் போது ஆத்திரமான பிளாஷ் சொல்லும் வசனமிது Don't confuse activity with achieve ment.ive seen those pieces of shit,those celluloid abortions that you call movies.

தன்னை ஏமாற்றிய மனிதனிடம் உதவியைப் பெற்று கேமரூனுக்காகப் படம் எடுக்க உதவுகிறார் பிளாஷ். படம் துவ ங்கப் போகிறது எனத் தீவிரமாக வேலை களைக் கவனிக்கிறான் கேமரூன்.

இதற்கிடையில் பிளாஷ் ஒருநாள் மித மிஞ்சிக் குடித்துவிட்டு ஏதோ சின்னப் பையன் விளையாட்டுக்கு சினிமா எடுக்க முயற்சிக்கிறான். இதற்கெல்லாம் நாம் உதவி செய்யக் கூடாது என மறுத்துக் கூச்சலிடுகிறான். இதனால் ஆத்திரமாகி கேமரூன் கோபித்துக் கொண்டு போய் விடுகிறான்.

மறுநாள் தனது நிலையை உணர்ந்த பிளாஷ் கேமரூனைத் தேடிப் போய் போதையில் உளறிவிட்டதாக் கூறி மீண்டும் அவனுக்கு உதவி செய்ய முன் வருகிறார் படப்பிடிப்பு துவங்குகிறது. ஒரு மாணவனுக்காக வயதானவர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து உதவி செய்கிறார்கள்.

படப்பிடிப்பை நிறைவு செய்யும் போது ஏதோ ஒன்று பட்த்தில் குறைவாக இருப் பதை உணர்கிறான் கேமரூன். முடிவில் அதிர்ச்சி தரும் சம்பவம் ஒன்றினை நேரில் பார்வையிடுகிறான். அதுவே படத்தின் இறுதிக்காட்சியாகிறது. முடிவில் பிளாஷ் இறந்து போகிறார். படம் திரையிடப்படு கிறது. கண்கள் கலங்க அனைவரும் அதை ரசிக்கிறார்கள். பெருமையோடு கேம ரூனைக் கட்டிக் கொள்கிறார்கள். கேமரூன் திரைப்படப் பள்ளியில் சேர்ந்து சினிமா கற்கத் துவங்குகிறான்.

It1s not the strength,but the duration of great sentiments that makes great men.என கேமரூன் கூறுவதுடன் படம் நிறைவுபெறுகிறது.

இந்தப் படம் கறுப்பு-வெள்ளையுகத்து சினிமா கலைஞர்கள் இன்று எப்படியிருக் கிறார்கள் என்பதை மறுபரிசீலனை செய் கிறது. இன்னொரு தளத்தில் ஒரு மாணவ னுக்காக வயதானவர்கள் ஒன்று சேர்ந்து எப்படி உதவுகிறார்கள் என்ற உணர்ச்சி பூர்வமான உறவை விவரிக்கிறது.

மூன்றாவதாக, பிளாஷைத் தனது குரு வைப் போல உணரும் கேமரூன் அவரிட மிருந்து எப்படி சினிமாவைக் கற்றுக் கொள் கிறான் என்பதை படம் நெகிழ்ச்சியுடன் விப ரிக்கிறது. கவித்துவமான வசனங்களும் தேர்ந்த இசையும் படத்திற்கு மிகுந்த உறுதுணையாக உள்ளன.

ஆர்சன் வெல்ஸ் உடன் இணைந்து பிளம்மர் சில திரைப்படங்களில் நடித்தவர் என்பதால் இது அவரது உண்மைக்கதை என்பது போன்ற சாயல் கொண்டிருக் கின்றது. படத்தில் பிளம்மரின் நடிப்பு மிகச் சிறப்பாக உள்ளத. போதையில் அவர் நடந்து கொள்ளும் விதம், இயலாமை, கோபம், ஆத்திரம், தான் ஒருவனை வளர்த்து விடப்போகிறோம் என்ற பொறுப்புணர்ச்சி என பிளம்மர் காட்சிக்குக் காட்சி யொலிக்கிறார். இப்படத்திற்காக Palm Beach international Film Festivel நிகழ்வில் அவருக்கு சிறந்த நடிகர் விருது கிடைத்திருக்கிறது.

கறுப்பு-வெள்ளைத் திரைப்படங்களை அரங்கில் காணும்போது அதற்கு பிளாஷ் அடிக்கும் கமெண்டுகள் வேடிக்கையாக உள்ளன. சினிமா வெறும் பொழுது போக் கிற்கானதில்லை. அது ஒரு உன்னதமான கலை. வாழ்க்கைக்கு நெருக்கமாக, உண் மையாக அது உருவாக்கப்பட வேண்டும் என கேமரூன் முயற்சிப்பதும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஒரு வழி காட்டுதல் போலவே உள்ளது.

-நன்றி - உயிர்மை-

# உனக்காக கொந்தளிப்பேன்

நேற்று எனது ஊரையும்
இன்று உனது ஊரையும்
அழிக்க எங்கிருந்து புறப்பட்டனர்?
நண்பனே, சிதைக்கப்பட்ட கிராமம்
ஒன்றிலிருந்து
உனக்காய் குரல் கொடுக்கும்
நானறிவேன் இழப்புகளின் வலியை
நேற்று எனது வீட்டையும்
இன்று உனது வீட்டையும் உடைப்பது ஏன்?
இடிபாடடைந்த வீடொன்றிலிருந்து
உனக்காய் அவதியுறும்
நானறிவேன் வீடற்ற பொழுதுகளை

நேற்று என் மீது குண்டுகளும்
இன்று உன் மீது வாள்களும் வீசுகின்றவர்
யார்?
ஆறாத காயங்களோடு
உனக்காய்த் துடிக்கும் நானறிவேன்
காயங்களின் நிஜத்தை
என் கோவில்களையும்
உன் பள்ளி வாசல்களையும் இடிப்பது ஏன்?
கடவுள்களையும் கொலைசெய்யும்
நிலத்திலிருந்து
உனக்காய் பிரார்த்திக்கும் நானறிவேன்
கைவிடப்படுதலின் துயரத்தை

என்னிடம் தொப்பி இல்லை
நீயோ திருநீறு அணிந்திருக்கவில்லை
ஆனாலும் நமது இரத்தம் உறிஞ்சப்படுகிறது
வெறியோடு அலையும் விலங்குகளின்
கண்களுக்கு
உறிஞ்சப்படும் குருதி வேறுவேறல்ல

என் சகோதரிகள் பர்தா
அணிந்திருக்கவில்லை
உன் சகோதரிகளோ கூந்தலில்
பூச் செருகியிருக்கவில்லை
ஆனாலும் நமது கண்ணீர் அருந்தப்படுகிறது
வெறியோடு அலையும் விலங்குகளின்
கண்களுக்கு
நீயும் நானும் வேறுவேறல்ல

நண்பனே உன் கண்ணீரைத்துடைத்து
உனக்காக கொந்தளிக்கும்
நானறிவேன் ஒடுக்குமுறையின் குரூரத்தை

தீபச்செல்வன்

## ஊஞசல்

என்னை
மார்பில் தூக்கியவனுக்கு
மனித நேயம்
பொறுமை
இருக்கவேண்டும்.
இரும்பால் தான்
என்னை செய்தார்கள்
ஆனால்
உனது கரம்பட்டு
உனது மனம் இரும்பானதைப்
பார்த்து உருகுகிறேன்

-செல்வக்குமார்-

## புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தபெருமான் சுடப்பட்டிறந்தார்
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்
"எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர் "
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச்சுடாமல்
ஓர் ஈயினைக்கூடச்
சுட முடியாது போயிற்று எம்மால்- ஆகையினால் தான்..."
என்றனர் அவர்கள்.
"சரி,
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்.
சிகாலோகவாத சூத்திரத்தினைக்- கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது.
தம்ம பதமும் தான்- சாம்பரானது.

(சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன
பௌத்த மத அற நூல்கள்)
நுஃமான் எம்.ஏ

# புகை நடுவில்

## சமஸ்கிருதக் கதை



ராம்பிரகாஷ் வீட்டில் போதுமான செல்வச் செழிப்பு இருந்தது. பல விதங்களில் பணம் வந்து விழுந்துகொண்டிருந்தது. ஆனால் அவனுடைய மனைவி திருப்தி அடைந்தபாடில்லை. இன்னும் காசு வேண்டும் என்ற ஆசை. தன்னுடைய அசட்டு நடவடிக்கையினாலும், கெடுமதியாலும் வீட்டுக் கதவுகளை மூடிக்கொண்டு அந்த வளமைக்குக் குறுக்கே கைகளை நீட்டித் தடுப்பாகிவிடுவாள். எவ்வளவு தான் வளமை இருந்தாலும் சிலர் இன்னும் வேண்டும் என்று ஆசைப்பட்டு. வர இருப்பதைக்கூடக் கைநழுவ விட்டுவிட்டுத் தங்களுக்குத் தாங்களே பச்சாதாபப்பட்டுக் கொள்வார்கள். தொலைக்காட்சியில் தொடரின் கடைசிப்பகுதி ஒளிபரப்பாக இருந்தது. அந்தத் தொடரைப் பார்க்கும் ஆர்வத்துடன் அறையில் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். ராம்பிரகாஷின் மனைவி திவ்யாவும். மகன் சந்திரதேவும் அந்தத் தொடரைப்பற்றிய சர்ச்சையில் மூழ்கிப்போயிருந்தார்கள். மூத்த மகள் ஷோபாவும் அங்கேதான் உட்கார்ந்திருந்தாள். அருகிலேயே சின்னப்பிள்ளைகள் இருவரும் விளையாடுவதில் மும்முரமாக இருந்தார்கள். தொடருக்காகக் காத்திருந்த இடைவேளையில், ஷோபாவைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் சம்பந்தகாரர்களைப் பற்றி திவ்யா தன்னுடைய சிநேகிதிகளிடம் தொலைபேசியில் வம்பளந்து கொண்டிருந்தாள். கல்யாணத்தன்று என்னென்ன சமையல் எந்தக் கல்யாண மண்டபம் நன்றாக இருக்கிறதோ என்ற கவலை ஆகியவை பற்றி மிகுந்த உற்சாகத்துடன் கைகளை ஆட்டியபடி கண்களை உருட்டி ஓடவிட்டபடி உரையாடலில் மூழ்கினாள்.

தொலைக்காட்சியில் இன்னும் விளம்பரம் தான் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. திவ்யா தொலைபேசி உரையாடலை முடிவித்தவிட்டு ராம்பிரகாஷின் அருகில்வந்து ஷோபாவில் உட்கார்ந்தாள் ராம்பிரகாஷ் செய்தித்தாள் படித்துக்கொண்டே இளையமகனிடம் "சூரியதேவ் சிக்கிரமாய் போய் தாத்தாவை கூட்டிக்கிட்டுவா என்னன்னு கேட்டா நாடகம் ஆரம்பிக்கப்போகுது என்னு சொல்லு" என்று சொன்னான். "அநேகமாக இதுக்குள்ள வந்திருப்பாங்க எதுக்கும் உடனே போய்ப்பார்த்திட்டுவா" என்றான் கடிகாரத்தை பார்த்தபடி.

"இவ்வளவு நேரத்திற்கு தாத்தா வெளியே இருக்கவே மாட்டாங்க ஆனாலும் நான்போய் பார்த்திட்டுவாரேன்" என்று சொல்லிவிட்டு சூரியதேவ் எழுந்தான். அதற்கு முன்னால் குறுக்கிட்டு திவ்யா உரத்த குரலில் "ஒண்ணும் வேண்டாம் எந்த அவசரமும் வேண்டாம் நீ பேசாமல் இங்கையே இரு" என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு கணவனைப் பார்த்து: எதுக்காக நீங்க இப்போ உங்க அப்பாவை கூப்பிடுறீங்க?" என்று கேட்டாள்.

"ஒண்ணுமில்லே இந்தத் தொடரோடு முடிவுப் பகுதியை பார்த்து விடுவாரில்ல. அதுக்காகத் தான் இந்தத் தொடரை பார்க்கிறதுக்கு அவர் எவ்வளவு விரும்புவார் என்று உனக்கு தெரியுமல்ல... இந்த கடைசி பகுதியை பார்க்கலேன்ன ரொம்ப வருத்தப்படுவாரு". "இந்த வயசான காலத்திலேயே அவருக்கு ஆசைகள் எல்லாம் அதிகமாயிற்று வருது. நாள் முழுக்க அவரோட அறையிலே உட்கார்ந்துக்கிட்டு எதையோ படிச்சுக்கிட்டே இருக்கிறாரு இல்லேன்ன அஞ்சாறு மணி நேரம் படுத்துக்கிட்டே இருக்கிறாரு. சாய்ந்திரம் ஆன உடனே சின்னப்பிள்ளைகள் ஆட்டம் டீவி பார்க்க முந்திக்கிட்டு தயாராகிறாரு. இதை விட்டா அவருக்கு என்ன தான் வேலை இருக்கு?" என்று முகத்தை வக்கரித்துக் கொண்டு சொன்னாள்.

"வேறே என்ன செய்யச்சொல்றே சமையல் கட்டிலே எல்லாவேலையும் செய்யச் சொல்றியா?" என்று சிரித்துக் கொண்டே ராம்பிரகாஷ் கேட்டான். "உங்களுக்கு எப்பவும் கிண்டல் தான் என்பேச்செல்லாம் கேலிக்கூத்தாத்தான் தோணுது" நொந்தபடி பேசினாள் திவ்யா, ராம்பிரகாஷ் செய்தித்தாளை மடித்து வைத்துவிட்டு. "உன்னோட நினைப்புதான் என்ன? அவருக்குன்னு நான் ஏதும் பேசிரக்கூடாதா என்று கேட்டான்." "எல்லாரும் உங்க அப்பா மாதிரித்தான் இருக்கிறாங்களா" திவ்யா உரத்த குரலில் கேட்டாள்." வேறே எப்படி இருக்கிறாங்க" ராம்பிரகாஷ் கோபத்துடன் கேட்டான்.

"ஆமா உங்க அப்ப ரொம்ப சாது.... எந்த வேலைவெட்டியும் இல்லாமா சாப்பிட்டு சாப்பிட்டு கட்டில்லே நிம்மதியா உட்கார்ந்துகிட்டுகாரில்ல..." விட்டேத்தியாக பேசினாள்.

அந்தத் தம்பதிகளிடையே தொடங்கிய உத்வேகம் பொங்கிய பேச்சு வார்த்தையில் ஆவேசம் கலந்தது. ஆனாலும் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு வேதனையுடன் "பாவம் இந்த அறுபத்தைந்து வயசிலே என்ன செய்யிறதுக்கு சக்தி இருக்கும் வேலை எதுவும் செய்யாம சாப்பிடுறார் என்னு ஏன் சலிச்சுக்கிறே இதெல்லாம் உங்க அப்பா சம்பாதித்த சொத்தா இதெல்லாம் எங்க அப்பா சம்பாதிச்ச சொத்து இந்த வயசிலே அவருக்குத் தேவையான வசதிகளை நான்தான் செய்து தந்தாகனும் என்றான்."

"நடுவிலே எங்க அப்பாவை ஏன் இழுக்கிறீங்க" என்று கேட்டாள் திவ்யா. "நீ மட்டும் எங்க அப்பாவை இல்லாததை பொல்லாததை சொல்லலாமாக்கும்" என்று ரோசத்துடன் கேட்டான் ராம்பிரகாஷ்.

அம்மா, அப்பா சச்சரவை கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள் "அப்பா தயவு செஞ்சி சத்தம் போடாதீங்கப்பா" என்றார்கள்

"டேய் நீங்களே சொல்லுங்கடா உங்க அப்பவை யாராச்சும் திட்டினா நீங்க சும்மா இருப்பீங்களா" என்று கேட்டான். "நான் எப்படி சும்மா இருப்பேன் தோலை உரிச்சு தொங்கப்போட்டிருவேன்" என்றாள் ஷோபா. "அப்படின்னா நீயே பார்த்தே இல்லே உங்க அம்மா எங்கப்பாவை என்னவெல்லாம் பேசுறா நீயே சொல்லு நான் என்ன செய்ய னும்ணு" என்று ரோசத்துடன் கேட்டான் ராம்பிரகாஷ்.

"நான் ஒன்னும் தப்பா சொல்லலே அவருக்குப் பணிவிடை செய்ய நீங்க ஒருத்தர் தான் இருக்கீங்களா? அடுத்த பிள்ளை இல்லையா? அவங்க வீட்டிலே இருக்கச்சொல்லுங்க அவரும் அப்பாவுக்கு பணிவிடை செய்யணும்மில்ல" நீட்டி முழக்கிச் சொன்னாள் திவ்யா.

"என் தம்பியோட பணக்கஸ்ரம் உனக்குத் தெரியுமல்ல.... அவனுக்கு அதையெல்லாம் சமாளிக்க சக்தி இல்லே"



"ஒரு குடும்பத்திலே ஒருத்தர் அதிகரிச்சதாலே மத்தவங்க யாரும் பட்டினியாலே செத்திரமாட்டாங்க. அப்படி ஒண்ணும் தரித்திரம் பிடிச்சவரில்லே உங்க தம்பி. பெத்த அப்பாவைக் கொஞ்ச நாள் பராமரிக்கிற சக்தியில்லாதவரு இல்லே அவரு"

"அவருக்கு மூணு பொம்பிளை பிள்ளைங்க ரெண்டு ஆம்பிளை பசங்க என்கிறதை மறந்திற்றியாக்கும் அவன் ஒருத்தன் தான் சம்பாதிக்கிறவன். அவனோட சம்பளம் மாசத்ததுக்கு நாலாயிரம் தான். வாடகை ஐநூறு ரூபாகூடக் கொடுக்கமுடியாத கஷ்ட நிலைமையிலேதான் சின்னதா ஒரு வீட்லே குடியிருக்கான். நீயே சொல்லு மீதி இருக்கிற மூவயிரத்து ஐநூறிலே இப்போ பத்திகிட்டு எரிகிற விலைவாசியிலே எப்படி பிழைக்கிறது. இதையெல்லாம் நினைச்சு தான் அப்பாவை நம்ம வீட்டிலே இருக்க வைச்சிருக்கேன்" தம்பி மீதான இரக்க உணர்வை வெளிப்படுத்தி அவன் பேசினான்.

"உங்க அப்பாவிற்கு அவரோட அவசரச் செலவிற்காக கொடுத்த ஐநூறு ரூபாயைக்கூட உங்க தம்பி பிள்ளைங்களுக்கு அவர் செலவு பண்ணிக்கிட்டிருக்காரு. அப்படி இருக்க அவங்களுக்கு அவருமேலே பாசம் இருக்காதா என்ன."

"அது அவரோட இஷ்ரம் அவரோட அவசரசெலவுக்குக் கொடுத்த பணத்தை எப்படி வேணும்னாலும் செலவழிச் சிட்டுப் போகட்டும் நமக்கென்ன அதைப்பற்றி."

"செய்யட்டுமே ஏன் செய்யக்கூடாது ஆனா நான் இனிமேல் அவருக்குப் பணிவிடை செய்யமாட்டேன் அவ்வளவு தான். அவரு இனிமே இங்கே இருக்கிறது எனக்குப்பிடிக்கேலே" என்று ஆவேசமாக ஆட்டம் ஆடிய படி சொன்னாள் திவ்யா.

"நீ அவருக்க ஏதுவும் செய்யமாட்டியா இது என்னோட வீடு... எங்கப்பாவை இங்கிருந்து வெளியேத்தப் பார்க்கிறீயா இருக்கட்டும் உனக்கு இஸ்ரம் இல்லேன்னா நீ கூட இங்கிருந்து உங்கம்மா வீட்டுக்கு போயிடலாம் அங்கே போய் உங்கப்பாவை உங்க வீட்டிலிருந்து விரட்டியடி அப்போ தெரியும் பெத்த அப்பாவை வெளியே தள்ற வேதனை என்னன்னு" என்று கோபத்துடன் இரைந்தான் ராம்பிரகாஷ்.

இந்த வாக்கு வாதத்தை கேட்டுக் கொண்டிருந்த ராம்பிரகாஸின் மூத்த மகன் "அம்மா தாத்தா நம்ம வீட்ல இருக்கிற பெரியவரு அவரு இருக்கிறதனாலே யாருக்கு என்ன தொந்தரவு?" என்று கேட்டான். "நீ பேசாம வாயை மூடு" என்று அச்சுறுத்தும் பார்வையை வீசி, "பெரியவங்க பேசிக்கிட்டு இருக்கிறப்போ சின்னப்பசங்க தலையை நுழைக்காதீங்க" என்றாள். "நீ மட்டும் பெரியவங்க பேச்சுக்கு மாறாப் பேசலமாக்கும்? தாத்தா பெரியவங்க இல்லையா? நம்ம கிட்ட அவர் எவ்வளவு பாசமா இருக்காரு" என்று அம்மாவைத் திகைக்க வைத்தான்.

"நீ பேசாமவாயை மூடிக்கிட்டு போகலின்னா நாக்கை இழுத்து வைச்சு அறுத்திடுவேன" மகனை அதட்டியபடி தொடர்ந்தாள்" "தாத்தா கூட சேர்ந்து உன் குணமும் கெட்டுப்போய்ச்சு யாருக்கிட்ட என்ன பேசனும் என்கிற விவஸ்தையே இல்லே அடி தடிக்கு தயாராகிற்றுவாறே".

**டாக்டர் ப்ரஸாஸ்யமித்ர சாஸ்திரி**
**தமிழாக்கம் : இளம்பாரதி**
**கோட்டோவியங்கள் : மனோகர்**

"சந்திரன் இப்போ என்ன சொல்லிற்றான் அவன் சொல்லுறது சரி தானே என் மனசில இருக்கிறதை அவன் வெளியே சொல்லியிருக்கிறான்" மகனுக்கு வக்காளத்துப்போல ராம்பிரகாஷ் பேசினான்.

"ஆமாம் இப்படி பிள்ளைங்களுக்கு முன்னாடி என்னை அவமானப்படுத்துங்க என் மனசிலே இருக்கிறதை மட்டும் உங்களாலே புரிஞ்சக்க முடியாது" என்று அழமாட்டாக்குறையாக அவள் வருத்தப்பட்டாள்.

தொடரும்



# வாசகர் கருத்து



## எப்போதும் காத்திருப்பேன்

சக்தி
கிளிநொச்சி

இது நம்தேசம் பத்திரிகைக்கு குழுமத்திற்கு முதலில் வணக்கம். இன்று பல ஊடகங்கள் பல வழிகளில் வளர்ச்சியடைந்துள் என. ஆனால் அவற்றில் சிலவே மக்கள் மத்தியில் தமக்கென தனியிடம் பிடித்திருக்கின்றன. அந்த வகையில் "இது நம்தேசம்" பத்திரிகையும் இன்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த பத்திரிகை தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் என்னை கவர்ந்திருக்கின்றன. குறிப்பாக உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் கட்டுரைகள், மற்றும் வடகிழக்கு தமிழர் களின் பிரச்சினைகள், மலையகமக்களின் பிரச்சினைகள் என்பன என்னை நன்கு கவர்ந்திருக்கின்றன.

கடந்த இது நம்தேசம் பத்திரிகையில் வெளிவந்த "கனக சூரியா எழுதிய பௌத்தம் இலங்கையில் வளர்ந்தது எப்படி" என்ற கட்டுரைமிகவும் தரமான கட்டுரையாக இருந்தது. பௌத்தத்தின் கோரத்தன்மையையும் அதன் வளர்ச்சிக் கட்டத்தின் தாண்டவத்தையும் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியிருந்தது. இது போன்ற மிகமுக்கிய கட்டுரைகளை தொடர்ந்து பிரசுரிக்கின்ற போது பல விடயங்களை வாசகராகிய எங்களால் விளங்கிக் கொள்ளமுடியும். அது மட்டுமல்லாது சி.யோதிலிங்கம், பூரணன், முத்துக்குமார் போன்றவர்களின் கட்டுரைகள் மிகவும் காரசாரமான விடயங்களை எடுத்து பேசுகின்றன. இதன் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் உண்மை முகத்தை தரிசிக்க முடிகின்றது.

இவ்வாறான கட்டுரைகளைதொடர்ந்து பிரசுரிக்கவும். எப்போதும் இது நம்தேசத்திற் காக காத்திருப்பேன்.

---

**மீரியபெத்தயில் உறவுகளை....**

02ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

**உடனடியாக...**

- மண் சரிவு ஏற்படும் இடங்களை அடையாளப்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
- மலையக மக்களின் வீடு, காணி தேவையை பூர்த்தி செய்ய மலையகத்திற்கென சுதந்திர காணி ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.
- நாட்டில் காணி இல்லாதோருக்கு காணி வழங்கும் போது கடைப்பிடிக்கும் காணிக் கொள்கையை மலையகத்திலும் கடைப்பிடித்தல் வேண்டும். (ஆடு, மாடு, கோழி வளர்ப்பதற்கும், மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவதற்கும், பெருந் தோட்டத் தொழிலில் தொடர்ந்து நிலைத் திருப்பதற்கும் தேவையான அளவு காணி வழங்கப்படுதல் வேண்டும்).

**அவசரமாக...**

- இழப்புகளைச் சந்தித்து வெறுமையாய் நிற்கும் மக்களுக்கு வாராந்தம் உதவி தொகை கொடுத்தல் வேண்டும்.
- உயிர், உடமை இழந்த மக்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மீரியபெத்த மக்களுக்கு மாதிரி வீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட வேண்டும். இது தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவும் வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடு களிலிருந்து கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்று மக்களுக்கு தெரியப் படுத்தப்பட வேண்டும்.

மண் விழுங்கிய மக்களின் உரிமைக்கான எமது போராட்டமே அஞ்சலி ஆகும்!

---

**மீண்டும் தோல்வியை.....**

02ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

தடவை இந்தியா கடுப்பின் உச்சியில் இருந்ததினால் இந்த சந்திப்புக்கள் இடம்பெறவில்லை.

சார்க் உறுப்பு நாடுகள் தொடர்பாக இந்தியா பெரியண்ணன் பாணியில் நடக்க முற்படுகின்றது என்ற அதிருப்தி அங்கத்துவ நாடுகளுக்கு உண்டு சிறிய நாடுகள் அதிருப்தியை தெரிவிப்பதில்லை. ஆனால் பாகிஸ்தான் தொடர்ச்சியாக தெரிவிப்பதுண்டு இந்தியாவும் தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக நினைப்பதால் சிறிய நாடுகள் பணிந்து போக வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. அந்த எதிர்பார்ப்பில் தான் சார்க் அமைப்பு வலுவானதாக வளர்வதை விரும்புவதில்லை. வலுவானதாக வளர்ந்தால் அமைப்பு பொறிமுறைக்கு தான் கட்டுப்படும் என அது கருதுகின்றது.

உலகில் ஐரோப்பிய ஒன்றியம், ஆசியா ஆபிரிக்க ஒன்றியம், ஒபெக்நாடுகள் என பல பிராந்திய அமைப்புக்கள் வலுவாக உள்ளன ஆனால் சார்க் அமைப்பு மட்டும் மிகவும் பலவீனமான பிராந்திய அமைப்பாக உள்ளது. சார்க் அமைப்பினை பலப்படுத்த விரும்பாத இந்தியா ஆசியா அமைப்பில் சேருவதற்கு முயற்சிக்கின்ற விசித்திரத்தையும் காண்கின்றோம்.

சார்க் அமைப்பில் இந்தியாவின் செல்வாக்கும் வரை அது தோல்வியடைந்த பிராந்திய அமைப்பாகவே இருக்கும்.

---

**தமிழ்த்தேசம்.....**

13ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

**தேசிய விடுதலைப்போராட்டம் கிராமீய உழைப்பாளர்களை தமது நலன்களுக்கு பயன்படுத்தியதே தவிர அவர்களது நலன்களை பேணுவதற்கு பெரியளவிற்கு உதவவில்லை என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது. அது பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

இது தமது சொந்த இருப்பை பாதுகாப்பதற்காக தமிழ்த்தேசிய எதிர்ப்பு நிகழ்ச்சி நிரல்களிற்குள் சென்றவர்கள் கட்டவிழ்த்துவிடுகின்ற கதை. இந்த வாதம் தொடர்பாக இரண்டு விடயங்களை நாம் பார்க்க வேண்டும் ஒன்று தேசிய விடுதலைப் போராட்டம் கிராமீய உழைப்பாளர்களின் அசைவியக்கத்தில் பல மாற்றங்கள் கொண்டு வந்திருக்கின்றது. அவர்களின் வாழ்வியல் முறைகளில்,பண்பாட்டில் பொருளாதாரத்தில் எல்லாம் மாற்றங்களை கொண்டுவந்திருக்கின்றது. இவற்றை எவரும் மறுக்கமுடியாது. 60களிலும் 70களிலும் இருந்த நிலையில் கிராமிய உழைப்பாளர்கள் இன்று இல்லை. முன்னர் போல் அவர்கள் இருட்டறைக்குள் வாழவில்லை.வெளிச்சத்தில் வாழ்கின்றனர். தேசியவிடுதலைப்போராட்டம் பலவெளிச்சங்களை அவர்கள் மீது பாய்ச்சியுள்ளது.

இரண்டாவது தேசிய இன ஒடுக்கு முறை என்பது வெளியில் இருந்து இனம் முறைமைக்கும் வருகின்ற ஒடுக்கு முறையாகும். இதனால் அவ் இனத்தில் வாழ்கின்ற அனைத்து தரப்பினரும் ஒடுக்குமுறைக்குள்ளாகின்றனர். இதனால் அப்போராட்டத்தில் பங்கு பற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைவருக்கும் உண்டு.

கிராமீய உழைப்பாளர்களின் புதல்வர்கள் அந்த வரலாற்றுக் கடமையை தங்களால் முடிந்த வரை ஆற்றியிருக்கின்றார்கள். இனிமேலும் ஆற்றுவார்கள்.

நான் முன்னர் கூறியது போல இவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளில் பல தேசிய இன முரண்பாட்டுடன் தொடர்புடயவை. தமிழ்த்தேசம் விடுதலையடைகின்ற போது இவர்களும் விடுதலையடைவதற்கான வெளிகள் திறக்கப்படும்.

ஆனால் தேசிய சக்திகள் இந்த மக்களோடு நெருங்கி உறவாடவேண்டும். அவர்களின் இன்பதுன்பங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்த மக்களிடம் உள்ளது. தேசிய இயக்கம் வெகுஜனத்தன்மை பெறும்போது இது தானாகவே சாத்தியப்படும் இதுவரை காலத் தேசிய இயக்கத்தின் மிகப்பெரிய குறைபாடு அது போதியளவு வெகுஜனத் தன்மையை பெறாமையே. கருத்து ரீதியாக வெகுஜனத்தன்மை பெற்றிருக்கின்றது என்பதை நான் மறுக்கவில்லை இது போதுமானதல்ல அமைப்பு ரீதியாகவும் வெகுஜனத்தன்மை பெறவேண்டும்.

**சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் இணைந்து செயற்படுகின்றீர்கள். அவர்கள் தேசிய இனப்பிரச்சினையை எப்படி பார்க்கின்றார்கள்? எங்களது விவகாரம் தொடர்பாக தனியான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றார்களா?**

எங்களுடன் இணைந்து செயற்படுபவர்கள் அரசியல் ரீதியாக முதிர்ச்சி அடைந்தவர்கள். பன்மைத்துவ பண்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதையும், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, வடகிழக்கு தமிழ் மக்களின் தாயகம்" என்பதையும் ஏற்றுக் கொள்கின்றார்கள் போரின் போது இடம்பெற்ற போர் என்ற பெயரில் இன அழிப்பு தொடர்பான கவலை அவர்களுக்கும் உண்டு, தமிழ் மக்கள் விடுதலை அடையாமல் தென்னிலங்கை உழைக்கும் மக்கள் விடுதலை அடையப்போவதில்லை என்பதிலும் உறுதியாக உள்ளனர். தேசிய இன விவகாரம் தொடர்பாக தனியான வேலைத்திட்டங்களை நகர்த்தாமல் தமது வேலைத்திட்டத்துடன் எமது விவகாரத்தையும் இணைத்துக்கொள்கின்றார்கள். அவர்கள் பணியாற்றும் சமூக அமைப்புக்கள் மூலம் தேசிய இன விவகாரம் தொடர்பான கருத்துக்கள் சாதாரண கிராமீய மக்கள் மத்தியில் செல்கின்றன.அவர்கள் தென்னிலங்கையில் நடாத்திய போராட்டங்களில் நாமும் அமைப்பு ரீதியாக கலந்து கொண்டிருக்கின்றோம்.

**தென்னிலங்கை முற்போக்கு ஜனநாயக சக்திகள் ஆட்சி மாற்றத்தில் அக்கறை குவிப்பது போல தெரிகின்றது? இந்த வெறும் ஆட்சி மாற்றம் தமிழ் மக்களுக்கு பெரிதளவு உதவப்போவதில்லையே?**

ஆட்சிமாற்றம் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை என்பது உண்மைதான். ஆனால் தென்னிலங்கை முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு சிங்கள அரசியலை ஜனநாயகப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. குடும்ப ஆட்சியையும் இராணுவ நிர்வாகத்தையும் அகற்ற வேண்டியதேவை இருக்கின்றது. சட்டத்தின் ஆட்சியையும் நீதித்துறையின் சுதந்திரத்தையும் கொண்டுவரவேண்டிய தேவை இருக்கிறது. ஆட்சி மாற்றத்தை அவர்கள் விரும்பக்கூடும். ஆனால் எந்தக் கட்டத்திலும் எங்களுடன் தொடர்புடைய சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் தேசிய இன விவகாரம் தொடர்பான தமது கொள்கை நிலைப்பாட்டை கைவிடுவார்கள் என நான் நினைக்கவில்லை.

**ஜனாதிபதி தேர்தலை எப்படிப் பார்க்கின்றீர்கள்? ஆட்சி மாற்றம் வருமா? அது தமிழர்களுக்கு பயனுடையதாக இருக்குமா?**

ஜனாதிபதி தேர்தல் சிங்கள தேசம் தனது தலைவர் யார் என்பதை தீர்மானிப்பதற்காக நடைபெறும் தேர்தல் இந்த தேர்தலில் தமிழ் மக்கள் பங்கு பற்றுவதற்கான அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை. தென்னிலங்கையில் கடும் போட்டி நிலவுகின்றது என்பது உண்மைதான். ஆனாலும் எதிரணி தற்காப்பு யுத்தத்திலேயே தொடர்ந்தும் இருப்பதனால் மகிந்தரின் பிரச்சாரமே பலமான நிலையில் உள்ளது. இனிவரும் திட்டங்களில் மாற்றங்கள் வரலாம். ஆட்சி மாற்றம் இடம்பெற்றாலும் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. ஆட்சி மாற்றம் வந்தாலும் சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்படப் போவதில்லை. விகாரைகளோ, இராணுவ நினைவுத்தூபிகளோ அகற்றப்படபோவதில்லை. அரசியல் தீர்வும் கிடைக்கப் போவதில்லை.


எதிரணியை பகிரங்கமாக ஆதரிப்பதற்கே கூட்டமைப்பு திணறுகின்றது கோரிக்கை வைப்பது பற்றி நினைத்தே பார்க்க முடியாது.

**தமிழ் மக்கள் இந்த தேர்தல் தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என கருதுகின்றீர்கள்?**

தமிழ் மக்கள் இந்த தேர்தலை புறக்கணிக்க வேண்டும் அல்லது தமிழ் மக்கள் சிங்கள அரசுடன் இல்லை என்பதை வெளிப்படுத்து வதற்கு தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும்.

தற்போதைக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தேர்தல் தொடர்பாக உழறிக் கொட்டாமல் இருந்தால் அதுவே தமிழ் அரசியலுக்கு செய்கின்ற பெருதவியாக இருக்கும்.


லண்டனில்


தமிழ்நாட்டில்

# பல நாடுகளில் மாவீரர் நாள் – 2014


யாழ்.பல்கலைக்கழகத்தில்


கனடாவில்




## யாழ்.பொம்மை வெளி கிராம மக்களின் ஆர்ப்பாட்டம்


ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 113 வது பிறந்த தினம்



மீரியபெத்தையில் உயிரிழந்தவர்களுக்கு
30 ஆம் நாள் சுடர் அஞ்சலி

இவ்விதழ் இல.43, 3 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச்சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி நீராவியடி) இல் 01.12.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.